# உலகத்தமிழ்

காலாண்டிதழ் ISSN 2581-9712

மலர் : 5 திருவள்ளுவராண்டு 2052

இதழ் : 15 பிலவ, மார்கழி



வெளியீடு

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# ஆலோசனை மற்றும் ஆசிரியர் குழு


## தலைமை ஆசிரியர்

முனைவர் **தா. லலிதா**
இயக்குநர்
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை.
தொலைபேசி : 0452 2530766
நிகரி : 0452 2530799
மின்னஞ்சல் : director@utsmdu.org

## ஆசிரியர் குழு (இந்தியா)

முனைவர் **வி. திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு.
மின்னஞ்சல் : tamilunivc@gmail.com

திரு **செ. சரவணன் இ.ஆ.ப**
இயக்குநர் (பொ.),
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு.
மின்னஞ்சல் : iits@tn.nic.in

முனைவர் **கோவி. இராசகோபால்**
துறைத்தலைவர்,
நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007.
மின்னஞ்சல் : grajagopaldu@gmail.com

முனைவர் **அரங்க. பாரி**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், தமிழ்நாடு.
மின்னஞ்சல் : drramarajapandian@gmail.com

முனைவர் **வை. இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
மின்னஞ்சல் : drramarajapandian@gmail.com

## ஆசிரியர் குழு (அயலகம்)

திரு **ம. ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக்கல்வி மையத்தின் ஆசிரியர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
'தடாகம்' தமிழ் இலக்கிய ஆலோசகர்,
ஆசுதிரேலியா.
மின்னஞ்சல் : jeyaramiyer@yahoo.com.au

முனைவர் **சி. இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு, தற்காலமொழிகள்துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
மின்னஞ்சல் : s.ilangkumaran@gmail.com, ilangkumaran@fbk.upsi.edu.my

முனைவர் **இர. பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச் சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
மின்னஞ்சல் : prabu0111@gmail.com

திரு **வி. ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப் பகுதியின் பொறுப்பாளர், ஆலோசகர்,
நகரசபையின் புவியியல் சார்ந்த தொழில்நுட்பப் பிரிவின் பொறுப்பாளர்,
டென்மார்க்.
மின்னஞ்சல் : jeevakumaran5@gmail.com

முனைவர் **ஆ. ரா. சிவகுமாரன்**
இணைப் பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்,
சிங்கப்பூர்.
மின்னஞ்சல் : sivakumaran.r@nie.edu.sg

ISSN : 2581-9712

# உலகத்தமிழ்

15

(நவம்பர், திசம்பர், சனவரி)

காலாண்டு மின்னிதழ்

## உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

ISSN : 2581-9712

மலர்: 5 இதழ்: 15

திருவள்ளுவராண்டு 2052/ பிலவ, மார்கழி

ஆசிரியர் & வெளியிடுபவர்:

முனைவர் தா. லலிதா

இயக்குநர்

உலகத் தமிழ்ச் சங்கம்,

அரசு சட்டக் கல்லூரி அருகில்,

மருத்துவர் தங்கராஜ் சாலை,

மதுரை - 625020.

தமிழ்நாடு, இந்தியா.

தொலைபேசி: 0452- 2530799.

மின்னஞ்சல்:

utsmdu2@gmail.com

Editor & Publisher

**Dr. T. Lalithaa**

Director

World Tamil Sangam,

Near, Govt Law College

Dr. Thangaraj Salai,

Madurai - 625020.

Tamilnadu, India.

Telphone: 0452- 2530799

E.Mail: utsmdu2@gmail.com

**Web : www.ulagatamil.in**

வரவேற்கப்படுகின்றன...

உலக நாடுகளில் இயங்கி வரும் அனைத்துத் தமிழ்ச்சங்கங்கள், தமிழ் அமைப்புகள், நிறுவனங்கள், தமிழ் ஆராய்ச்சி மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஆகியவை பற்றிய விவரங்களைத் தொகுத்தல், உலகமெங்கும் இயங்கிவரும் இவ்வமைப்புகளை ஒரு குடையின்கீழ் பதிவு செய்து ஒருங்கிணைத்துக் கூட்டமைப்பு உருவாக்குதல் என்பது உலகத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கமாகும். மேலும், தமிழறிஞர்கள், கலைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றைப் பரப்புதல், தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் அயல் நாடுகளுக்கு ஆய்வாளர்களை அனுப்பித் தமிழர் நிலையினை ஆய்தல், அந்நாட்டு ஆய்வாளர்களைத் தமிழகத்திற்கு வரவழைத்துக் கருத்துப் பரிமாறுதல், பிறநாட்டுத் தமிழர் களஞ்சியம் தயாரித்தல், தமிழ் மொழியிலுள்ள சங்க கால நூல்கள், இலக்கியங்கள் முதலியவற்றை அயல்நாடுகளில் உள்ள தமிழர்கள் அறிந்து தெளிய வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மட்டுமல்லாமல் தமிழாராய்ச்சியை வளப்படுத்தும் நிலையில் உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி மையம் அமைக்க நடவடிக்கைகள் எடுத்தல், உலக நாடுகளில் தமிழர்கள் வாழும் இரு நாடுகளைத் தேர்வு செய்து ஒவ்வோர் ஆண்டும் ஆய்வரங்கங்கள், கருத்தரங்கங்கள் நடத்துதல், கலைநுட்பம் வாய்ந்த சிற்பங்கள், நாட்டுப்புறப்பாடல்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் கண்டு, பாராட்ட வாய்ப்பு ஏற்படுத்துதல் இன்றைய தேவையாகும். தமிழ்க் கலை, பண்பாட்டை காக்கும் பொருட்டு உலக நாடுகளின் அருங்காட்சியகங்களில் இடம் பெற்றுள்ள தமிழ்த் தொடர்பான ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்துச்சுவடிகள், அரிய கலைப் பொருட்கள் முதலிய தரவுகளைத் திரட்டுதல் போன்ற பணிகளைச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த மின்னிதழினை மேம்படுத்திடத் தகுந்த ஆலோசனைகள், தமிழ் மற்றும் தமிழர் தொடர்புடைய செய்திகள், தமிழாய்வுக் கட்டுரைகள் போன்றவை வரவேற்கப்படுகின்றன.

முனைவர் தா.லலிதா
ஆசிரியர்

ISSN : 2581-9712

## மலரின் உள்ளே.....


| வ.எண் | தலைப்பு | ஆசிரியர்கள் | பக் |
|---|---|---|---|
| 1. | பாரதிதாசனின் தேசியச் சிந்தனைகளும் வெளிப்பாட்டு முறைகளும் | முனைவர் செ.இராஜேஸ்வரி | 04-11 |
| 2. | நற்றிணை 57– ஒரு மீள்பார்வை | ச.கண்மணி கணேசன் | 12-14 |
| 3. | தமிழகம் – அயலகம் தமிழ் பக்தி இலக்கியங்கள் – ஒரு பார்வை | மருத்துவர் பொன்.மாணிக்கவல்லி | 15-21 |
| 4. | இலக்கியங்களில் பாணர்களின் வாழ்வியல் நிலை | முனைவர் இரா. பிரித்தா | 22-28 |
| 5. | கோதை காட்டிய குறள்நெறி | முனைவர் ந.செ.கி.சங்கீத்ராதா | 29-33 |
| 6. | சங்க இலக்கியங்களில் அணிகலன்கள் | முனைவர் க.உமாமகேஸ்வரி | 34-36 |
| 7 | சிலப்பதிகாரத்தில் நீர்நிலைகள் | முனைவர் ஸ்ரீ. ஸ்ரீஜெயந்தி | 37-47 |
| 8. | திருஞானசம்பந்தரும் சைவமும் | முனைவர் து.சவிதா | 48-54 |
| 9. | நீர்மேலாண்மையில் தமிழர்களின் அறிவியல் நுட்பம் | முனைவர் ஜெ.கவிதா | 55-61 |
| 10 | பதினெண்மேற்கணக்கில் பெண் எனும் சொல் | முனைவர் பீ. பெரியசாமி | 62-67 |
| 11 | மதிப்பியல் திறனாய்வு அணுகுமுறை | முனைவர் ந.தமிழ்மொழி | 68-75 |
| 12 | மாணிக்கவாசகரின் உவமைத்திறன் | முனைவர் வா.வெ.கோவிந்தம்மாள் | 76-80 |
| 13 | வேள்பாரி புதினத்தில் சுற்றுச்சூழலியல் மரபறிவு | முனைவர் ச.அருள்செல்வி | 81-87 |

ISSN : 2581-9712



## பாரதிதாசனின் தேசியச் சிந்தனைகளும் வெளிப்பாட்டு முறைகளும்

முனைவர் செ.இராஜேஸ்வரி
மதுரை.

"தேசியக் கவிஞர்" எனப் பாராட்டப்பெறும் மகாகவி பாரதியாரின் சீடனாகத் தன்னை வெளிப்படுத்திய பாரதிதாசனிடமும் தேசியச் சிந்தனை காணப்படுகிறது. இவர் கற்ற பிரெஞ்சுக் கல்வியும் காந்தியத் தாக்கமும் சமுதாயக் கண்ணோட்டத்துடன் பாடிய பாரதியின் நட்பும் பாரதிதாசனிடம் இன்றியமையாத தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. ஒரு பிராந்தியக் கவிஞராக இனங்காணப் பெற்றாலும் கூட அவருடைய தேசியச் சிந்தனை வியக்கத் தக்கதாகவும் அதனை அவர் இளைஞருக்குக் குறிப்பாக மாணவருக்கு மற்றும் சிறுவருக்கு என்று வெளிப்படுத்திய முறைகள் குறிப்பிடத்தக்கவையாகவும் விளங்குவதைக் காண்கிறோம். இவ்ஆய்வுரை உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையில் ஆக்கப்பெற்றுள்ளது. முற்பகுதி உள்ளடக்கக் கருத்துகளைப் பகுத்தும் இரண்டாம் பகுதி இக்கருத்துகளைக் கவிஞர் வெளிப்படுத்தும் முறைகளையும் எடுத்துரைக்கிறது.

பாரதிதாசனின் தேசியச் சிந்தனையைப் பின்வரும் நான்கு கூறுகளாகப் பகுத்துக் காணலாம்.

### நாட்டுப்பற்றை வளர்ப்பது

விடுதலை வேட்கையைத் தூண்டுதல்

– கதராடைப் பற்று

– ராட்டினம் சுற்றுதல்

– இளைஞரிடையே ஒழுக்கத்தை வலியுறுத்துதல்

### இன, மத வேறுபாடின்றி இருத்தல்

மத நல்லிணக்கத்தைச் சிறுவரிடம் வளர்த்தல்

காந்தியடிகளின் மீது பாவேந்தர் கொண்டுள்ள பற்றினை இப்பாடல்களில் தெளிவாகக் காணலாம்.

பாவேந்தர் தன்னுடைய தேசியச் சிந்தனையைச் சிறுவரிடம் விதைக்கவே பெரிதும் முயன்றிருக்கிறார். அதற்கான முயற்சியில் அவர் பல்வேறு உத்தி முறைகளைக் கையாள்கிறார்.

அறிவுரை கூறும்முறை

– மாணவர்க்குத் தேசிய உபாத்யாயர் கூறுவது

– பாரதத்தாயின் அறிவுரை

உரையாடல் முறை

– காட்டுக்கோழி – வீட்டுக்கோழி

– வெள்ளை நாய் – கருப்பு நாய்

ISSN : 2581-9712

**விளையாட்டு**

– நாலுகட்டம்

– நாட்டான் – கோட்டான்

**ஓடிப்பிடித்து விளையாடுதல்**

– காட்டுப்புறா – வீட்டுப்புறா

**நாடகம்**

– "நியாயாதிபதி" (உரையாடலும் சிறையிடலும்)

**விடுகவி**

காட்சிப்படுத்தல்

– பாஞ்சாலி துயிலுரிதல்

இவை தவிரச் சீனப்போரைப் பற்றிய பாடல்களையும் இவர் பாடியுள்ளார். நாட்டுப்பற்றை வலுவாக ஊட்டும் பாடல்களாகும்.

நாட்டுப்பற்றை வளர்க்கும் சிந்தனை இந்தியாவைப் பாரததேவியாக உருவகிக்கும் தன்மையைப் பாரதிதாசனிடமும் காணலாம். பாரததேவி வாழ்த்துப் பாடலைச் சிறுவர் சிறுமியரின் தேசிய இசைப்பாட்டாகவே அவர் பாடியுள்ளார். "சக்தி பாட்டு" என்ற தலைப்பில்,

"பாரத நாட்டுக்குத் தாயடி நீ – உன்
பாரதத்தை நம்பிய சேயடி யான்"

எனத்தொடங்கி

"எம் தொழும்பு போக்கிடு சுந்தரியே"

என்று முடித்துள்ளார்.

"முப்பத்து முக்கோடி
மொய்ம்புடைய மைந்தர்களை
இப்புவியில் பெற்ற
எழில் பாரதத்தாய்"

என்ற அடிகள் பாரதியாரின் சிந்தனையும் பாரதிதாசனின் சிந்தனையும் ஒத்திருப்பதை நமக்கு உணர்த்துகின்றன. தேசியத் தாலாட்டுகள் மூலமாகவும் தேசியச் சிந்தனையைக் கவிஞர் வளர்க்கிறார்.

**கதராடைப் பற்றை வளர்த்தல்**

விடுதலை இயக்கம் வலியுறுத்திய சுதேசிப்பற்று பாரதிதாசன் கவிதைகளில் கருப்பொருளாய் அமைந்துள்ளது. "சுதந்திரதேவியும் கதரும்", "தேசத்தாயின் பிரதான வேலை" என்ற கவிதைகள் கதராடைப் பற்றை அடிமை இந்தியாவில் வாழும் மக்களின் மனத்தில் தூண்டுவனவாக இயற்றப்பட்டுள்ளன. "சுதந்திரத் தேவியும் கதரும்" என்ற பாடலைக் காதற் சுவையுடன் பாவேந்தர் இயற்றியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"கன்னி யுரைத்தது கேட்டிடுவீர் – உள்ளக்
காதல் இருப்பது மெய் எனிலோ – அட
சின்ன இராட்டின நூலிழைப்பாய் – அதில்
தீட்டின்றி நெய்த உடை உடுப்பாய் – வரும்
அந்நியர் நூலைத் தலைக் கவிழ்ப்பாய் – அதற்கு
அப்புறம் என்னைக் கவர்ந்திடுவாய் – என்று
கன்னியுரைத்து மறைந்துவிட்டாள் – அவள்
கட்டளை தன்னை மறப்பதுண்டா"

என்ற பாடல் அடிகள் சுட்டுகின்ற சுதந்திரதேவி கதர் உடுத்தும் மனிதனைத்தான் விரும்புவாள் என்ற கருத்து, ஆங்கில மோகத்தையும் ஆங்கிலேயரிடம் அடிமைச்சுகம் காண்பதையும் அறவே நீக்கிவிட வேண்டும் என்பதை நுட்பமாக வலியுறுத்துகின்றது. சுதந்திரப் பணியில் பிரதான வேலை கை ராட்டினம் சுற்றுவதே என்று பாவேந்தரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"கதரணிவீர் என்றுரைத்த
காந்தியண்ணல் ஆணை – எழிற்
காந்தியண்ணல் ஆணை – அதைக்
கருதிடுவீர் அது நமக்கு
நாரதனார் வீணை"

ISSN : 2581-9712

என்ற பாடலை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

## இராட்டினம் சுற்றுதல்

பாவேந்தர் இராட்டினத்தில் நூலிழைந்து நெய்து உடுத்த வேண்டும். அந்நியர் நூலைத் தொலைக்க வேண்டும். அதன் பின்புதான் சுதந்திரம் பெற முடியும் என்று ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

ராட்டினத்தினை ஒரு பெண்ணாக உருவகித்து "தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே" என்ற மெட்டில் சிருங்காராச் சுவையில்,

"கூட்டமுதம் நானுனக்கு
ராட்டினப் பெண்ணே – அடி
கொஞ்சுங்கிளி நீ எனக்கு
ராட்டினப் பெண்ணே"

எனத் தொடங்கும் பாடலைப் பாடியுள்ளார். "கதர் ராட்டினப் பாட்டு" என்று 1930இல் பாவேந்தர் ஒரு வெண்பா பாடியுள்ளார். "காந்தியடிகளும் கதரும்" என்ற பாடலில் வீரச்சுவை நிரம்ப,

"இன்னல் செய்தார்க்கும் இடம் செய்திடாமல்
இராட்டினம் சுற்றென்று சொல்லும் – எங்கள்
ஏதமில் காந்தியடிகள் அறச்செயல்
வெல்லும் – வெல்லும் – வெல்லும்"

என்று பாடியிருக்கிறார்.

"பால் நுரை போலப் பருத்தியுண்டு, சொந்தப்
பாரதத் தேசத்தில் எங்கும் – எனில்
பண்டை முதல் இழை நூற்பதிலே யாம்
சிங்கம் – சிங்கம் – சிங்கம்"

என்ற பாடல் வரிகளும் பாரததேசத்தின் விடுதலை காந்தியடிகள், கதர், சுதேசி இயக்கம் போன்றவற்றோடு தொடர்புடையது என்ற பாரதிதாசனின் நம்பிக்கையை நமக்குப் புலப்படுத்துகிறது.

## ஒழுக்கத்தை வலியுறுத்தல்

"ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்ற கவிதையில் நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல் போன்ற பண்புகளை வலியுறுத்திய பாரதிதாசன் இளைஞர்கள் சுதந்திரப் போராட்டக் காலத்தில் சுதந்திர வேட்கையின்றி ஆங்கிலேயர் தூண்டிவிட்ட வழியில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகிக் கிடப்பதனை ஒரு கவிதையாக வடித்திருக்கிறார்.

"மேற்குத் திசையின் சா ராயம் – உன்
வீர மைந்தர்க்கு அதில் நேயம்"
"வெறித்துக் குடிக்கிறான் கள்ளை – அடி
விழுந்து முறைக்கிறான் முள்ளை"
"நாசம் புரிந்ததே கஞ்சா – கொடி
நாட்ட உனக்கிரும்பு நெஞ்சா"
"நீட்டிப் பிடித்தனர் சுருட்டு – நாட்டில்
நீசத்தனம் வளர்க்கும் பொருட்டு"
"சாவுக்கே பிடிப்பார் பீடி – இந்தத்
தறுதலை பாரதக் கோடி"

இளைய பாரதத்தைப் பற்றிய அவரது கவலையை இந்தப் பாடல் வரிகள் மூலம் நாம் அறியலாம்.

## விடுதலை வேட்கையைத் தூண்டுதல்

விடுதலை வேட்கையை இளைஞரிடம் தூண்டுவதற்குப் பாரதிதாசன் தன்னுடைய பங்காக அனைவரும் படித்து இன்புறத்தக்க வகையிலும் சிந்திக்கத்தக்க வகையிலும் பல கவிதைகளை இயற்றியுள்ளார்.

"விடுதலைக்குச் செல்லும் கப்பல்" என்ற தலைப்பிட்ட பாரதத்தைக் கப்பலாகக் கொண்டு சேருமிடம் சுதந்திரப் பொன்னகரமாகக் கற்பனை செய்து பாடப்பட்டுள்ளது.

பாரதம் – கப்பல், இமயச் சிகரம் – கொடிக்கம்பம், மேகம் – கொடிச்சீலை, உறுதி – பாய், பேதம் – காற்று, பாரதத்தாய் –

ISSN : 2581-9712

கப்பலின் நிறை, அடிமை – கடல், வறுமை – சுறாமீன், சிறை – திமிங்கலம், அயலார் சரக்கு – மலை, தீண்டாமை – பிசாகத்திரள், சுதந்திரத் தேவர் – சோதனைச்சாவடி, இலக்கு – சுதந்திரப் பொன்னகர் என்ற உருவகங்கள் பாவேந்தரின் தேசீயப்பற்றையும் கவித்துவச் சிறப்பையும் நன்கு உணர்த்துகின்றன.

"பாரதத் திருநாடு பழம்பெரும் நாடாம்
என்னைப் பிறப்பித்த எழில் நாடுதன்னை
யாத்திரைக் கப்பலாய்ச் செய்ய வந்தேனே..."

என்று பாடிய பாவேந்தர் இவண் தன் தாய்மொழியாம் தமிழையும் மறக்காமல்

"தாய்நாடு மேலென்று வானிற் செதுக்கு
தமிழென்ற முரசத்தை மண்ணில் முழக்கு..."

என்று பாடி முடித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விடுதலைக்குப் போராடும் வீரர்களை "தன்னாட்டின் குலதெய்வமாகப்" போற்றும் நிலையையும் பாரதிதாசனின் பாடல்களில் காணலாம். சுதந்திரத்தை உயிரின் இயற்கையாகவே கவிஞர் கருதியிருக்கிறார்.

**மதநல்லிணக்கத்தை வலியுறுத்தல்**

மதக் காழ்ப்புணர்ச்சி பாரத நாடெங்கும் பரந்து கிடக்கும் இவ்வேளையில் பாரதிதாசன் மத நல்லிணக்கத்தை அன்றே பாடியிருப்பது இன்று சிந்திப்பதற்கு உரியதாகும். "பிள்ளைப்பாட்டு" என்ற தலைப்பில், இந்து, கத்தோலிக்க மற்றும் துருக்கச் சமயத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் நிலவைத் தம்முடையதென்று வாதிடுவதாகவும், சுயமரியாதைச் சிறுவனோ யாவரும் மனிதர் என்பது தெரிந்தால் "நிலவும் பொதுவே என்பது தெரியும். அறிந்து வாழ்வீர் அன்பர் கூட்டம்" என்று அவ்விவாதத்தை முடித்து வைக்கிறான்.

**துருக்கச் சிறுவன்**

"மூன்றாம் பிறையாய்த் தோன்றுங் காலை
என் கூட்டத்தார் உன்னைத் தொழுவார்
ஆதலால் அழகு நிலாவே
துலுக்கருக்குச் சொந்தப் பொருள் நீ."

**கத்தோலிக்கச் சிறுவர்**

"கன்னி மரியாள் உன்மேல் நிற்பாள்
ஆதலால் அழகு நிலாவே
கத்தோலிக்கர் சொத்து நீதான்"

**இந்துச் சிறுவன்**

"எங்கள் சிவனார் முடியில் இருப்பாய்
ஆதலால் அழகு நிலாவே
இந்து மதத்தார் சொந்தப் பொருள் நீ"

என்று நிலவை உரிமை கொண்டாடுவது அக்காலகட்டத்தில் நிலவிய மதபேதத்தை உணர்த்துகின்றது.

## II தேசீயச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் முறைகள்

**அறிவுரை கூறல்**

பாரதிதாசன் தம்முடைய தேசியச் சிந்தனையைச் சிறுவர்களிடம் பெரிதும் வலியுறுத்துவதை அவர் பாடல்களில் காணலாம். மாணவர்களுக்குத் தேசிய உபாத்தியாயர் கூறும் கருத்துகளில் "பத்து நாள் போதும் இந்தப் பாரதத்தை நன்றாக" என்று நம்பிக்கை ஊட்டி,

"உங்கள் தகப்பன்மார் இதனை உணராமல்
மங்க உரைத்தால் மறுத்துரைப்பீர் மாணவரே
என்று அறிவுறுத்துகிறார்.
வெந்துயரைத் தீருங்கள் வெற்றிபெறப் பாரதத்தை
மீட்டுக் கொடுங்கள் எனத் தினமும் தந்தையரைக்

கேட்டுக் கொள்ளுங்கள் இனி''
என்று மாணவச் சமுதாயத்திடம் மீட்புப்பணியின் முக்கியத்துவத்தை விளக்கியுரைக்கிறார். இவ்வாறாகப் பாரதத்தாய் மாணவர்க்குக் கூறுவதாக மற்றொரு பாடலைக் கவிஞர் இயற்றியுள்ளார். இப்பாடலில், விதை நெல்லாக விளங்கும் மாணவர்களைப் பார்த்து,

''புத்தறிவும் தெய்வப் பொதுநோக்கும் வாடாது
மொய்த்த இளம்பருவம் முளைகருகிப் போகாதீர்''

என வேண்டுகோள் விடுக்கிறார். மேலும் ஆங்கிலக் கல்வியைக் கடுமையாகச் சாடுகிறார். வெள்ளையரின் செல்வக் குவிப்பிற்குத்தான் ஆங்கிலக் கல்வி பயன்படுகின்றது என்ற பாரதிதாசனின் சிந்தனை இன்றைய உலகமயமாக்கல் சூழலிலும் பொருந்தி வருவதை உணரலாம்.

''அயலார் வெறும்பாஷை அறிவதால் உங்கள் சாண்
வயிறு நிறையும் என்ற வார்த்தையில் தான் உண்மை உண்டோ?
முப்பது கோடிப் பெயர்கள் முழுவதும் பிறர்பாடம்
ஒப்பித்தாலன்றி உணவின்றிச் சாவீரோ''

என்றவர் தாய்மொழியால் தமிழன் அடையாளங் காணப்பட வேண்டும் என்பதையும்

''செந்தமிழால் கம்பன் சிறந்தானா நேற்றிங்கு
வந்தவரின் ஆங்கிலத்தால் வயிறுவளர்த்தானா''

என்ற அடிகளில் சுட்டிக்காட்டுகின்றார்.

**உரையாடல் உத்தி**

கவிஞர் உரையாடல் முறையில் சிறுவர்களுக்குப் புரியும் வகையில் வளர்ப்புப் பிராணிகளான கோழி, நாய், புறா போன்றவற்றைப் பாத்திரங்களாகக் கொண்டு விடுதலையின் இன்றியமையாமையை அறிவுறுத்துகின்றார். காட்டுக்கோழிகள் மூலம் வீட்டில் வளர்க்கப்பட்டுவரும் கோழிகளுக்குச் சுதந்திரத்தின் சுவையூட்டுகின்றார்.

''கம்பு போட்டுக் கழுத்தை அறுக்கும்
வடக்கன் ஆட்சி போன்ற இடக்கு
நம் தாயகத்தில் நாம் கேட்டறியோம்
ஆதலின் பற! நம் தாயகம் பெறவே''

எனக் காட்டுக்கோழி வீட்டுக்கோழியிடம் அறிவுறுத்துகின்றது. நாய்களின் உரையாடலில் வீட்டுநாயை வெள்ளை நாயாகவும் தெருநாயைக் கறுப்பு நாயாகவும் உருவகப்படுத்திச் சுதந்திரம் உயிரின் இயற்கை என்பதனை விளக்குகின்றார்.

**நாய்ப்பாட்டில் வெள்ளைநாய்**

''அன்றென்றைக்கும் பாற்சாதம்
அப்பம் ரொட்டி நவநீதம்
பன்றியைப் போல் வீங்குகின்றேன்
பட்டுமெத்தையில் தூங்குகின்றேன்
இருப்பாய் நீயும் என்னோடே''

என்ற கருப்பு நாயை வேண்டும்போது, கருப்பு நாய் வீட்டு நாயின் கழுத்திலிருக்கும் வடுவைப் பற்றி வினவுகிறது. வீட்டுநாய் கட்டப்பட்டுக் கிடப்பதை,

''அடிமையாய் நீ இருப்பதேன்
கதிதான் கெட்டு நீ நடப்பதா?
கட்டுப்பட்டுக் கிடப்பதா?''

என்று கேட்டு அதன் அடிமைநிலையை அதற்குச் சுட்டிக்காட்டுகின்றது. இவ்வாறாக உரையாடல் பாங்கில் சிறுவர்களுக்கு விடுதலையின் இன்றியமையாமையைக் கவிஞர் சுவைபடக் கதை சொல்லி ஊட்டுகின்றார்.

ISSN : 2581-9712

**விளையாட்டு**

"நாடு பிடிக்கும் விளையாட்டு" என்ற பாடல் நாலு கட்ட விளையாட்டைப் பிரதிபலிக்கின்றது. ஒரு கட்டத்தை வரைந்து அதன் நாலு மூலைகளிலும் நாலு நாட்டார் நிற்க இடம் கேட்டு வந்த கோட்டானோ நடுவில் நின்று அவர்களைப் பார்த்து,

"நாட்டாரே நாட்டாரே நாட்டில் என்ன செய்கின்றீர்" என்று கேட்டுப் பிறகு "கோட்டில் கொஞ்சம் தூங்குங்கள்; குலத் தர்மத்தில் நீங்குங்கள்" என்று அவர்களைத் தன் கடமையிலிருந்து தவறத் தூண்டுகின்றது. இவ்விளையாட்டில் நாட்டார்கள் கவனமாகத் தன்கோட்டிலிருந்து மாற வேண்டும். கோட்டானுக்குத் தன் இடத்தைப் பறிகொடுத்து விடக் கூடாது. பறிகொடுத்தவன் கோட்டானாக நின்று அடுத்த ஆட்டத்தைத் தொடங்க வேண்டும். இவ்விளக்கத்தோடு அமைந்திருக்கும் இவ்விளையாட்டு பாடல் படித்து மகிழவும் சிந்தித்துச் செயல்படவும் ஏற்றதாக அமைந்துள்ளது.

ஓடிப்பிடித்து விளையாடுவதாக அமைந்த பாடலில் காட்டுப் புறாக்களும் வீட்டுப் புறாக்களும் பங்கு பெறுகின்றன. சிறுவர்கள் சமமாகப் பிரிந்து ஒரு பொதுமனிதர் வசம் இருக்க வேண்டும். அவை வீட்டுப் புறாக்கள் மற்றவர்கள் காட்டுப் புறாக்கள், பிறகு இரு பிரிவினரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் பேசுவதாக இக்கவிதை அமைந்துள்ளது. வீட்டுப் புறாக்கள் தங்கள் இரையைத் தாங்கள் தேடிப் பொறுக்க வேண்டியதில்லை என்று கூறவும் காட்டுப்புறாக்கு, "உரிமை தொலைந்ததோ" என்று ஏளனம் செய்து "வந்தால் பிடிக்கலாம் வீட்டுப் புறாக்களே" என்று தங்களைப் பிடிக்க வரும்படி அழைக்கின்றன. பொதுமனிதரைத் தொட்டுவிட்டால் காட்டுப் புறாக்களுக்கு வெற்றி.

**நாடகம்**

"நியாயசபை விளையாட்டு" என்ற கவிதை நாடகப் பாங்கில் சீமானுக்கும் வைத்தியருக்கும் நடக்கும் விளையாட்டு ஒரு காட்சியாகவும், சீமானின் கொழுப்பைக்கேலி செய்த வைத்தியருக்கு நியாயாதிபதி சிறைத் தண்டனை வழங்குவது நிறைவுக் காட்சியாகவும் அமைந்துள்ளது.

உழைப்புச் சிறிதும் இல்லாத சீமானின் கொழுப்புக்கு வைத்தியர் நாட்டுக்காக உழைப்பதே சிறந்த மருந்து என்று மருத்துவ ஆலோசனை வழங்குகிறார். இதனைக் குற்றமாகக் கருதிய சீமான் நியாயச் சபைக்கு அவரை இட்டுச் செல்கிறான்.

**நியாயாதிபதி**

"போட்டேன் உம்மை ஒரு வருடம்
போவீர் சிறைக்குத் தீரும் அடம்"

எனத் தண்டிக்கிறார். நாட்டுக்கு உழைக்காதவரை எள்ளி நகையாடும் பாடலையும் இவர் இயற்றியுள்ளார்.

**விடுகவி**

ஒல்லும் வகையெல்லாம் தேசியத்தைச் சொல்ல விரும்பிய கவிஞர் புதியதோர் இலக்கிய வகையை "விடுகவி" என்ற பெயரில் தோற்றுவித்துள்ளார். விடுகதையைப் போலத் தோற்றமளிக்கும் இவ்விடுகவி கவிதை வழியில் அமைந்த புதிர்.

பாரததேவி, பாரதவாசி, கங்கை, சிந்து, ராட்டினம், மகாத்மா காந்தி உரிமை போன்ற விடைகளைத் தரும் விடுகவிகளை கவிஞர் இயற்றியுள்ளார்.

ISSN : 2581-9712

பாரததேவியைப் பற்றி தேசிய விடுகவி வருமாறு...

“கங்கைநதி தலையில் உண்டு சிவனார் அல்ல
காலடியிற் குமரி உண்டு ராமன் அல்ல
சங்கையற்ற வயதுண்டு கிழவி அல்ல
சாத்திரத்தின் ஊற்றனையார் கலைமாதல்ல
எங்குலத்தைப் பெற்றதுண்டு பிரமன் அல்ல
ஏற்றண்ணும் எண்ணமில்லை இறுமாப்பல்ல
மங்கை என்று பாடிடுவார் புலவரெல்லாம்
மற்றிதனை இன்னதென வாழ்த்துவீரே.”

**காட்சியாக்கம்**

மகாகவியின் பாஞ்சாலி சபதத்தைப் போலவே பாஞ்சாலியைத் துகிலுரியும் காட்சியை அன்னைக்கு ஆடை வளர்க என்ற தலைப்பில் அவலச் சுவை ததும்பப் பஃறொடை வெண்பாவாக இயற்றியுள்ளார்.

“காரிகை என் மானம் உங்கள்
கண்முன் இழப்பதுண்டோ
என்று துடித்தழுதாள்
அன்று அந்தப் பாஞ்சாலி...”

எனப் பாவேந்தர் பாஞ்சாலிக்கு ஏற்பட்ட அவலத்தை,

“எழில் பாரதத்தாயின்
ஆடை பறித்தார்
அதிகாரம் கொண்டவர்கள்
ஓடி அவளின்
உடை மீட்க வேண்டாமோ”

எனப் பாரதத்தின் அவலத்துடன் ஒப்பிட்டுப் பாடுகின்றார்.

“மாயா மலர்க்கண்ணா
வந்து துயர் தீர்த்திடுவாய்...!”
என்று பாரதமாதா வேண்டவும்,
“இதனைச் செவியுற்று
சென்று கண்ணக் காந்தி
“சித்திரஞ்சேர் ஆடை வளர்ந்திடுக”

என்றான். காந்தியடிகளைக் கண்ணனாகக் கருதிப் பாரததேவியின் மானத்தைக் காக்க அறம் வளர்க்க வந்த பெரியோராகவும் பாரதிதாசன் போற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவை மட்டுமின்றிச் சீனப்போர் நடைபெற்ற போதும் இந்திய இளஞ்சிங்கங்களுக்கு,

“இட்டான் எல்லையிற் காலைத்
தொட்டான் துப்பாக்கிக் கோலைச்
சுட்டான் சீனன் தன்னாலே,
கெட்டான் கெட்டான் என்று
கட்டாயம் வீட்டுக்கொரு சிங்கம்
புறப்படட்டும்”

என்று அழைப்பு விடுக்கின்றார்.

மேலும் “சீனனுக்கு இங்கே என்ன விலை. நம் சிங்கப்படை கிழிக்கட்டும் அவன் தோலை” என்று இந்தியப் படைவீரர்களைச் சிறுத்தைக் கூட்டம், வேங்கைப் பட்டாளம், யானைப்படை என்று பலவாறு போற்றி மகிழ்கின்றார்.

**நிறைவுரை**

பாரதிதாசன் தன் தொடக்க காலத்தில் தேசியச் சிந்தனை பொதிந்த கவிதைகளைப் பாடிப் பின்னர் சமூக விடுதலை, பெண்விடுதலை பற்றிய கவிதைகளைப் படைத்தார். அவர் சார்ந்திருந்த திராவிட இயக்கம் அவருடைய தேசியப் பாடல்களை பதிப்புருவில் வெளிவராமல் மறைத்துவிட்டது. இது கண்டனத்துக்குரியது. அவரைத் திராவிடச் சிந்தனையாளராகவே மக்கள் மனத்தில் இவ்வியக்கம் நிலைப்படுத்திவிட்டது. இந்நிலைப்பாடு பாரதிதாசனின் ஆன்மீக, தேசியச் சிந்தனைகளை உலகறியச் செய்யாமல் மறைத்துவிட்டது. பாரதிதாசனின் பல்வேறு பரிணாமங்களை

ISSN : 2581-9712

அறியவும் அவருடைய பரிணாம வளர்ச்சியை உணரவும் 1930களில் அவர் இயற்றிய தேசியப் பாடல்களைப் பற்றி நாமறிய வேண்டியது இன்றியமையாததாகும். பாவேந்தர் பாரதிதாசனின் தேசியச் சிந்தனையை உணர்த்தும் பாடல்கள் எண்ணிக்கையில் சிலவாக இருந்தாலும் இளைஞர்களுக்கு குறிப்பாகச் சிறுவர்களுக்கு இச்சிந்தனையை ஊட்டி வளர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் அக்கறையையும் நமக்கு உணர்த்துவதில் பெருஞ்சிறப்புடையனவாக இருப்பதை அறியலாம் இப்பாடல்களை பள்ளி மாணவர்களின் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

******************************************

ISSN : 2581-9712



# நற்றிணை 57– ஒரு மீள்பார்வை

ச.கண்மணி கணேசன் (ப.நி.),
முன்னாள் முதல்வர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரி, சிவகாசி.

## முன்னுரை

பொதும்பில் கிழாரின் குறிஞ்சித் திணை சார்ந்த நற்றிணை 57ம் பாடல் செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாவும் பொருண்மையில் அமைந்து உள்ளது. அப்பாடலின் உள்ளுறை உவமத்தை முழுமையாகத் தெளிவு படுத்துவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். இது ஒரு விளக்கமுறை ஆய்வாக அமைந்து பாடலின் அழகையும் அறிவியல் சார்ந்த பொருள் நுட்பத்தையும் பாடிய புலவரின் நயத்தக்க நாகரிகத்தையும் வெளி கொணர்கிறது.

## பாடலும் பொருளும்

“தடங்கோட்டு ஆமான் மடங்கல் மாநிரைக்
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்
மாமலை நாட மருட்கை உடைத்தே
செங்கோற் கொடுங்குரற் சிறுதினை வியன்புலம்
கொய்பதம் குறுகும் காலை எம்

மையீர் ஓதி மாண்நலம் தொலைவே” (நற்றிணை 57)

எனும் பாடலுக்குத் தொகுத்தோர் கூறும் சூழல் விளக்கம் ‘பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைத் தோழி; புனத்திலே தினை கொய்யும் காலம் அணுகியது ஆதலின்; இனித் தலைவி மனையகம் புகுதா நிற்கும். அங்ஙனம் புக்கபின் நீ ஆண்டெய்துதற்கு இயலாமையின் அவள் தன் நலம் தொலைந்து வருந்தும் என்று யான் மருளுகின்றேன் எனவும்; உள்ளுறையால் அவன் விரைந்து வரைந்து கொள்ளுமாறும் கூறாநிற்பது.’ (நற்றிணை, ப.73) என அமைந்து உள்ளது. இச்சூழல் பாடலுக்கு இயைந்ததே.

பாடற்பகுதிக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ‘சிங்கம் போன்ற கொடிய விலங்குகள் இருக்கும் மலையில்; தன் கன்றோடு தங்கி இருக்கும் ஆமான் துயிலுறப் போகிறது என்று அறிந்து மந்தியானது பால் சுரந்த மடியை அழுந்தப் பற்றி ஈர்த்து இனிய பாலை கறந்து குட்டியின் கையில் நிறையப் பிழிந்து ஊட்டிப் பறழைக் காக்குமாறு போல; நீயும் சுரநெறியில் சென்று பொருளீட்டிக் கொணர்ந்து இவளை மணந்து பாதுகாப்பாயாக’ எனப் பொருள் தருகிறார் (நற்றிணை, ப.74).

ISSN : 2581-9712

ஆமான் தலைவிக்கும் குரங்கு தலைவனுக்கும் உள்ளுறையாக அமையும் உவமங்கள் என்றும்; தலைவியை உடன் மணந்து கொள்ள வேண்டும் என்ற குறிப்புப் பொருளுடனும் அவரது உரை அமைந்துள்ளது. குரங்கு தலைவனைக் குறிக்கும் என்ற கருத்து பற்றிய சிக்கலை நீக்கி உள்ளுறை உவமத்தைச் சரிவரப் பொருத்திக் காட்டி விளக்கிப் பாடலின் அழகையும் புலவரின் நயத்தகு நாகரிகத்தையும் தெளிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது.

**உள்ளுறை உவம விளக்கம்**

அகப்பாடலின் செறிவு எந்த ஒரு சொல்லுக்கும் பொருளுக்கும் தேவையில்லாமல் இடம் கொடுக்காது. ஆமான் தலைவிக்குரிய உவமம் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே ஆனாலும்; கன்றோடு இருப்பதாகக் காட்ட வேண்டிய தேவை என்ன எனக் காரணம் தேட வேண்டியுள்ளது. ஆமான் தூங்கப் போகிறது என்று குறிப்பிட்டுச் சொல்வானேன்? கன்றை ஈன்ற ஆமானின் பாலைக் கறக்கக் குரங்கு 'வீங்கு சுரை ஞெமுங்க' வாங்குவானேன்? ஈன்ற பசுவிடம் பாலைப் பீய்ச்ச எவரும் மடியை ஞெமுக்குவதில்லையே? மேற்கண்ட வினாக்களுக்கு விடை கிடைக்க ஒரே ஒரு மாற்றுக் கருத்தை ஏற்றுக் கொண்டால் போதுமானது. 'ஆமான்... கன்றொடு வதிந்து' எனச் சொல்லும் காரணம் அது ஆமானின் வயிற்றினுள் இருப்பதே ஆகும். ஆமான் கருவுற்று இருக்கிறது; தலைவியும் கருவுற்று இருக்கிறாள் என்பது குறிப்பு.

ஆமான் தூக்கக் கலக்கத்தில் இருப்பதும்; அதன் மடி பருத்துத் திண்மையாகக் காணப்படுவதும் கருவுற்ற பெண்ணின் உடற்கூறில் காணக் கூடிய மாற்றங்களாம். ஆமான் இன்னும் ஈனாததால் பாலைப் பீய்ச்சக் குரங்கு மடியைக் கசக்கிப் பிழிய வேண்டிய தேவை உளது. (கருவுற்ற பெண்ணின் மார்பகங்களில் சுரப்பு இருக்கும் என்பதும் அறிவியல் உண்மை.) பீய்ச்சிய பாலைக் குட்டிக் குரங்கின் கையில் சேர வைப்பது; ஈனுமுன் குட்டியின் கையை நிரப்புமளவு மட்டும் மிகச் சில துளிகளே சுரப்பு இருக்கும் என்பதாம் (Breast and Nipple Discharge: What It Could Mean Breast and Nipple Discharge: What It Could Mean). எனவே தலைவி கருவுற்று இருப்பது உறுதியாகிறது.

குரங்கு தலைவனைக் குறிக்கிறது எனின்; குரங்குக் கூட்டம் தலைவனின் சுற்றம் ஆகிறது. அதோடு குட்டியுடன் வரவேண்டிய தேவை என்ன எனும் கேள்விக்கும் விளக்கம் கொடுக்க இயலவில்லை. தலைவி இருக்கும் இடம் வரை தலைவனின் சுற்றம் வருமா? அப்படி வரும் அகப்பாட்டு வேறெதுவும் காணக் கிடைக்கவும் இல்லை. தலைவன் சுற்றம் அகப்பாடல் பாத்திரங்களுள் ஒன்று என அகஇலக்கணமும் சொல்லவில்லை. எனவே உரையாசிரியரின் அவ்வுவமப் பொருளை ஏற்றுக் கொள்ள இயலாது.

குரங்குக்கூட்டம் ஊராரைக் குறிக்கிறது. அக்கூட்டத்தின் ஆரவாரம் ஊரார் தலைவியின் நடவடிக்கை பற்றி ஐயம் கொண்டு தமக்குள் தூற்றும் அலரைக் குறிக்கிறது. குரங்கு தன் கைகளால் கூட்டத்தின் ஆரவாரத்தை அடக்கிக் குட்டியுடன் ஆமான் அருகே செல்வது ஐயத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கே ஆகும். கருத்தரித்தமைக்கு உரிய அடையாளம் மார்பகச் சுரப்பு என்பதால்;

பொல்லாத குரங்கு ஆமானின் மடியை நெருக்கிச் சுரப்பு இருக்கிறதா எனச் சோதிப்பது போல; குட்டியின் கையில் சில துளிகளைப் பிழிந்து காட்டிக் கருத்தரித்து இருப்பதை உறுதி செய்வது போல; ஊர்மக்களும் பொல்லாதவர். குரங்கு செயலற்ற நிலையில் உள்ள ஆமானிடம் செய்யும் சோதனையை ஊரார் தலைவியிடம் செய்யின்; அவள் இரங்கத் தக்கவள் எனும் அச்சத்தை வெளிப்படுத்துகிறாள். 'அவளை உடன் மணந்து கொள். அவள் கருவுற்று இருப்பதை மறைக்க முடியாது' என உணர்த்துகிறாள் தோழி.

சிங்கம் இருக்கும் காட்டில் ஆமானுக்குப் பாதுகாப்பு இல்லாதது போல்; வேற்று வரைவு எனும் ஆபத்து தலைவிக்கு உள்ளது. சிங்கத்திடம் சிக்கினால் ஆமானின் உயிருக்குப் பாதுகாப்பே கிடையாது. வேற்று வரைவு நிகழ்ந்தால் தலைவி உயிரை விடும் ஆபத்து உறுதி என எச்சரிக்கிறாள்.

**முடிவுரை**

இவ்வாறு கருவுற்ற பெண்ணிடம் தோன்றும் உடற்கூறு மாறுபாடுகளை ஆமானின் மேலேற்றி நாகரிகமாகவும் நாசூக்காகவும் பாடியுள்ளார் புலவர். திட்டவட்டமாகக் கருவுற்று இருப்பதன் அடையாளம் மார்பகச் சுரப்பு என்ற அறிவியல் உண்மை பாடலில் நயமாக இடம் பெற்றுள்ளது. பாடலின் கருத்து புலப்பாடு யார் மனதிலும் அரூயை ஏற்படாதவாறு; தலைவி மேல் இரக்கம் தோன்றுமாறு உள்ளது. இதனால் இவ் அகப்பாடல் அழகும் செறிவும் பொருந்தியது ஆகிறது.

துணைநூற்பட்டியல்

நற்றிணை, நாராயண சாமி ஐயர் (உ.ஆ.), 2007 கழக வெளியீடு, சென்னை.

(Breast and Nipple Discharge: What It Could Mean Breast and Nipple Discharge: What It Could Mean).

*******************************

ISSN : 2581-9712



# தமிழகம் – அயலகம் தமிழ் பக்தி இலக்கியங்கள் – ஒரு பார்வை

மருத்துவர் பொன்.மாணிக்கவல்லி
தலைவர்,
அனைத்துலகத் திருமந்திரம் மற்றும் யோகா ஆராய்ச்சி நிறுவனம்,
தஞ்சாவூர்.

## முன்னுரை

உலக நாடுகள் அனைத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்கு அறிய முடிகிறது. இவர்கள் அனைவரும் தமிழ் கலாச்சாரம் சார்ந்த விழாக்கள் வழிபாடுகள் போன்றவற்றைப் போற்றுவதை நேரிலும், சமூக ஊடகங்கள் மூலமாகவும் தெரிந்து கொள்ள முடிகிறது. இதில் பக்தி இலக்கியங்களில் சிறந்தவர்களாக இருப்பதோடு மட்டுமல்லாது பக்தி இலக்கியங்களைத் தொகுத்து, புத்தக வடிவில் இலவசமாக வழங்கிச் சிறப்பிக்கிறார்கள். இவ்வாறு அயலகத்தில் தமிழ் பக்தி இலக்கியங்கள் வளர்ச்சியடைந்துள்ளது. இந்நிலையில் தமிழகத்தில் தமிழ் பக்தி இலக்கியங்களின் நிலையைக் கூறுவது இக்கட்டுரையின் சிறப்பு.

## பக்தி இலக்கியம்

பக்தி என்றால் என்ன என்பதை முதலில் காணலாம். 'புல்' எனும் தமிழ் வேரிலிருந்து உருவான சொல் பக்தி. புல்லுதல்/பல்லுதல்= தழுவிக்கொள்ளுதல், பற்றிக் கொள்ளுதல். ஒன்றைப் பற்றிக் கொள்வது இறைவன் மீது உண்டாகும் பற்றே பக்தி. இறைவன் பற்றற்றவன் அவனைப் பற்றிக் கொண்டால், நன்மை உண்டாகும் என்பதனால் ''பற்றற்றான் பற்றினைப் பற்றுக'' எனத் திருவள்ளுவர் கூறுகிறார்.

தமிழில் இருப்பது போன்று வேறு எந்த மொழிகளிலும் பக்தி இலக்கியத்தைக் காண இயலாதது தமிழுக்குப் பெருஞ்சிறப்பு. வழிபாட்டு முறைகளைக் கூறவந்த வேத முனிவர்கள் ஆறு நெறிகளாகச் சைவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், வைணவம், சௌரம் என்று வகுத்துள்ளனர்.

- ❖ சிவனை ஆதிப்பரம்பொருளாக ஏற்று வழிபடுவது சைவசமயமாகும்.
- ❖ சக்தியைத் தனிப்பரம்பொருளாக வழிபடுவது சாக்தச் சமயமாகும்.
- ❖ சிவசக்தியின் மூத்தபிள்ளையான கணபதியைச் சர்வ வல்லமை படைத்த இறைவனாக வழிபடுவது காணாபத்திய சமயமாகும்.
- ❖ சிவசக்தியின் குமாரனான முருகப்பெருமானை முழுமுதலாக வணங்குவது கௌமாரம் ஆகும்.
- ❖ திருமாலைக் காக்கும் கடவுள் எனப்போற்றி வணங்குவது வைணவச் சமயமாகும்.
- ❖ சூரியனை முழுமுதற் காரணப் பொருளாக ஏற்றுக் கொண்டு வழிபடுவது சௌர சமயமாகும்.
- ❖ எல்லாச் சமயங்களும் உலகியல் இன்பங்களை நுகர்ந்து கொண்டே இறைவனிடம் பக்தி செலுத்தலாம் என்ற கோட்பாட்டினை

ISSN : 2581-9712

முன்வைத்தலால் இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

- ‘மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்’ என்றார் திருஞானசம்பந்தர்.
- ‘இன்பமே என்னாளும் துன்பமில்லை’, ‘என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்’ என்றார் திருநாவுக்கரசர்.
- ‘நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே’ என்றார் நம்மாழ்வார்.

காலத்தால் முற்பட்ட சைவச் சமயப் பக்தி இலக்கியங்களைப் பன்னிரு திருமுறைகளை இராசராசசோழன், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் பெருமான் போன்றோர்களால் இறையருள் மீட்டெடுத்த வரலாற்று செய்திகளைப் படிப்பதற்கே பிறவி என்பதை அடியார்கள் புரிந்து கொண்டதனால், தமிழகத்தில் பக்தி இலக்கியம் சிறப்பாக செழித்துக்கொண்டு இருக்கிறது.

**இறைவனின் திருவருளும் திருநாவுக்கரசரும்**

‘அன்பே சிவம்’என்பது திருமூலர் வாக்கு. இவ்வாக்கிற்கு இணையான செய்யுளைத் திருவள்ளுவர்,

“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு”

என்னும் குறட்பாவில் இயல்பாக அன்பு அமைந்துள்ளதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொள்ளாதவர்கள் எலும்பின் மீது தோல் போர்த்தப்பட்ட உயிரற்ற பயனற்ற வெற்றுடம்பு என்னும் நிலை எய்துவர். எனவே, அன்பு கொண்டொழுகுதலே நல்வாழ்க்கை ஆகும்.

அன்பின் நிலையென்பது ஒருவர் மட்டும் ஒருவர் மீது செலுத்துவது அல்ல மற்றொருவரும் அறத்தின் விதிப்படி செலுத்துதல் நன்மை தரும். இங்கே திருநாவுக்கரசர் தன் சகோதரியைக் கலங்க வைத்தாலும், திலகவதியார் பக்தியும் சகோதரன் மீது வைத்திருந்த அன்பும் ஒன்று சேர்த்ததை அறியலாம்.

உயிர்கள் தன்னலமற்ற அன்பினைப் பிறவுயிர்கள் மீது பொழிவது. இறைவனை அடையத் திருவருளுக்கு ஈடாகும். செல்வம், கல்வி, அறிவு என்னும் நிலையால் இறைவனைக் காண முயலுபவர்கள் ஆணவத்தையும், அகங்காரத்தையும் அறியாமையையும் அடைவர். இதனால் இறை உண்மையைப் பெற இயலாது. மாறாக, அன்பையும், அறனையும் முன்னிறுத்தினால் இறைவன் திருவருள் பெற்று மனதில் தன்னலம் என்னும் அக இருள் நீங்கி, பொதுநலச் சிந்தனை என்னும் அகஒளி பெற்றுத் திருவருளை முழுமையாகப் பெறலாம் என்பதை ஆய்ந்தறிந்து உணர்ந்தவர், திருநாவுக்கரசர் ஆவார். தன் நாவன்மையால் தருமசேனர் என்னும் ஆணவத்தையும், அன்புச்சகோதரி திலகவதியாரை மறந்த இறுமாப்பையும், தன்னைப் போற்றிப் புகழ்வது தன்னுடைய சொந்த அறிவினால் என்கிற அறியாமையும் மட்டுமே முற்பகுதி வாழ்க்கையில் அனுபவித்தவர். இறைவனின் திருவருளை முழுமையாகப் பெற்றுத் திருநாவுக்கரசர் ஆனார். இதன் விளைவாகத் தம் மனதுக்குள்ளேயே பேரின்பச் சோதியை அன்புணர்வைக் கண்டு கொண்டதை,

“தேடிக் கண்டுகொண்டேன் – திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்”

என்று பாடியுள்ளமை கொண்டு கற்ற கல்வியால் உள்ள தூய்மையோடு அன்புணர்வு கொண்டு தேடினால் இறைவனின் திருவருள் பெற்று பேரின்ப நிலையை அடையலாம்.

திருநாவுக்கரசரை 'அப்பர்' எனத் திருஞானசம்பந்தர் அழைத்ததாகவும் அதன் நினைவாக அந்த இடத்தை 'ஞானசம்பந்தர் மேடு' என்று பெயர் சூட்டி அங்கு ஒரு கோயிலையும் இருவருக்கும் எழுப்பிக் குடமுழுக்கு நடத்திய பெருமை தமிழக அடியார்களுக்கு உண்டு. இவ்வாறு சைவப் பக்தி இலக்கியங்கள் 63 நாயன்மார்களைப் பற்றி பேசுகிறது.

### தமிழர்களின் வழிபாட்டு தெய்வங்களும், விழாக்களும்

தமிழர்களின் வழிபாட்டு தெய்வங்கள் விநாயகர், சிவன், சக்தி, காளி, மாரியம்மன், முருகன் எனச் சைவச் சமயத்தில் வைத்துள்ளனர். கிராமங்களில் பெரும்பாலான மக்கள் பக்தி இலக்கியங்களில் உள்ள பதிகங்களைப் பெரும்பாலும் பாடுவதில்லை. வணங்குவதோடு முடித்து விடுவார்கள். அங்கு வாழும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. ஆனால் பாடப்பெற்ற தலங்களில் வாழ்பவர்கள், நகர்ப்புற மக்கள் பக்தியோடும், பெருமையோடும் பாடுவதைக் காணலாம்.

### விநாயகர் வழிபாடு : (காணாபத்திய சமயம்)

விநாயகரின் தனிச் சந்நிதிகள் அதிகம் உள்ள இடங்கள் பல உள்ளன. இவற்றில் முக்கியமான இடங்கள் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர், திருச்சி மலைக்கோட்டை மாணிக்க விநாயகர் போன்ற கோவில்களில் ஒவ்வொரு மாதம் நடைபெறும் சங்கடகர சதுர்த்தியும் வருடத்திற்கு ஒருமுறை வரும் விநாயகர் சதுர்த்தியும் சிறப்பாகக் கொண்டாடப்படும். அப்போது இசைத்தட்டுகள் மூலம் ஔவையார் அருளிய 'விநாயகர் அகவல்' ஒலிக்கும்.

### முருக வழிபாடு (கௌமார சமயம்)

'குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்' எனச் சிறப்பித்துக் கூறுவது வழக்கம். தமிழகத்தில் இருக்கக்கூடிய அறுபடை வீடுகள் தவிரச் சேக்கிழார் பிறந்த ஊரான குன்றத்தூர், குன்றக்குடி போன்ற ஊர்களில் கார்த்திகை, ஷஷ்டி போன்ற விழாக்கள் நடைபெறும். சூரசம்காரம் என்பது ஐப்பசி மாதத்தில் அனைத்துச் சிவன் கோயில்களிலும் நடைபெறும். முக்கியமாக நாகை மாவட்டம், சிக்கல் சிங்கார வேலன் சன்னதியில் அம்பாளிடம் வேல் வாங்கித் திருச்செந்தூரில் சூரபத்மனைச் சம்காரம் செய்தல். 'செந்து' 'என்றால் சீவன் எனப் பொருள். உலக உயிர்களுக்கு எல்லாம் பாதுகாவலன் மட்டுமல்ல ஞானக்கடல், தமிழ்க்கடவுள் அவனை வணங்கும் மாசற்ற உயிர்களைத் தேடிச் செல்வதை,

"மாசிலடி யார்கள் வாழ்கின்ற ஊர்சென்று
தேடிவிளை யாடி யேயங்கனே நின்று
வாழுமயில் வீரனே செந்தில் வாழ்கின்ற
பெருமாளே"

என அருணகிரிநாதர் பாடுகிறார். தைப்பூச நாளில் பழனி மலைக்குக் காவடி எடுத்துச் செல்வது மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பாத யாத்திரை செல்பவர்கள் 'பழனி முருகனுக்கு அரோகரா' என்று சப்தம் எழுப்பிச் செல்வது புத்துணர்வைக் கொடுப்பதாக இருக்கும். கோயிலுக்குச் செல்லும் வழி அனைத்திலும் முக்கிய இடங்களில் புளியோதரை அன்னம்,

ISSN : 2581-9712

பழம், பால் போன்ற உணவு வகைகளைப் பக்தர்களுக்கு வழங்கி மகிழ்வதைக் காணலாம். முருகனை வாழ வைத்த மலை என்பதனை,

"சரவணப வாமுகுந்தன் மருகோனே
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே
பழநிமலை வாழவந்த பெருமாளே"

என்று திருப்புகழ் புகழ்கிறது.

கந்தர்சஷ்டி கவசம், கந்தர் அனுபூதி, கந்தரலங்காரப் பாடல்கள் போன்றவை முருகனின் பக்தி இலக்கியங்கள்.

## சக்தி வழிபாடு (சாக்தச் சமயம்)

தமிழகத்தில் பெண் தெய்வங்கள் அதிக அளவில் பேசப்படுகிறது. மாரியம்மன், காளியம்மன் போன்ற பல பெயர்களால் அரசர் காலத்தில் இருந்து இன்று வரை பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டே வருகிறது. தஞ்சை மாரியம்மன் கோயில் சித்தர் அருளாணையின்படி சரபோஜி மன்னர் கட்டியதாக வரலாறு,

"உலகின் எடுத்தது சக்தி முதலாம்
உலகில் எடுத்தது சக்தி வடிவமாய்
உலகில் எடுத்தது சக்தி குணமாய்
உலகம் எடுத்த சதாசிவன் தானே"
(திருமந்திரம்–1713)

என்று திருமூலர் போற்றிப் புகழ்கிறார்.

சக்தி வழிபாடு என்பது பழமையானது என்பது தெளிவாகத் தெரிகிறது. சங்க இலக்கியத்தில் 'கொற்றவை' எனப் போற்றப்படுகிறது. சாக்த வழிபாடு செய்பவர்கள் அனைத்துத் தெய்வங்களையும் அந்தந்தக் கிழமைகளில் முக்கியமாக வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் ராகு காலத்தில் விளக்கேற்றித் தூர்க்கை வழிபாடுகளை பாடி செய்வர்.

தற்போது கோயில்களில் பாடினால்தான் பெருமை என உணர்ந்தவர்கள் பாடுவதைக் காணமுடிகிறது. குறிப்பாக அபிராமி அந்தாதி, அபிராமியம்மை பதிகம் முதலியவை.

அபிராமியம்மை பதிகத்தில் முதல் பாடல் பதினாறு பேறுகளையும் பெற வேண்டியும் கோயில் மட்டுமல்லாதது, குழந்தைகள் பெரியவர்கள் வரை பிறந்தநாள் மற்றும் புதுமணத் தம்பதிகளை வாழ்த்துவதாக இருந்தாலும் இப்பதிகம் பாடப்படுகிறது.

"கலையாத கல்வியும் குறையா வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவி பெரிய
தொண்டரோடு கூட்டுக் கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாய் அபிராமியே"

என்ற பதிக வரிகள் சிறப்பிக்கிறது.

## சிவ வழிபாடு (சைவச் சமயம்)

சிவனை மட்டுமே வழிபடுவது சைவசமயம். சிவனை வணங்குபவர்களை அடியார்கள் எனப் போற்றுகிறார்கள். கோயில்களில் உழவாரப் பணிகள் செய்வதையும் முற்றோதல். அது மாணிக்கவாசகர் அருளிய

ISSN : 2581-9712

திருவாசகத்தையே குறிக்கும். பாடல் பெற்ற தலத்திற்குச் சென்று நால்வர்களை முன்னிலைப்படுத்தி நால்வர்களின் துதிபாடி பின்,

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

எனத் துதித்து ஐம்பத்தோரு பதிகங்களைப் பாடி நிறைவு செய்வது வழக்கமாக உள்ளது. இந்நிகழ்வை நடத்துபவர்கள் பதிவு பெற்ற அறக்கட்டளைகள், சங்கங்கள் மற்றும் அமைப்புகள் வைத்துக்கொண்டு நடத்துகிறார்கள். இது தவிர வள்ளல் பெருமான் சார்ந்த நிகழ்வுகள், திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், மதுரை ஆதீனம் ஆகிய மடங்களுக்குச் சென்று அங்குக் கோயில் வழிபாடுகளும் அன்னதானம் போன்றவற்றில் கலந்து கொள்கிறார்கள். சித்தர்கள் வழிபாடும் அதிக அளவில் காணப்படுகின்றன.

சித்தர்கள் அருளிய சித்தர் இலக்கியத்தில் திருமூலர், சிவவாக்கியர், பாம்பாட்டிச்சித்தர், போகர், அகத்தியர் மற்றும் பல சித்தர்களின் பாடல்களைப் பாடிப் பின் தியானமும் செய்வதைக் கண்கூடாகக் காண முடிகிறது.

"சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே" (10:2716)

என்று பாடுவதையும் சிவன் கோயில் சுவற்றில் 'சிவசிவ' என்ற மந்திரம் எழுதியிருப்பதையும் காணலாம். அடியார்கள் பன்னிரு திருமுறைகளில் உள்ள பாடல்களைப் பாடுவதற்காகத் தமிழ் இசை வகுப்புகள் சைவத்தைப் பற்றி தெரிந்து கொள்ளச் சைவச் சித்தாந்த வகுப்புகள் செல்வதில் ஆர்வமாக உள்ளனர். ஏற்கனவே ஆண்களும் பெண்களும் ஒவ்வொரு மாவட்டத்திலும் படித்து முடித்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் ஆர்வத்தோடு மீண்டும் வகுப்பிற்குச் செல்வதைக் காணலாம். இவ்வாறு சிவனடியார்களின் வழிபாடும் பணிகளும் தொடர்கிறது.

### சூரிய வழிபாடு (சௌர சமயம்)

சூரிய வழிபாட்டு முறையைச் சௌர சமயம் எனக் குறிப்பிடுகிறது. இரட்டைக் காப்பியமான சிலப்பதிகாரத்தில் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்று சூரியனைப் போற்றுவதைக் காண முடிகிறது.

சூரியதேவன் அவதரித்த நாளே ரதசப்தமியாகக் கொண்டாடப்படுகிறது. தை மாத அமாவாசைக்கு அடுத்து வரும் சப்தமி திதியே ரதச் சப்தமி என்று போற்றப்படுகிறது. ஆதித்யனின் அளவற்ற சக்தியைப் போற்றி வழிபடும் இவ்விழா சூரியன் கோயில் கொண்டிருக்கும் அனைத்து ஆலயங்களிலும் சிறப்பித்துக் கொண்டாடப்படும்.

தமிழ்நாட்டில் கும்பகோணத்தில் 800 வருடப் பழமை கொண்ட சோழர்களால் பராமரிக்கப்பட்ட சூரியனார் கோயில் ஆடுதுறை அருகே உள்ளது. நவக்கிரக வழிபாட்டில் முதல் இடம்பெறும் தலம். சூரியனார் இருதேவியருடன் மணக்கோலத்தில் கைகளில் தாமரை மலர் ஏந்திப் புன்னகையுடன் மேற்கு நோக்கிக் காட்சி தருகிறார். எதிரே வியாழபகவான் சூரியனை நோக்கிய நிலையில் அருள்பாலிக்கிறார். மற்ற கிரகங்களும் தனித்தனிச் சன்னதியில் அருள்பாலிக்கின்றனர். ஒன்பது கிரகங்களும் ஒன்றாக அருளும் ஆலயமாகச் சூரியனார் கோயில் அமைந்துள்ளது.

ISSN : 2581-9712

இவ்வாறு தமிழகத்தில் சௌர மதம் என்ற சூரிய வழிபாடு சிறப்பு பெறுகிறது. இக்கோயில் சூரியனார் கோயில் ஆதீனம் அவர்கள் அருளாணையின் கீழ் இயங்குகிறது.

பன்னிரு ராசிகளில் ஒவ்வொரு மாதமாக ஒளிரும் சூரியனைப் பன்னிரு ஆதித்தியர்களாகப் போற்றுகின்றன புராணங்கள். திருக்கழுக்குன்றத்தில் சிவனாரை இவர்கள் வழிபட்டதாகவும், அதனால் இத்தலம் தினகரபுரி என்ற பெயரால் அழைக்கப்பட்டதாகவும் திருக்கழுக்குன்றப் புராணம் குறிப்பிடுகின்றது.

சூரியனே கோள்களின் நாயகன். பிற கோள்கள் அவரைச் சுற்றி வரும் காலங்கள் வருடங்களால் அழைக்கப்படுகிறது. சூரியனின் தெற்கு நோக்கிய நகர்வு தட்சிணாயணம் மற்றும் வடக்கு நோக்கிய நகர்வு உத்தராயணம் என்று அழைக்கப்படுகின்றன. சூரியன் பன்னிரு ராசிகளிலும் ஒவ்வொரு மாதம் சஞ்சரிப்பார். சூரியன் மகரத்தில் பிரவேசிக்கும் நாளே மகரச் சங்கராந்தி என்று போற்றப்படுகிறது. அன்றே நாம் தைப்பொங்கல் வைத்துக் கொண்டாடுகிறோம்.

### திருமால் வழிபாடு(வைணவ சமயம்)

திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். இச்சமயம் வைணவம் என்றும் வைஷ்ணவம் என்றும் அழைக்கப்படுகிறது. இச்சமயம் இந்து சமயத்தின் ஆறு உட்பிரிவுகளுள் ஒன்றாகும். உலகில் தீமைகள் ஓங்கும்போது திருமால் அவதாரம் எடுத்து அவற்றை அழித்துக் காப்பாற்றும் கடவுளாக வைணவர்களின் நம்பிக்கை. இவர் எண்ணற்ற அவதாரங்கள் எடுத்துள்ளதாகவும் நம்புகிறார்கள். திருமாலின் அவதாரங்களில் குறிப்பிடத்தக்க மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி தசாவதாரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

வைணவச் சமயத்தைப் பாடியவர்களைப் பன்னிரண்டு ஆழ்வார்கள் என்று அழைக்கப்படுவார்கள். இவர்கள் அனைவரும் ஸ்ரீரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் திருவரங்கனைப் போற்றியுள்ளார்கள். திருச்சி ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி விழா முக்கிய நிகழ்ச்சியான பரமபதவாசல் திறக்கும் நிகழ்வும் மோகினி அலங்காரச் சேவையும் சிறப்பாக நடைபெறும்.

பூலோக வைகுண்டம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் 108 வைணவத் திருத்தலங்களில் முதன்மையானது. இதில் மார்கழி மாதம் 20 நாட்கள் திருவத்யன உற்சவம் என்ற வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா நடக்கும்.

இவ்விழா நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பகல்பத்து, ராப்பத்து என இரு பகுதிகளாக நடத்தப்படுகிறது. பகல்பத்து நாட்களில் பெருமாள் முன் அரையர்கள் தீந்தமிழ் திருமொழிப் பாசுரங்களைப் பாடுவர்.

"ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனை நான்
இன்று மறப்பேனோ ஏழைகாள்
அன்று திருவரங்கத்துட் கிடந்து கைதொழுதேன்
கண்டேன் திருவரங்க மேயான் திசை"

என்று பொய்கையாழ்வார் பாடிப் பரவசமடைகிறார்.

"இருளரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி

ISSN : 2581-9712

.. என் கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும் நாளே''
என்று குலசேகராழ்வார் அரங்கனைப் பாடுகிறார்.

வைணவத்தில் முக்கியமாக இடம்பெறுபவர் ஆண்டாள். திருமாலைக் காணவே அவதாரம் எடுத்து வந்ததாக வரலாறு கூறுகிறது.

ஆண்டாள் தமிழகத்தில் 7ஆம் நூற்றாண்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த வைணவ ஆழ்வார்களுள் ஒருவர். வைணவம் போற்றும் 12 ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண்ணாவார். ஆண்டாள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு பாடற்தொகுதிகளை இயற்றியுள்ளார். வைணவச் சமய நூல்கள் கூறும் இவரது வரலாறு இறைவன் மீது இவர் கொண்டிருந்த காதலை நமக்கு எடுத்துரைக்கிறது.

''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடி செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்

கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தன்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்''

எனத் திருப்பாவைப் பாடலில் திருமாலின் பல சிறப்புகளைக் கூறிச் சிறுமிகளை மார்கழி மாதம் துயில் எழுப்புகிறாள். இப்பாடல் அன்றிலிருந்து இன்று வரை வைணவர் மட்டுமல்லாது சைவச் சமயத்தைச் சார்ந்தவர்களும் திருப்பாவை மட்டுமல்லாது மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவையும் சேர்த்துப் பாடுகிறார்கள்.

பக்தி இலக்கியம் என்பது ஒரு பொய்மீ உலகம் என்று கூறலாம். அறம், பொருள், இன்பம், வீடு பேறு என்ற பெட்டகத்தைப் பாரதியார் உறுதிப் பொருள் எனக் கூறியுள்ளார். அதன் வழியில் வாழ்ந்து இறவாப் புகழ் பெற்றவர்கள்தான் பக்தி இலக்கியத்தைப் பாடல்கள் வழியாகப் பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது. இவர்கள் அனைவரும் தமிழகத்தில் இறையருளால் அவதாரம் செய்திருக்கிறார்கள் என்பதில் தமிழகம் பெருமை கொள்கிறது.

**மேற்கோள்**

1. திருமந்திரம், வர்த்தமானன் பதிப்பகம்.
2. திருக்குறள், மணிவாசகர் நூலகம் (பதிப்பகம்).
3. தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும், கலைக்கூறுகளும்(பன்னாட்டு ஆய்வு கருத்தரங்கம் தொகுதி நான்கு, கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை.
4. www.vikatan.com.
5. Ta.quora.com

********************************

ISSN : 2581-9712



# இலக்கியங்களில் பாணர்களின் வாழ்வியல் நிலை

**முனைவர் இரா. பிரித்தா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி,
வேலூர்.

சங்க இலக்கியத்தில் வாழ்ந்த இசைக்கலைஞர்களுள் பாணர்களும் ஒருவர். இவர்கள் பண் பாடுதல், இசைக் கருவிகளை இசைத்தல், நடனம் ஆடுதல் போன்றவற்றைத் தொழிலாகக் கொண்டனர். நாடோடி வாழ்க்கை கொண்ட பாணர்களில் பல பிரிவு உண்டு. தமிழ் நாட்டில் வாழ்ந்த பழமையான குடிகளுள் இவர்களும் ஒருவர் என்பதை, 'துடியன், பாணன், பறையன், கடம்ப என்று இந்நான்கு அல்லது குடியும் இல்லை' என்ற புறநானூற்று (335: 7–8) பாடல் அடிகளின் மூலம் அறியலாம். அலைகுடி வாழ்வாக வாழ்ந்த பாணர்களின் குறித்துப் பின் வருமாறு காணலாம்.

## பாணர் பெயர்க்காரணம்

பண் என்பது பாட்டு, பண், பாண், பாடு, பா போன்றவை பாட்டு எனும் பொருளில் வந்துள்ளது. இசையுடன் பண்ணப்படுவது பண். பண்ணிசையுடன் பாடுதலால் பாணர் எனப்பட்டனர். பாணர்களில் இசைப்பாணர் வாயப் பாடகரும், யாழ்ப் பாணர் நரம்புக் கருவியினரும், மண்டைப் பாணர் தோற்கருவியினருமாவர். துளைக் கருவி இயக்கும் குழற் பாணர் மண்டைப்பாணருள் அடங்குவர். குரல்வாய்ப் பாணர் குறித்துச் சிலப்பதிகாரம் (சிலம்பு 5: வரி:200), பாடற் பாணர்(அந்தி:186) மண்டை பறை, குழலொடுகூடிப் பறையடிப்பதே பெருவழக்காக இருந்தது. இதைச் சிலப்பதிகாரத்தில்,

"குழலினும் யாழினுங் குரல்முதலேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற்
பெரும்பாணிருக்கையும்" (சிலம்பு:5 : 37)

குழற் பாணர் தனித்துக் கூறப்படாமல் இணைத்தே கூறியுள்ளனர்.

## பாணர்களின் வகைகள்

பாணர்களை யாழ்ப் பாணர்கள், மண்டைப் பாணர்கள், இசைப்பாணர்கள் என மூவகைப்படுவர்.

## இசைப்பாணர்கள்

பாடற் பாணர், அம்பணவர், அகவர், பனுவல் பாடுநர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

## யாழ்ப் பாணர்கள்

யாழ் வாசிப்பில் திறமை பெற்றவர்கள் யாழ்ப் பாணர்கள். இவர்கள் வாசிக்கும் யாழில் பேரியாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் எனப் பலவகைப்படும். இந்நான்கனுள் பேரியாழ் வாசித்த பாணர் பெரும்பாணர் என்றும், செங்கோட்டியாழ் என்ற சீறியாழ் வாசித்த பாணர் சிறுபாணர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இவர்களைப் பற்றிய குறிப்புகள் பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை,

ISSN : 2581-9712

பொருநராற்றுப்படை ஆகியவற்றில் முழுமையாகக் காணலாம். மேலும் பாணர்களைப் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியம், சீவக சிந்தாமணி (பாணியாழ்–1500), பாண்வலை(2040), சிலப்பதிகாரம்(ப.349), திருவிளையாடல் புராணம், புறநானூறு, நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை போன்ற நூல்களுள் காணப்படுகின்றன.

**மண்டைப் பாணர்கள்**

மண்டை என்னும் உண்கலத்தில் இரந்து உண்ட காரணத்தினால் மண்டைப் பாணர் எனப்பட்டனர். இவர்கள் சென்னியர் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் யாழ் இசைப்பவர்களாக மட்டுமில்லாமல் கூத்து நிகழ்த்துபவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதைப் பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார் (புறம் : 115:2) வரிகளின் மூலம் அறியலாம்.

பாணர்களில் ஆண்களைச் சென்னியர், வயிரியர், செயிரியர், மதங்கர், இன்னிசைக்காரர் என்று பிங்கல நிகண்டு கூறுகின்றது. (சென்னியர் வயிரியர் செயிரியர் மதங்கர் இன்னிசை காரர் பாணரென்ப – பாண்பெரியார் மூவர், ப. 11), பெண்களைப் பாடினி, விறலி, பாட்டி, மதங்கி, பாடல் மகடூஉ பாண் மகளாகும் எனத் திவாகரமும் கூறுகின்றது. இதில் விறலி என்பது விறல்பட ஆடுபவள் என்னும் பொருளது. இப்பெயர் பாடினிக்கேயன்றி வேறு குடியின் மகளிர் சிலருக்கும் உரியதாகும். பாடினியர் இனிய குரல் வளம் கொண்டவர்கள். மென்மையான அழகுள்ளவர்கள் மயில் போன்ற சாயல் கொண்டவர்கள். அறிவுக்கூர்மை மிக்கவர்கள்.

**பாணனின் தோற்றம்**

உடலில் கையில் இலக்கணம் பொருந்திய யாழுடன் காப்பார் இல்லாமையால் உண்டான பசியுடனும் இடையில் வேறுவேறு நூலிழை நுழைந்து வேர்ப்பதால் நனைந்த கந்தலாடையைத் துன்பத்தையும் மறைத்து உடுத்தி, ஊக்கமில்லாதவன் உடலைப் போன்று பெரிதாகப் பொலிவிழந்த சுற்றத்தை உடையவனாய் திரிந்து துன்பத்தைப் போக்குவர் யாரேனும் உளரோ? என்று உலகம் முழுவதும் திரியக் கூடியவர்.

**“கையது கடன் நிறை யாழே, மெய்யது**

**.................................................................**

**பெரும் புல்லென்ற இரும்பேர் ஒக்கலை”**

(புறம்: 69: 1–6)

ஒருவனது வறுமையை அவனது தோற்றத்தைக் கொண்டே அறியலாம். அதை மேற்கண்ட அடிகளின் மூலம் அறியலாம்.

**யாழின் வருணனை**

பாணன் கொண்டுள்ள யாழிசைக் கருவியைக் குறித்துப் பின்வரும் பாடல் அடிகளில் காணலாம். அவை

“அகல் இரு விசும்பில் பாய் இருள் பருகி

.................................................................

தொடைஅமை கேள்வி இடவயின் தழீ”

(பெரும்பாண: 1– 15)

பாணன் கையில் வைத்துள்ள யாழானது பசிய இலையினை உதிர்ந்த பருத்த அடி பொருந்தியது பாதிரி மரம். அம்மரத்தில் மலர்ந்த பெரிய இதழையுடைய வண்டுகள் மொய்க்கின்ற பாதிரி மலரின் உள்ளிடத்தை ஒத்த நிறமுடைய தோல். பருத்த அடியினையுடைய கமுக மரத்தின் பாளையாகிய அழகிய பசிய பூ விரியாமல் கருவாயிருக்கும் மதனை ஒத்த இரண்டு கண்ணும் கூடின செறிந்த துளை. உருக்கி

ISSN : 2581-9712

ஒன்றாக வார்த்தாற் போன்று தோன்றாமல் இயைந்த தோல். சுனை வற்றி இருண்டது போன்ற இருள் செறிந்த வறுவாய். பிறை ஏந்தியிருந்தாற் போன்ற பின்பக்கம் அமைந்த கவைக்கடை. நெடிய மூங்கிலை ஒத்த திரண்ட தோள்களையுடைய மகளிரின் முன்கையிடத்தே செறிந்த குரிய வளையலை ஒத்த வார்க்கட்டு. நீலமணி ஒழுகினாற் போன்ற கருநிறமுடைய பெரிய தண்டு. பொன்னை உருக்கி வார்த்த கம்பி போன்ற முறுக்கு அடங்கின நரம்பின் தொடை. இத்தகைய சிறப்பு கொண்டது யாழ். இதன் உறுப்புகளாகப் பத்தர், கோடு, வறுவாய், பச்சை, திவவு, உந்தி, ஒற்றுறுப்பு, யாப்பு, மடாகம், தகைப்பு, ஆணி(சிலம்பு. 7:1)முதலியன.

**பாணனுக்குப் பொன்னாலாகிய தாமரை மலர்**

இசைக்கலைஞர்களான பாணனுக்கும் விறலிக்கும் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. அதில் பாணனுக்குப் பொன்னாலாகிய தாமரையும் விறலியர்க்கு அணிகலன்களையும் அளிப்பர். ஆனால் இருவரும் தங்களை ஒத்துழைப்பு கொடுப்போர் இறந்ததால் அவற்றை இவர்கள் அணியவில்லை. இதை,

"பாணர் சென்னியும் வண்டு சென்று ஊதா
விறலியர் முன்கையும் தொடியின் பொலியா"
(புறம்: 244: 1–2)

மேற்கண்ட அடிகளின்மூலம் அறியலாம்.

**போர்க்களச் செய்தி அறிவிக்கும் இடத்தில் பாணன்**

பாணனே! பாசறையிடத்தே போர்க்குரிய பூவை மறவர்க்குத் தரும் நாள் இன்று என்று அறிவிக்கும் தோலை மடித்துப் போர்த்த வாயை உடைய தண்ணுமையின் ஓசைக் கேட்பாயாக.

"கேட்டியோ வாழி பாணப் பாசறை
..........................................................
மடிவாய் தண்ணும்மை இழிசினன் குரலே!"
(புறம் : 289: 8–10)

போர்க்கள இடத்தில்கூடப் பாணர்கள் இருந்துள்ளனர்.

**ஊர்களைப் பரிசாகப் பெறல்**

பேரரசன் இரவலர்களைச்(பாணர்) சிறப்பித்தல்போலச் சிற்றூர் மன்னனும் இரவலர் தகுதியறிந்து பரிசு வழங்குவான். (புறம்.319:12–15) என்பதை அறியலாம். பாணர்கள் பெற்ற அன்பளிப்புகளில் ஊர்களுங்கூட அடங்கும். இதை

"ஐதுஅமை பாணிவணர் கோட்டுச் சீறியாழ்க்
கைவார் நரம்பின் பாணர்க்கு ஒக்கிய
நிரம்பா இயல்பின் கரம்பைச் சீறூர்"
(புறம்: 302: 5–7)

நரந்த மலர்களால் பல காழாகப் புனையப்பட்ட மாலைகள் சுற்றப்பட்ட அழகியதாக அமைந்த தாளத்தையுடைய வளைந்த மருப்பினையுடைய சீறியாழ், கைகளால் வார்தல் என்ற இசைக் கரணத்திற்கு ஏற்ப இசைக்கப்படும் நரம்பினையுடையவாய் அவற்றை இசைக்கும் பாணர்க்குச் சொல்லில் அடங்காத சிறப்பினையுடைய மேட்டு நிலத்தைக் கொண்ட சிறிய ஊர்கள் அறுதியிட்டுக் கொடுக்கப்பட்டன. விறலியர்கள் பொற்பூவினையும், பாணர்கள் கரம்பைச் சீறூரையும் அன்பளிப்பாகப் பெறுவர்.

**வரகினை அன்பளிப்பாகப் பெறல்**

கடன்காரர்களுக்குக் கொடுத்ததுபோக எஞ்சியதில் பாணர்களுக்கும் கொடுப்பதை ஒரு கடமையாகக் கொண்டனர். இதை

"தொடுத்த கடவர்க்கு கொடுத்த மிச்சில்

ISSN : 2581-9712

பசித்த பாணர் உண்டு கடை தப்பலின்"
(புறம்: 327: 3–4)
இளையோர்களால் அடித்துத் தூற்றப்பட்ட சிலவாக விளைந்த வரகினையுடைய புல்லெனத் தோன்றும் குவியல், தன்னை வளைத்துக் கொண்ட கடன்காரார்களுக்குக் கொடுக்கப்படும். அவ்வாறு கொடுத்தபின் எஞ்சிய வரகினைப் பசியால் நலிவுறும் பாணர்கள் பெற்று உண்டு தம் வாயிலிலிருந்து நீங்கிச் செல்வர்.

**மறவர்களின் வீரத்தைப் பாடும் பாணன்**

பாணர்கள் மன்னர்களை மட்டும் சிறப்பித்துப் பாடுவதில்லை. போர் வீரர்களின் வீரத்தையும் போற்றி பாடுபவன்.
"அவன் எம் இறைவன் யாம் அவன் பாணர்
..........................................................................
கருங்கோட்டு சீறியாழ் பணையம், இது கொண்டு" (புறம்:316: 4–7)
பாணர்கள் வீரனுடைய வெற்றியை யாழில் இசைத்துப் பாடும் இயல்பினர். முதல் நாள் வாளைப் பணயம் வைத்துப் பொருள் பெற்ற விருந்தினரை உண்பித்த வீரன் போரிட்டுத் திரும்பி அவ்வாளை மீட்டமை உய்த்துணரப்படும். இந்நாள் சீரியாழைப் பணயமாக வைத்த அவன் அதனை மீட்பதற்காகப் போர் உழற்றி வெற்றி பெறுதல் உறுதி என்பது இதனால் கூறப்பட்டது. அவ்வெற்றியின் பயனால் விறலியர், பொன் அணிகலன்களை அன்பளிப்பாகப் பெறுவர். பாணர்கள் கள் உண்டும் மகிழ்வர்.

**புலவு வாய் பாணன்**

வறுமையின் கொடுமையினால் கற்ற கல்வியை வெறுத்துப் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டவன் பாணன்.
"வெந்தெறற் கனலியோடு மதிவலம் திரிதரும்
..........................................................................
புல்லேன் யாக்கைப் புலவுவாய்ப் பாண!"
(பெரும்பாண:16 – 21)
கடல் சூழ்ந்த உலகில் மழை வராமையால் புகை எழுகின்ற மலையின்கண், நின்னைப் புரப்பாரைப் பெறாமையால், பழுத்த மரத்தை நாடித் திரியும் பறவை போன்று அழுது புலம்பும் சுற்றத்தினருடன், ஓரிடத்து இராமல் பயனின்றி ஓடித் திரிகின்ற பொலிவிழந்த வடிவினையும், புலால் நாறும் வாயையுடையவன் கற்ற கல்வியை வெறுத்துப் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டவன் ஆனான்.

**குளிர் நீரும் குறையாத சோறும்**

யாழை இடப்பக்கத்தே அனைத்துக் கொண்டு வெயிற் கொடுமையையும் பொருட்படுத்தாது தன் சுற்றத்தினருடன் வள்ளலை நாடி புறப்பட்டவன் பாணன். பரிசில் பெற்ற பாணன் ஒருவன் கிள்ளிவளவனிடம் ஆற்றுப் படுத்துகிறான். அதை
"தேஎம் தீம் தொடை சீறியாழ்ப் பாண!
..........................................................................
நினைக்க வேண்டா, வாழ்க, அவன் தாளே!"
(புறம்.70: 1–19)
தேன் போன்ற இனிய இசையை அளிக்கும் சிறிய யாழையுடைய பாண! குளத்தில் வாழும் ஆமையை வலியக் கம்பியில் கோத்ததைப் போல் நுண்ணிய குச்சிகளால் பொருத்தப்பட்ட தெள்ளிய கண்ணையுடைய பெரிய கிணையைக் காட்டி இதை இனிதே காண்க. இங்கே சற்று இருந்து செல்க. என்று கூறும் முதுமையும் வாய்மையும் உடைய இரவலனே!.

தை மாதத்தில் தெளிந்த குளிர்ந்த நீரையுடைய குளம் போல் கொள்ளக் கொள்ளக் குறையாத உணவுப் பொருட்களுடைய அகன்ற பெரிய

ISSN : 2581-9712

நகரங்களுடையது கிள்ளி வளவனின் நாடு. அந்நாடு பகைவர்களால் தீக்கிரையாக்கப் பட்டதில்லை. அங்குச் சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தீயை மட்டுமே காணமுடியும். கிள்ளிவளவன், பசிப்பிணியை நீக்குவதற்குத் தேவையான நீர் வளமும் நில வளமும் மிகுந்த நல்ல நாட்டுக்கு அரசன். அவனை நாடி சென்றால் நீ செல்வந்தன் ஆவாய் என்று வழிப்படுத்துகின்றனர்.

**மீன் பிடிக்கும் வழக்கம் கொண்டவர்கள்**

பாணர்கள் தூண்டில் முதலியவற்றைக் கொண்டு மீன் பிடிக்கும் வழக்கமும், பாண் மகளிர் மீனினைக் கொண்டுபோய் விற்று நெல் முதலிய பொருள்களை வாங்கி வரும் வழக்கமும் உடையவர் என்பதனை (முள் எயிற்றுப் பாண்மகள் இன் கெடிறு சொரிந்த – ஐங்குறுநூறு – 47) மேற்கண்ட பாடலில் மூலம் அறியலாம். மேலும்,

"பச்சூன் பெய்த சுவல்பிணி பயந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
.......................................................................................
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை"
(பெரும்: 283–287)

மேற்கண்ட அடிகளின் மூலம் பாணர்கள் மீன் பிடிக்கும் வழக்கமும் உடையவர்கள். எனவே வலித்துக் கட்டின நெடிய மூங்கிலாகிய தூண்டிற்கோல் நடுங்கும்படியாக மீனைத் தப்பாமல் பிடிக்க வல்ல பாணன், மீனைப் பிடிப்பதற்காகப் பச்சிறைச்சி இட்ட பசிய தோற்பையைத் தோளிலே தொங்கவிட்டுச் செல்பவன்.

**பாண்சேரி**

பாணர்கள் வசிக்கும் பகுதி பாண்சேரி என்றழைக்கப்பட்டன. மீன் சீவும் பாண்சேரி (புறம்: 348: 4) என்ற அடிகளின் மூலம் அறியலாம். பாணர்கள் அகநாடுகளுக்குக் கழிகள் மூலமாக மீனைக் கொண்டு சென்று விற்று அதன் விலையாக நெல்லைப் பெற்று வருவர். (மீன் நொடுத்து நெல் குவைஇ (புறம். 343: 1) நெல்லை அரியப் பயன்படுத்திய குருவாள் பாண் சேரியினரால் மீன் சீவுவதற்கும் பயன்படுத்துவர். இக்குறுவாள் இவர்கள் பயன்படுத்துவதால் நெல் அறியும் தொழிலையும் மேற்கொள்பவர்கள் என்பது புலனாகிறது.

**பாணருக்கு அளிக்கப்பட்ட விருந்து**

பாணர்களுக்குப் பேரரசர்கள், சிற்றரசர்கள் மட்டுமில்லாமல் நிலக்குடிகளும் விருந்து வைத்துள்ளனர். அதை,

"படலை முன்றில் சிறுதினை உணங்கல்
.......................................................................................
ஈங்கு இருந்தீமோ, முதுவாய் பாண"
(புறம்:319: 5–9)

தழையால் வேயப்பட்ட குடிலின் முன்னர் உலர்த்தப்பட்டுள்ள சிறுதினையைப் புறாக்களும் இதழ் என்னும் பறவையும் மிகுதியாக உண்பவனாகுக எனத் தூவுவதற்குக் கதிரவனின் ஒளி மங்கும் மாலைப் பொழுது வருவதாயிற்று. அதனால் பாணனே! முயலின் சுட்டக் கறித் துண்டுகளையாயினும் உணவாகத் தருவோம். ஆகையால் அவற்றை உண்பதற்கு எம் இல்லத்துள் புகுந்து இங்கே தங்கியிருப்பீராக. என்று தங்கி உணவருந்திவிட்டுச் செல்லுங்கள் என்று மக்கள் அளித்துள்ள விருந்துகள் குறித்த பதிவுகளும் காணப்படுகின்றன. மேலும்,

"ஆரநெருப்பின் ஆரல் நாற
.......................................................................
தங்கினை சென்மோ, பாண! – தங்காது"
(புறம்: 320: 12–15)

ISSN : 2581-9712

மேற்கண்ட அடிகளின் மூலமும் அறியப்படுகிறது. புன்மையான நிலத்தில் விளைந்த வரகரிசியைப் பாலிலிட்டுச் சமைத்த உணவைத் தேனுடன் கலந்துண்டனர். சிறிய முயலின் கொழுத்த சூட்டிறைச்சியையும் எம் சுற்றத்தினர் உண்டனர். இலந்தை மர உயர்ந்த அகன்ற இடமுடைய மன்றத்தில் மறைக்காத உள்ளத்துடன் உளம் விரும்பும் இனிய மொழிகளைக் கூறிப் பெருந்திரளாகிய கொழுத்த சோற்றினை எம் போன்ற பாணர் உண்டனர். இதை,

"அமலைக் கொழுஞ் சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலா செல்வம் முழுவதும் செய்தோன்" (புறம். 34: 14–15)

மேற்கண்ட அடிகளினால் அறியலாம். பாணர்க்கு நீங்காத செல்வத்தை முழுமையாக அளித்தவர்கள் அரசர்கள். நாடோடி வாழ்க்கை நடத்திய பாணர்கள் தம் சுற்றத்துடன் பல காடுகள், மேடுகள், மலைகள், நீர்நிலைகளைக் கடந்து சென்று அந்நாட்டு மன்னனின் புகழ்பாடி அவனுடைய விருந்தோம்பலை ஏற்றுக் கொண்டு, அவன் அளிக்கும் பரிசிலைப் பெற்று மனநிறைவுடன் செல்வான். இதை,

"காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ
..........................................................................
ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி" (சிறுபாண: 236–245)

ஒருவனது வறுமை நிலையினைப் பிறர் அறிய வெளிப்படுத்துவது அவன் உடுத்திய கந்தல் ஆடையேயாகும். முதலில் அவனது ஆடையை அகற்றிச் செல்வச் சிறப்புமிக்க ஆடை அணிவித்தலையே தம் முதற் கடமையாகக் கொண்டனர். இதை மேலும் (பொருந.80–83, 155) அறியலாம்.

**பேரரசர்கள் கொடைத்திறம்**

"திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புலம் அகற்றி
..........................................................................
அன்றே விடுக்கும் அவன் பரிசில்" (சிறுபாண: 246– 261)

கூதிர்கால வானில் பால்போலும் ஒளியைப் பரப்பி ஊர்ந்து செல்லும் வடிவிலான திங்களைப்போல் தோன்றும், கூறிய சிற்றுளியினால் ஆழ்ந்து செதுக்கின வலிமையான நடுப்பகுதியில் இருந்து பிரிந்த ஆர்களை சூழ்ந்த இரும்பு விளிம்பை உடைய உருளைகளுடன், சிந்துகின்ற அரும்பினையுடைய முருக்க மரத்தின் உயர்ந்து ஓங்கி வளர்ந்த கிளைகளில் சிவப்பு நிறப் பூங்கொத்துகள் முறுக்கு நெகிழ்ந்த தோற்றம் போல உள்ளே ஒடுக்கப்பட்ட செவ்வரக்கு வைத்துச் செய்த மேல் பலகையினையும் உடைய வழியத் தொழிலைப் புரியும் தச்சரின் கைத்தொழில் முற்று பெற்ற பின்னர் ஓட்டம் உண்டு என்ற நல்ல பெயர்பெற்ற அழகிய நடையுடைய தேர் ஒன்றையும் கொடுப்பான். அவற்றுடன் வெள்ளை எருது, குதிரை, பாகனொடு யானை, அணிகலன்கள் போன்றவைகளையும் கொடுத்து வழியனுப்பி வைப்பான்.

**சிற்றரசர்களின் கொடைத்திறம்**

சிறிய ஊரின் தலைவன் ஒருவன் புன்செய் நிலங்களையுடைய சிறிய ஊர்களில் நெல் விளைவதில்லை. அந்நிலங்களில் விளைந்த வரகும் தினையுமாகிய உணவுப் பொருட்கள் யாவும் பசியால் வருந்திய இரவலர்களுக்கு வழங்கியதால் அவை தீர்ந்து போயின. அவ்வாறு தீர்ந்த போதிலும் தன்னை நாடி வந்த பாணர் முதலியோருக்குக் களாப்பழத்தின் புளிப்பினைப் போன்ற உறை

ஊற்றப்பட்ட தயிரோடு காய்ந்த கறித்துண்டுகளை வெண்நெல் அரிசிச் சோற்றோடு நெய் பெய்து துழாவி அட்ட களியினையும் வழங்குவான். உண்ட பிறகு அணிகலன்களையும் அன்பளிப்பாகத் தருவான். பேரரசனைப் போன்று சிற்றரசனும் பாணர்க்கு வழங்குவதில் கொடைத்திறம் மிக்கவனாக இருந்துள்ளான்.

## பாணர்கள் பெற்ற பரிசுகள்

பாணர்கள் பேரரசர்களையும், சிற்றரசர்களையும், நிலக்குடிகள் மற்றும் வள்ளல்களையும் நாடிச் சென்று பாடி, ஆடி மகிழ்வித்துத் தனக்குத் தேவையானவற்றை அன்பளிப்பாகப் பெற்று வந்தனர். இவர்கள் பெற்று வந்த பொருள்களுள் நாணயங்கள், கள், உணவுகள், வெள்ளி நாரால் கோர்க்கப்பட்ட பொற்றாமரை, பொன்னாலாகிய ஆபரணங்கள், உடைகள், ஊர்கள், நாடுகள், எருது, குதிரை, யானை, தேர் போன்றவற்றைப் பெற்றுள்ளனர்.

## முடிவுரை

பாணர்களுக்கென்று தனி இடம், ஊர், நாடு என எதுவும் கிடையாது. அவர்களுக்கு 'யாது ஊரே யாவரும் கேளிர்' என்பதுதான் அவர்களின் வாழ்க்கையாக இருந்துள்ளது. ஊர் ஊராகச் சென்று இயற்கையையும் கடவுளையும் மன்னனையும் நாட்டையும் பற்றிப் புகழ்ந்து பாடி ஆடி மக்களைக் கவர்ந்து அதன் மூலம் கிடைக்கும் பரிசில்களைக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள். இவர்கள் போர்வீரராகவும், படைத்தளபதியாகவும், அரசர்களுக்குக் கருத்துரை கூறுபவராகவும், தகவல் தொடர்பாளராகவும், போர்க்களத்தில் மன்னனின் கவலைகளைப் போக்குபவராகவும், வெற்றியையும் கொண்டாடுபவராகவும், போர்க்களத்தில் பணிசெய்பவராகவும்கூட இருந்துள்ளனர்.

## துணைநூல்கள்

1. பத்துப்பாட்டு,(பகுதி, மூலமும் உரையும், முனைவர் இரா. மோகன்(உரை. ஆ.), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை – 98.

2. ஐங்குறுநூறு, மூலமும் உரையும், முனைவர் அ. தட்சிணாமூர்த்தி(உரை. ஆ.), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை – 98.

3. புறநானூறு, மூலமும் உரையும், முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் (உரை. ஆ.), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை – 98.

4. பாண்பெரியார் மூவர், வித்துவான் சிவ. பார்வதியம்மையார், தஞ்சை மகாலிங்கம் பதிப்பகம், தஞ்சை – 01.

**************************************

ISSN : 2581-9712



# கோதை காட்டிய குறள்நெறி

முனைவர் ந.செ.கி.சங்கீத்ராதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

## முன்னுரை

"வேதமனைத்துக்கும் வித்து" என்று போற்றப்படுவது ஆண்டாளின் அருளிச்செயலான திருப்பாவை. திருமாலை கணவனாக அடைவததற்கு ஆண்டாள் மேற்கொண்ட செயல்தான் பாவை நோன்பு. அதாவது ஜீவாத்மா பரமாத்மாவை அடைவதற்கான அடிப்படைத் தத்துவமே இது. கண்ணனின் அருளைப் பெறுவதற்காக ஆண்டாள் தமது தோழியர்களைப் பாவை நோன்புக்கு அழைக்கிறாள். அச்சமயம் அவள் பாடி அருளியதுதான் திருப்பாவைப் பாசுரங்கள். இத்திருப்பாவைப் பாசுரங்களில் திருக்குறள் கருத்துக்கள் எங்ஙனம் விரவிக்கிடக்கின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சொல்வன்மை

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்" (குறள்.642)

சொல்வன்மை என்பது ஒருவர் சொல்லும்போது கேட்பவரைத் தன் வயப்படுத்தும் பண்புகளுடனும் கேட்காதவரும் கேட்க விரும்புமாறும் கூறப்படுவது சொல்வன்மையாகும். சொல்வன்மை உடையவரே எத்தகைய சிக்கலையும் எளிதில் எதிர் கொண்டு காரியத்தில் வெற்றி பெற முடியும். தமது சொல்வன்மையால் கேட்பவரையும் தன் வயப்படுத்த முடியும்.

இவ்வடிப்படையில் திருப்பாவை பாசுரங்களில் ஆண்டாள் தமது தோழியர்களைப் பாவை நோன்புக்கு அழைப்பதைக் காணலாம். ஒவ்வொரு தோழியரையும் அழைத்து பாவை நோன்பின் சிறப்பையும் திருமாலின் பெருமையினையும் அழகான சொல்லாடல்களால் கோர்வையாக்கி எடுத்துரைப்பது சொல்வன்மைக்குச் சிறந்த சான்றாகும்.

"சீர்மல்கும் ஆயர்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்" (திருப்.1)

"தேசம் உடையாய்" (திருப்.7)

"கோதுகலமுடைய பாவாய்" (திருப்.8)

"ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே!" (திருப்.10)

"புனமயிலே போதராய்" (திருப்.11)

மேற்கண்ட பாசுரங்களில் ஒவ்வொரு தோழியரையும் இனிமையாக அடைமொழி சேர்த்து அழைப்பதோடு மட்டுமல்லாமல், திருமாலின் பெருமைகளையும் எடுத்துரைக்கிறாள். ஆண்டாள் தமது சொல்வன்மையால் தோழியர்களை எழுப்பவதோடு, இன்னும் சிறிது திருமாலின் பெருமையினைக் கூறமாட்டாளா எனத் தோழியர்களையும் ஏங்கச் செய்கிறாள். அதனாலேயே அவர்கள் துயில்வது போல் பாவனை செய்து கிடக்கிறார்கள்.

ISSN : 2581-9712

"கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்" (திருப்.1)
எனக் கண்ணனின் கரிய நிறத்தையும் சிவந்த மலர் போன்ற கண்களையும் தீயவர்களுக்கு சூரியன் போன்று வெப்பத்தையும் அடியவர்களுக்கு சந்திரன் போன்று குளிர்ச்சியையும் அருளிச்செய்பவன் என்றும் ஆண்டாள் எடுத்துரைக்கிறாள்.

"ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கே" (திருப்.3)
என ஆயர் குலத்தினை ஒளி விளங்கச் செய்யத் தோன்றிய விளக்கு என்றும்,

"பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி" (திருப்.6)
என்பதில் தாய் வடிவில் வந்த அரக்கி புதகியின் பாலைப்பருகி அவளை மாய்த்தவன் என்றும் சக்கர வடிவில் வந்த சகடாசுரன் என்ற அரக்கனை காலால் உதைத்து வீழ்த்தியவன் என்றும் கண்ணனது பெருமைகளை ஆண்டாள் தமது சொல்வன்மையால் எடுத்துரைக்கிறாள். அதனால்தான் பாரதி "சொல்வது தெளிந்து சொல்" (பு.ஆ.சூ.34) என்றும் "வாக்கினிலே இனிமை வேண்டும்" (பா.கவி.62) என்றார். ஔவையும் "நயம்பட உரை"(ஆ.சூ.17) என்றார். ஆண்டாளின் இனிமையான உரையாடல்களே தோழிகள் அனைவரையும் பாவை நோன்பிற்கு கூட்டுவிக்கிறது.

**வினைத்திட்பம்**

"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற" (குறள்.661)

ஒரு செயலை இடையில் விடாது செய்து முடிப்பதற்கான செயல் உறுதி என்பது ஒருவனின் மன உறுதியே. மற்றவை உறுதி எனப்படமாட்டாது என்கிறார் வள்ளுவர். ஔவையும் "தூக்கி வினைசெய்" (ஆ.சூ.59) என்கிறார். அதாவது ஒரு செயலைத் தொடங்கு முன்னர் அதைப்பற்றிய தெளிந்த அறிவும் தளராத உறுதியும் வேண்டும் என்கிறார்.

மேற்கூறியதற்கேற்ப ஆண்டாள் தமது பாவை நோன்பிற்கு எவ்விதத் தடைகளும் வந்துவிடக்கூடாது என்றும் அவ்வாறு இடையில் வரும் தடைகளைத் தகர்த்தெறிந்து பாவை நோன்பினை நோற்கும் செயலிலே உறுதியாகவும் இருந்தாள். இவ்விடத்தில் "நோற்பது கைவிடேல்" (பு.ஆ.சூ.64) என்ற பாரதியின் கூற்று போற்றத்தக்கது.

மார்கழி நீராடுவதற்கு நீர் முதன்மையாகும். அதனால் வருணனை வணங்கி வேண்டி அழைக்கின்றாள். நாட்டில் நன்கு மழை பொழிய வேண்டும். மக்கள் மகிழ்ச்சியாக இருத்தல் வேண்டும். மேலும், மாதம் மூன்று முறை மழை பொழியவேண்டும் என்கிறாள். இதனை,

"தீங்கின்றி நாடெல்லாம்
திங்கள் மும்மாரிபெய்து" (திருப்.3)

"தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய்" (திருப்.4)
என்கிறாள். தமக்கு அருள்புரிவதற்கு கண்ணனை வேண்டும். முன்னர் கண்ணனை அருள்புரிய பணிக்குமாறு அவனது தாய்தந்தையரையெல்லாம் வேண்டுகிறாள்.

"எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்" (திருப்.17)
மேலும், நந்தகோபனுடைய வாயிற்காவலனிடம்,

ISSN : 2581-9712

"துயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்ன மாற்றாதே யம்மா நீ" (திருப்.16)

என்று நந்தகோபனின் வாயிற்காப்பாளர்கள் தடுப்பார்கள் என அறிந்து முன்னரே ஆண்டாள் இங்ஙனம் எடுத்துரைக்கிறாள். அதாவது முதன்முதலாக ஒருநல்ல காரியம் (பாவை நோன்பு) நோற்கின்றோம். அதற்கு உமது வாயால் மறுப்பு ஏதும் சொல்லாதே என்கிறாள். இதனைத்தான் பாரதி "கனவு மெய்ப்பட வேண்டும்", "காரியத்தில் உறுதி வேண்டும்"(பா.க.62) என்றார். எத்தகைய தடங்கல் வந்தாலும் தான் மேற்கொண்ட செயலில் இடைவிடாது முடிப்பதற்குரிய சிரத்தையையும் ஆற்றலையும் ஆண்டாள் மேற்கொண்டதை திருப்பாவைப் பாசுரங்களின் வாயிலாக உணர முடிகின்றது.

**வினைத்துய்மை**

"என்றும் ஒருவதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை" (குறள்.652)

புகழையும் அறத்தையும் பெறுவதற்கு ஒருவன் தீராத (துய்மையற்ற) செயல்களை எக்காலத்திலும் ஒருவன் செய்யாமல் விட்டொழிக்க வேண்டும் என்பதற்கேற்ப ஆண்டாள் தாம் மேற்கொண்ட பாவை நோன்பில் நோன்பிற்கு செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை என்று முன்னரே உலகத்தாருக்கு அறிவிக்கின்றாள்.

"நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்" (திருப்.2)

அதாவது நெய், பால் முதலிய சுகபோக உணவு வகைகளை நோன்புக் காலங்களில் உண்ணமாட்டோம், அதிகாலை எழுந்து நீராடி, கண்ணிற்கு மையிடுதல், கூந்தலுக்கு மலரிடுதல் போன்ற புற அலங்காரங்களில் ஈடுபடமாட்டோம், பெரியோர்கள் எதையெல்லாம் செய்யக்கூடாது அறமன்று எனக் கூறியுள்ளார்களோ அதையெல்லாம் செய்யமாட்டோம். மற்றவரைப் பற்றிப் புறங்கூறமாட்டோம். மேலும்,

"ஐயமும் பிச்சையம் ஆந்தனையம் கைகாட்டி
உய்யுமா என்றெண்ணி உகந்தேலோர்" (திருப்.2)

என்பதில் இல்லாதவர்களுக்கு ஈவதே நாம் உய்யக் கூடிய வழி என்றும் கூறுகிறார். ஔவையும் "ஐயம் இட்டு உண்"(ஆ.சூ.9) என்றார். எளியவர்களுக்கு, சாதுக்களுக்கு, தன்னிடம் இரந்து நிற்பவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிதனை அளிக்க வேண்டும். (உணவு, உடை, பொருள்) அதாவது புகழ் தரக்கூடிய அறச்செயல்களை ஆற்றியும் பழி தரக்கூடிய இகழ்ச்செயல்களை விலக்கியும் வைப்போம் எனத் திருக்குறள் கருத்தினைப் பறை சாற்றுகின்றாள் ஆண்டாள்.

**பெரியாரைத் துணைகோடல்**

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்" (குறள்.441)

அறமுணர்ந்த அறிஞர்களின் நட்பைப் பெறும் வகை அறிந்து அதனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதுவே அவனுக்கு வலிமை சேர்க்கும் என்கிறார் வள்ளுவர்.

இக்கருத்தினை ஆண்டாளும் கடைபிடித்தாள். ஆண்டாள் தமது பாவை நோன்பிற்கு கண்ணனிடம் சென்று பறை பெறுவதற்கு முன்னர், பெரியோர்களான

ஆயர்குலத்தின் தலைவன் நந்தகோபன், தலைவி யசோதரை ஆகியோரை வணங்கி வேண்டுகிறாள். இதனை,

"அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யம்
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்!" (திருப்.17)

இதில், மக்கள் உயிர் வாழ்வதற்கு அடிப்டையான நீர், உணவு, உடை ஆகியவற்றை வழங்கி அறச்செயல் ஆற்றுகின்ற அறவோனே என்று நந்தகோபனை வேண்டுகிறாள். இதனையே ஔவையும் "அறம் செய விரும்பு" (ஆ.சூ.1) என்றார்.

"கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குலவிளக்கே
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்!" (திருப்.17)

என்பதில் ஆயர்குலத்தின் விளக்காக இருந்து ஒளிதரக்கூடியவள் யசோதரை என்றும் ஆண்டாள் பெரியோர்களைப் போற்றி உறவு கொள்கிறாள்.

"செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா!" (திருப்.17)

என்று கண்ணனது அண்ணன் பலராமனையும் போற்றி வணங்கித் தமது பாவை நோன்பிற்குத் துணை கோருகிறாள். "பெரியாரைத் துணைகொள்" (ஆ.சூ.82) என்ற ஔவையாரின் வாக்கு இங்கு நினைவு கூரத்தக்கது.

**பழைமை**

"நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்" (திருக்.802)

நட்பிற்கு உறுப்பாவது நண்பனுடைய உரிமைச்செயலாகும். அந்த உரிமைச் செயலுக்கு உடன்பட்டவராதல் சான்றோரின் கடமையாகும். இதனை திருப்பாவைப் பாசுரங்களில் காணலாம்.

ஆண்டாள் தன்னுடைய தோழியரை பாவை நோன்பிற்கு அழைக்கும்போது மிக உரிமையாகப் பேசுகிறாள். எழுந்திராத தோழியைப் பார்த்து நாங்கள் பேசும் சத்தம் உனக்கு கேட்கவில்லையா? பேய்ப்பெண்ணே! என்கிறாள். இதனை,

"பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!" (திருப்.7)

என்றும். மற்றொரு பாசுரத்தில்,

"மாமீர் அவளை எழுப்பீரோ? உன் மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ, அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?" (திருப்.9)

என்பதில், அத்தைப் பெண்ணிடம் பேசும் உரிமையும் கேலியும் கிண்டலும் தொனிக்கக் காண்கிறோம். அழைப்பதற்குப் பதில் தராத பெண்ணைப் பார்த்து ஊமையா? செவிடா? சோம்பேறியா? உறக்கத்திற்கு ஏதேனும் மந்திரவயப்பட்டாளா? என்றெல்லாம் மாறி மாறிப் பேசுகிறாள்.

"வல்லையுன் கட்டுரைகள் பண்டையுன் வாயறிதும்" (திருப்.15)

என்பதில், சாமர்த்தியப் பேச்சுக்காரி உன்னைப்பற்றி நன்கு தெரியும் எமக்கு! என்று வேடிக்கையாகப் பேசும் உலகியல் வழக்கை இங்கு வெளிப்படுத்துவதன் வாயிலாக, நட்பிற்கு உறுப்பாவது நண்பனுடைய உரிமைச் செயலாகும் என்பதைப் பதிவு செய்கிறாள் ஆண்டாள்.

**ஊக்கமுடைமை**

"உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்" (குறள்.592)

ISSN : 2581-9712

ஒருவருக்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும். மற்ற பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும்.

இக்கருத்தினை ஆண்டாள் பாசுரங்களில் அறுதியிட்டுக் காணலாம். ஆண்டாள் பாவை நோன்பு தொடங்கு முன்னரே தோழியர்களிடம் நாராயணனே பரம்பொருள்! அவனே நமக்கு அருள் அளித்துக் காப்பவன்! என உறுதிபடக் கூறுகிறாள். உள்ளத்தில் கண்ணன் மேல் கொண்ட ஊக்கமுடைமை வாக்கினில் உறுதியாக வெளிப்படுகின்றது. இதனையே ஔவையும் "ஊக்கமது கைவிடேல்" (ஆ.சூ.6) என்றார்.

"நாராயணனே நமக்கே பறை தருவான்" (திருப்.1)

இதில் நாராயணனே என்பதிலுள்ள ஏகாரமும் நமக்கே என்பதிலுள்ள ஏகாரமும் அவனைத் தவிர யாரும் நமக்கு அருள் பாலிக்க முடியாது என்பதை அறிதியிட்டுக் கூறுகின்றது.

"போதருமா போலே நீ புவைப்பு வண்ணா உன்
கோயில் நின்று இங்கனே போந்தருளி கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர்!" (திருப்.23)

என்பதில், நாங்கள் உன்னை நாடி வந்திருப்பதால் உடனே ஏதேனும் பொருளைக் கொடுத்தனுப்பாமல், சீரிய சிங்கம் போல நீ எழுந்து வந்து அரசனைப் போல் சிம்மாசனத்தில் அமர்ந்து நீதி முறை செய்து குடிமக்களைக் காத்தருள்வது போல் எங்களது அன்பினை (பக்தி) ஆராய்ந்து குறைகளைக் கேட்டறிந்து பின்னர் எங்களுக்கு அருள்புரிய வேண்டும் என்கிறாள்.

**நிறைவுரை**

சங்க இலக்கியத் தாக்கமின்றி தமிழில் பக்திப் பனுவல் இல்லை எனலாம். அதேபோல்தான் உலகப் பொதுமறையாம் திருக்குறளின் ஒப்பற்ற கருத்துகள் திருப்பாவையில் ஊடுருவி ஒளிரச் செய்கின்றன. பொருட்பாலிலுள்ள கருத்துகள் (வினைத்திட்பம், வினைத்தூய்மை, பழைமை, சொல்வன்மை, பெரியாரைத் துணைகோடல், ஊக்கமுடைமை) திருப்பாவைப் பாசுரங்களில் பொதிந்து கிடப்பதையும் ஆண்டாளின் பாவை நோன்பு செயற்பாட்டில் பதிந்துக் கிடப்பதையும் இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.

**சுருக்கக் குறியீட்டு விளக்கம்**

திருப். – திருப்பாவை
குறள். – திருக்குறள்
பா.கவி. – பாரதியார் கவிதைகள்
ஆ.சூ. – ஆத்திசூடி
பு.ஆ.சூ. – புதிய ஆத்திசூடி

**துணை நின்ற நூல்கள்**

1. தமிழண்ணல் (உ.ஆ) – திருக்குறள், மீனாட்சி புத்தக நிலையம், தானப்ப முதலிதெரு, மதுரை–625001.
2. சொக்கலிங்கம் சு.ந. (உ.ஆ), – திருப்பாவை, பழனியப்பா பிரதர்ஸ். 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 600 014.
3. மெய்யப்பன் ச. (ப.ஆ.) – நீதிநூல் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம். சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை–600108.
4. மெய்யப்பன் ச. (ப.ஆ.) – பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், தென்றல் நிலையம், சிதம்பரம்–608001.

******************************

ISSN : 2581-9712



# சங்க இலக்கியங்களில் அணிகலன்கள்

முனைவர் க.உமாமகேஸ்வரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூ.சா.கோ.அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
பீளமேடு, கோயம்புத்தூர்.

நமது பாரத நாட்டிலே பண்டைக் காலத்திலே ஆண்களும் பெண்களும் நகைகளை அதிகமாக அணிந்திருந்தார்கள். அதிலும் சிறப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் பலவிதமான நகைகளை அதிகமாக அணிந்தனர். அக்காலத்திலே ஆண்களும் பெண்களும் ஆடைகளைக் குறைவாகவும், நகைகளை அதிகமாகவும் அணிந்தார்கள். நகைகளை அதிகமாக அணிந்தவர்கள் நாகரிகமும் செல்வமும் உள்ளவர்கள் என்று மதிக்கப்பட்டார்கள்.

இக்காலத்து ஆண்களும் பெண்களும் பருத்தித் துணிகளையும் பட்டாடைகளையும் கால் முதல் கழுத்து வரையில் அணிந்து உடம்பு முழுவதையும் மறைப்பது போல அக்காலத்து ஆண்களும் பெண்களும் உடம்பு முழுவதையும் மறைப்பது போல அக்காலத்து ஆண்களும் பெண்களும் உடம்பு முழுவதும் உடையினால் மறைக்கவில்லை. செல்வமும் பிரபுக்களும் அரசர்களும் கூட வெற்றுடம்பாக இருந்தார்கள். உடம்பில் சட்டை அணிவதை அநாகரிகமாக அக்காலத்து மக்கள் கருதினார்கள்.

## அணிகலன்கள்

பழங்காலத்து மக்கள் பயன்படுத்திய அணிகலன்கள் நம்நாட்டு சிற்பங்கள், கல்வெட்டுகள் மற்றும் புதைகுழிகளிலிருந்து எடுக்கப்பட்ட நகைகளும், மண்பதுமைகளின் மீது காணப்படும் நகைகளும் அப்பழங்காலத்து அணி வகைகளை நன்கு உணர்த்துகின்றன. அக்கால மக்கள் சோழி வகைகளை அழகுபடக் கோத்துக் கழுத்திலும் அரையிலும் கைகளிலும் கால்களிலும் கட்டிக்கொண்டார்கள். சங்குகளை மிக்க திறமையுடன் சிறிய வட்டங்களாக அமைத்துக் காப்புகளாகவும் முரண்டுகளாகவும் அணிந்தார்கள். விலையுயர்ந்த பச்சை சிவப்புக் கற்களையும் முத்துகளையும் பவழங்களையும் பல வகை நகைகளாகச் செய்து பயன்படுத்தினார்கள். பொன்னாற் செய்யப்பட்ட மணிகளையும் சேர்த்து அணிந்து வந்தார்கள்.

## பெண்கள் அணிந்த அணிகலன்கள்

பண்டைக் காலத்தில் பெண்மணிகள் முதன் முதலில் அணிந்த கையணியாகிய வளையல்களைப் பற்றி கூற வேண்டும். இக்காலத்தில் பொற்காப்பு, தங்க வளைகள், கண்ணாடி வளையல்கள் அணிகிறார்கள். கண்ணாடி வளையல்களை அணிவது முகம்மதியர் நமது நாட்டுக்கு வந்த பிறகு ஏறத்தாழ 500 ஆண்டுகளாக ஏற்பட்ட வழக்கம். பொன் காப்பு நமது நாட்டிலே ஆடவரும் பெண்டிரும் மேலாடை அணியாமல் வெற்றுடம்பினராக இருந்த காலத்திலே அவர்கள் உடம்பு முழுவதும் பலவிதமான நகைகளை அணிந்தார்கள். முக்கியமாக அக்காலத்துப் பெண்கள் தலை முதல் கால் வரையில் உடம்பு முழுவதும்

ISSN : 2581-9712

நகைகளை அணிந்து பொன் சாய்ந்த மரம் போலக் காணப்பட்டனர். பண்டைக் காலத்து மக்கள் வெற்றுடம்பினராக இருந்த காரணத்தினாலே நகைகளை அதிகமாக அணிந்தார்கள் என்றும் காரணம் ஒரு புறம் இருக்க, அவர்கள் அதிகமாக நகைகளை அணிந்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. பொன்னையும் பொருளையும் நம்பிக்கையுடன் பாதுகாத்து வைக்கும் வங்கிகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் தாங்கள் ஈட்டிய பொருள்களைப் பொன்னாலும் வெள்ளியாலும் முத்து, மாணிக்கம் முதலிய நவரத்தினங்களினாலும் நகைகளைச் செய்து உடம்பிலே அழகாக அணிந்து கொண்டார்கள். நம்பிக்கையான சேமிப்பு நிலையங்கள் இருப்பதாலும் கால் முதல் கழுத்து வரையில் பட்டும் பருத்தியும் உடுத்தும் வழக்கம் ஏற்பட்டுவிட்டபடியாலும் அதிகமாக நகைகளை அணிகிற வழக்கம் இப்போது இல்லை. ஆனால் பழைய காலத்தில் பெண்கள் கைகளில் சங்கு வகைகளை அணிந்திருந்தார்கள். வளக என்றால் சடங்கு என்று பொருள். சங்கை வட்டவடிவமாக அறுத்துச் செய்யப்பட்ட சங்கு வகையைப் பண்டைய காலத்தில் அணிந்தனர்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அரசி தன்னுடைய கைகளில் பொன் வளைகளையும் வலம்புரி சங்கு வகைகளையும் அணிந்திருந்தாள் என்று நெடுநல்வாடை கூறுகிறது.

"பொலத்தொடி நின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து"
(நெடுநல்., 141–142)

இதில் அரசர் முதல் ஆண்டி வரையில் எல்லாப் பெண்மணிகளும் அக்காலத்தில் சங்கு வகைளைத்தான் அணிந்து கொண்டார்கள். கைம் பெண்கள் தமது கைகளில் அணிந்த சங்கு வளைகளை உடைத்துவிடுவர். கோவலன் மனைவி கண்ணகியார் தமது கணவன் இறந்த பிறகு தமது கைகளில் அணிந்திருந்த சங்கு வளைகளை உடைத்தெறிந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

### காதணிகள்

முற்காலத்தில் பெரு வழக்கமாக இருந்து இக்காலத்தில் மறைந்து கொண்டிருக்கிற பழைய நகை பாம்படம் என்பது. அது காதுக்கு அணிகிற கனமுற்ற பொன் நகையாகும். காதை குத்தித் துளையாக்கி அத்துளையைக் கடிப்பு எனும் கனமான பொருளினால் பெரிய துளையாக வளரச் செய்து நீண்டு தொங்கும் காதிலே குண்டலம், குழை, தோடு, பாம்படம் முதலிய நகைகளைப் பெண்மணிகள் அணிந்தார்கள். நீண்டு தொங்கும் காதிலே பெண்கள் பாம்படம் அணிந்தால் அது தோள் வரையில் தாழ்ந்து தொங்கக்கூடியதாக இருந்தது. ஆண் குழந்தையானாலும் பெண் குழந்தையானாலும் 5 வயது ஆனவுடன் மயிர் களைந்து காது குத்தும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது.

"முருகப்பெருமான் பொலங்குழையை அணிந்தார்" (முருகு–86)
"விறலி பூங்குழை" (பொ.ஆ.படை., 30)
"ஆயர்மகள் காதுகளில் சிறுகுழை
பாண்டிய நாட்டுச் செல்வமறி ஒண்குழை
அணிந்திருந்தனர்" (மா.கா.அடி 700)

### சிலப்பதிகாரம் உணர்த்தும் அணிகலன்கள்

மேகலை என்பது பெண்மணிகள் அரையில் உடுத்த ஆடையின் மேல் அணியும் நகை. இது 32 முத்து வடங்களினால் பட்டையாக அமைக்கப்பட்ட அழகான அணிகலன் பிற்காலத்தில் இது தங்கத்தினாலும் வெள்ளியினாலும்

ISSN : 2581-9712

செய்யப்பட்ட ஓட்டியாணம் ஆகும். காவிரிப்பூம்பட்டினத்தில் பெயர் பெற்ற நாட்டிய மடந்தையாகிய மாதவி அரையில் நீலப்பட்டாடை உடுத்தி முப்பத்திரண்டு முத்து வடத்தினால் செய்யப்பட்ட மேகலையை அணிந்தாள் என்று சிலப்பதிகாரம் காவியம் கூறுகிறது.

"பிறங்கிய முத்தரை முப்பத்திருசரத்
திற்றிகழ் பூத்துகில் நீர்மையின் உடீஇ"
(சிலம்பு, கடலாடு காதை, அடி 87–88)

கோவலனின் காதற் கிழத்தியாகிய மாதவி தன்னை எவ்வாறு ஒப்பனை செய்து கொண்டாள் என்பதைச் சிலப்பதிகாரம் கடலாடு காதையில் காணலாம்.

"அலத்தகம் ஊட்டிய அஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விரல் நல்லணி செறீஇப்
பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை
சரியகம் காலுக் கமைவுற அணிந்து
தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி
மையீர் ஓதிக்கு மாண்புற அணிந்து"

மாதவி மாண்புற விளங்கினாள் என்று சிலப்பதிகாரம் அணிகலன்களின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. அக்காலத்து மகளிர் அணிந்த அணிகலன்கள் எல்லாம் நேர்த்தியாகவும் அழகாகவும் அணிந்தனர் என்று சிலப்பதிகாரம் விளக்கிச் செல்லுகின்றது.

**செல்வ மகளிர் அணிகலன்**

"... ... பூணொடு
தென்னரியப் பொற் சிலம்பு ஒலிப்ப ஒள்ளழல்
தாவற விளங்கிய ஆய்பொன் அவிரிழை
அணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்"
மதுரைக்காஞ்சி (அடி 443–446)

என்று மதுரைக்காஞ்சி (அடி 443–446) கூறப்பட்டுள்ளது. இவ்வடிகளில் அம்மகளிருடைய காலணியாகிய சிலம்பு, கையணியாகிய தொடியும் தனித்தனியே கூறப்பட்டுள்ளன. பூண் என்றும் இழை என்றும் இருவேறு கையலை வேறு, பூண்வேறு என்று அறிந்துகொள்ள முடிகின்றது.

குறிஞ்சிநிலத் தலைவி அணிந்த அணிகலன்கள் 'முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை நேர் வருகை குரைய கலம்' (கு.பா.அடி 13–14) எனவரும் அடிகள் முத்துகளும் மணி வகைகளும் கொண்ட நகைகள் இருந்தமையை உணர்த்துகின்றன.

சைவ வைணவக் கோயில்களிலே பலவகையான தெய்வ உருவங்களும் மனித உருவங்களும் கல்லிலும் செம்பிலும் செய்து வைக்கப்பட்டுள்ளன. அந்த உருவங்களை ஊன்றிப் பார்த்தோமானால் அச்சிற்ப உருவங்கள் அக்காலத்து மக்கள் ஆண்களும் பெண்களும் அணிந்த நகைகளையும் உடைகளையும் அவற்றில் காணப்படும் உடையின் வடிவமைப்பையும் கலை நயமான சிற்பங்களைக் காணமுடிகின்றது. தலைப் பின்னல் அவற்றில் அணியப்பட்ட அணிகலன்கள் அதன் வடிவமைப்பு இக்காலத்து நகைகளிலும் அதன் வெளிப்பாடு காணமுடிகின்றது. இன்றைய அணிகலன்களிலும் பழமையின் புலமையை உணரமுடிகின்றது.

பழைய ஓவியங்களிலும் இவற்றைக் காணலாம். கலைக் கூடமாக விளங்குகின்ற நமது கோயில்கள் இது போன்ற பல துறை ஆராய்ச்சிகளுக்கும் பயன்படுகின்றன. ஆனால் பொது மக்கள் இந்தச் சிற்ப உருவங்களை ஊன்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம் முன்னோர் அணிந்த அணிகலன் அழகுற வடிவமைத்து இருப்பது நம் கலாச்சாரப் பண்பாட்டை மேலை நாடுகளும் போற்றும் வகையில் இருப்பதை நம்மால் உணரமுடிகின்றது.

ISSN : 2581-9712



# சிலப்பதிகாரத்தில் நீர்நிலைகள்

**முனைவர் ஸ்ரீ. ஸ்ரீஜெயந்தி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
பூசாகோ அரக் கிருஷ்ணாம்மாள் மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர் – 641004.

## முன்னுரை

இயற்கை மனிதவாழ்வோடு பின்னிப் பிணைந்தது. இயற்கை இல்லையேல் வாழ்க்கை இல்லை எனலாம். மனிதன் இயற்கையை விஞ்ச முடியாது. இயற்கையைப் புலவர்கள், பாடுபொருளாகக் கையாண்டுள்ளனர். நிலம், நீர், காற்று, வான், தீ இவை ஐந்தும் ஐம்பூதங்கள் ஆகும். இவைகளில் நிலத்திற்கும் நீருக்கும் அதிகத் தொடர்பு உண்டு.இக்காலக் கட்டத்தில் சமுதாயத்தில் வாழும் மக்கள் நிலைகளில் இவை இரண்டும் இன்றியமையாமையான ஒன்றாகக் காணப்படுகிறது. நீர் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. முதல் காப்பியமான சிலம்பில் நீர் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றன என்பதைச் சிலப்பதிகாரம் காப்பியத்தின் மூலம் அறியலாம்.

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு" (8:1)

எனப் பழந்தமிழகத்தின் எல்லைகளைச் சிலப்பதிகாரப் பாடல் வரிகளால் அறிய இயலுகின்றது. இப்பழந் தமிழ்நாட்டை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இக்காவியத்தின் ஆறுகள், கடல்கள் மற்றும் பிற நீர் நிலைகள் குறித்த செய்திகள், சுற்றுப்புறச் சூழலியல் கல்விக்குத் துணை புரிவதை ஆய்ந்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கியம்

"இலக்கியம் என்பது வாழ்வை வளப்படுத்தவும் நெறிப்படுத்தவும் முயலுகிற ஓர் ஆற்றல் மிக்க துணைக்கருவியாகும். புலவர்கள், சட்டம், இயற்கை, ஆட்சியாளர்கள் மற்றும் தத்துவ ஞானிகளை விட ஆற்றல் மிக்கவர்கள்"1 ஆவர். சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள், "இயற்கையின் முழுமையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இக்காவியத்தைப் படைத்துள்ளார்"2. இயற்கைச் சூழலைப் பின்னணியாகக் கொண்டு, அமைந்திருந்த அக்காலத் தமிழ்ச் சமுதாயச் செய்திகளைப் பற்பலச் சமயச் செய்திகளை உள்ளவாறு எடுத்தியம்புகிறார்.

ISSN : 2581-9712

### சூழ்நிலைத் தொகுப்புகள்

புவிக் கோள் என்பது, "நீர், நிலம், காற்று, வானம், நெருப்பு என்னும் ஐம்பூதங்களின் ஒட்டு மொத்த உருவமைப்பு ஆகும். இவ்வைந்தும் சூழ்நிலைத் தொகுப்புகளின் வகைகள் (Types of Eco system) ஆகும். இப்பூதங்களில் ஏதேனும் ஒன்றுக்கு ஒரு மாற்றம் ஏற்பட்டாலும் அம்மாற்றம் ஏனைய நான்கினது சமநிலையைப் பாதிக்கும்"3. இவற்றில் நீர் சூழ் தொகுப்புகள் (Aquatic Eco system) ஆறு, ஏரி, குளம், நதி முகத்து வாரம், கடல், கானகம், நிலம் வயல், புல்வெளி போன்றவற்றை அடங்கியதாகும். சுற்றுப்புறச்சூழல் காலந்தோறும் மாறிவருகிறது. இவ்வாறு மாறிவரும் சூழல் பிற உயிரினங்களை மட்டுமின்றி மனிதனையும் பாதிக்கிறது. பழந்தமிழகத்தின் சூழலிலும் இத்தகைய மாற்றங்கள் இருந்தமையைச் சிலப்பதிகாரம் போன்ற அக்கால நூல்கள் புலப்படுத்துகின்றன.

### பழந்தமிழக ஆறுகளும் கடல்களும்

சங்கம் மருவிய காலத்தே எழுதப்படச் சிலம்பு, முக்கடல்களையும் முப்பெரும் ஆறுகளையும் கூறுவதுடன், ஆங்காங்கே, பல நீர் நிலைகளையும் குறித்து இயம்புகிறது. புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று பெரிய இடங்களும் முறையோ சோழ, பாண்டிய, சேர மன்னர்களின் தலை நகரங்களாவன, பூம்புகார் நகரம் காவிரி ஆறு வங்கக்கடலில் புகும் புகார்முக இடத்தைச் சார்ந்தும், மதுரை நகர் வைகையாறு மற்றும் குமரிக்கடல் சார்ந்தும் வஞ்சி நகர், பேரியாறு மற்றும் மேலைக்கடலன அரபிக்கடல் சார்ந்தும் அமைந்துள்ளன. இக்கடல்களும் ஆறுகளும் அவ்வந்நிலைப் பகுதிகளின் வளத்திற்கும் நாகரிகத்திற்கும் முக்கியக் காரணிகளாக அமைந்துள்ளன.

### கடல் கோள்

"கவுந்தியடிகள், கண்ணகி, கோவலன் முதலிய மூவருக்கும் மதுரை செல்வதற்கான வழிகளைக் கூறிய மாங்காட்டு மறையவன் தென்னவர்களான பாண்டியர்களின் முன்னோன் ஆகிய வடிப்பலம் நின்ற பாண்டியனைக் குறித்துக் கூறுகிறான். அப்பாண்டியன் வேற்றரசர்கள் பலரை வென்ற வீரத்தினன் அவன் இவ்வாறு போரிட்ட போது, அவன் தன் மீதும் வடிவேல் எறிந்து பெரும் பகையினைப் பொறுக்காது. கடலானது பொங்கி எழுந்து பஃறுளியாற்றுடனே பல மலையடுக்குகளை உடையதான குமரிமலைத் தொடரினையும் அக்கொடிய கடலானது தன்னகத்தே விழுங்கிக்கொண்டது"4 என்ற செய்தியைக் கூறக் காணலாம். "நிலவியலாளும், வரலாற்றாசிரியர்களும் தமிழ்நாடு 'லெமூரியா கண்டம்' என்ற மிகப்பெரிய இடம் சார்ந்த பகுதி என்பது, முதலிரு சங்கங்கள் இருந்த இடங்கள் கடற் கோளுக்கு இரையாயின"5 என்ற கருத்தும் இங்குச் சிந்திக்கத் தக்கதாகும்.

### பழந்தமிழர் வாழ்வியல் – அகவாழ்வு

அக்காலச் சமுதாயத்தில் 'குலமகளிர்', 'கலைமகளிர்' என்ற பாகுபாடு

ISSN : 2581-9712

இருந்து. காவிரி, வையை போன்ற ஆறுகளில் பருவமழைக் காலங்களில் பெருக்கெடுக்கும் வெள்ளங்களில் 'புதுப்புனலாடல்' நிகழ்ச்சி வைதிகச் சமயச் சடங்காச்சாரமாக நிகழ்ந்தது. அவ்வாறே புகார் நகரில் இந்திர விழாவின் ஓர் உறுப்பாகக் கடலாடுதல் நிகழ்ச்சியும் அமைந்திருந்தது. இப்புனல் விளையாடல்களில் கலை மகளிரே பெரிதும் பங்கேற்றுள்ளனர். தேவலோகமெனக் கூறப்படும் ஊர்வசியின் மரபினளான மாதவி, அவளைச் சார்ந்த கணியர், 'கடலாடுகாதை'யில் கூறப்படுகின்றனர். கோவலனைப் போன்ற செல்வந்தர்களான ஆண்கள், இக்கலைமகளிர் தொடர்பு உடையவர்களாயப் புறத் தொழுக்கத்தினராய் இருந்தனர்.

### புற வாழ்வு

அகவாழ்வில் பரத்தமை இருந்ததுபோல், புற வாழ்வின் போர் ஒரு "தேவையற்ற தேவையாக" (un wanted necessity) இருந்து வந்தது. சேர, சோழ, பாண்டியர் ஆகிய முப்பெரும் வேந்தர்களும் தமக்குள் ஒற்றுமையின்றி இருந்ததுடன் குறுநில மன்னர்களுடனும் வடபுலத்தில் இமயம் வரை சென்று வடபுல மன்னர்களுடனும் போர் புரிந்த செய்திகள் சிலம்பிலும் சங்ககாலப் புறப்படல்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன. சான்றாகக் கரிகாலன் தமிழ் நாட்டெல்லையுள் தன்னோடு எதிர்த்துப் போர் புரிவார் இன்மையால், வடதிசையில் பகை பெறலாம் எனக் கருதி, தனது வழிபாடு தெய்வத்தை மனத்தால் வணங்கிச் சென்று, இமையவர் உறைவதாகக் கருதப்படும் இமயமலை வரை போரிட்டு வெற்றிபெற்று, இமயமலை பகையாகக் குறுக்கிட்டு மேற்செல்ல விடாமல் விலக்கியதால், அதனைச் சினந்து அதன் சிகரத்தின் மேல் தனது புலிச் சின்னத்தைப் பொறித்து மீண்டு வந்தான்.

இதேபோன்று, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் போன்ற பிற மன்னர்களும் தங்கள் சுயநலத்திற்காகவும், தங்கள் வீரத்தை உணர்த்துவதற்காகவும் போர் புரிந்தனர் என்ற செய்தியினைச் சிலம்பு உணர்த்துகிறது.

### சேரன் செங்குட்டுவன்

சேரன் செங்குட்டுவனின் இமயச் செலவு 'வஞ்சி காண்டத்தில்' விரித்துரைக்கப்படுகிறது. கண்ணகிக்குச் சிலை அமைப்பது நோக்காயினும், வடபுல மன்னர்களுக்குத் தனது வீரத்தை நிலைநாட்டிக் காட்டவேண்டும் என்ற சினத்துடன், செங்குட்டுவனின் போக்கு அமைந்திருக்கிறது. இமயத்தில் கல்லெறிந்து கங்கை ஆற்றில் நீராடி அக்கல்லைக் கனக விசயர்கள் தலைகளில் சுமந்து சென்று, பின்னர் அவ்வட நாட்டு மன்னர்களைச் சிறையிலிட்டான். இதனைச் சோழனும் பாண்டியனும் "மெய்யான வீரமன்று" என இகழ்ந்தனர் என்ற ஒற்றர் வாயிலாகக் கேட்ட செங்குட்டுவன் மீண்டும் போர் வெறி கொள்கிறான். அப்போது, மாடல் மறையவன் துணிவுடன் போர் நீக்கி நட்பு

ISSN : 2581-9712

கொள்ள வேண்டுவதன் தேவையை உணர்த்துகிறான்.

"மாதவி மடந்தை
காலைப் பணி கனக விசயர் தம்
முடித்தலை நெரித்து" (27:45 – 48)

எனக்கூறிப் பத்தினிக்குக் கல் எடுக்கும் உயரிய நோக்கில் பகையும் போரும் தேவையில்லை என்ற அறத்தினை உணர்த்திய போது, செங்குட்டுவன் சினம் நீங்கிக் கனக விசயர்களைச் சிறை வீடு செய்து அமைதி கொள்கிறான்.

## அறம்

பரத்தமையும் போரும் இயற்கை வாழ்விலன் சீரழிவிற்கு மிகப்பெரிய காரணங்கள் என்பதை இளங்கோவடிகள் நுட்பமாகப் புலப்படுத்துகிறார். கவுந்தியடிகள் என்னும் சமணப் பெண் துறவி மூலம் பெண்களின் ஒழுக்கம் மேம்பாட்டினை உணர்த்துகிறார். கண்ணகி, மாதவி வாழ்க்கையின் அவலங்கள் மூலமாக,

"கற்பு நிலை என்று சொல்ல வந்தாள்
இரு கட்சிகளுக்கும்
அதனைப் பொதுவில் வைப்போம்" 6

என்ற பாரதியின் கருத்திற்கேற்ப ஆண், பெண் இருபாலருக்கும் ஒழுக்கம் இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகின்றார்.

அக்காலப் போர் முறைகளில் பகைபுலத்தாரின் நீர்நிலைகளைப் பாழ்படுத்துவது என்ற வன்முறையும் இருந்தது. மேலும் போர்களில் யானை, குதிரை போன்ற அஃறிணை உயிர்களும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு அழிவுக்கு உட்பட்டன. பசுமாடுகளும் பகைவர்களால் கவரப்பட்டு நிலை உருவாகின. எனவே, அரசனாக இருப்பவர்கள் தங்கள் சுயநலத்திற்காக அடிக்கடி போர்களில் ஈடுபட்டு இயற்கையை மாசுறச் செய்வது தகாதது என்பதை மாடலன் மறையவன் மூலமாக உணர்த்துகிறார்.

## சமய முரண்பாடு

இந்து சமய மரபில் நீர்நிலைகள் தெய்வீகமாகக் கருதப்படுகின்றன. மக்கள் ஆறுகள், கடல்கள் ஆகியவற்றில் மூழ்கினால் புண்ணியம் என எண்ணினர். இந்து சமயக் கோவில்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற அமைவது ஏதேனும் ஒரு நீர் நிலையைச் சார்ந்து இருந்தன. குறிப்பாக வைதீகப் பார்ப்பணர்கள் இமயம் முதல் குமரி வரை தீர்த்தயாத்திரை செய்தனர் என்பதற்குச் சான்றாகச் சிலப்பதிகாரத்தில் மாங்காட்டு மறையவன், மாடலன் மறையவன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

'கடலாடு காதை' இரவிலும் பலவகை விளக்குகளால் ஒளி பெற்று விழாக்காலத்துப் புகார் நகரைக் காட்டுகிறது. அங்கு அரச மாந்தரும், வணிக மாந்தரும் தத்தம் உரிமை மகளிருடன் குழுமியுள்ளனர். ஆடல் மகளிரும் பாடல் மகளிருமாக அவர்கள் விளங்குகின்றனர். நால்வருணத்தைச் சார்ந்த மக்களும் விழா காணும் நோக்கில் வந்து கூடியுள்ளனர். இச்சமய வழிபாட்டு பின்புலத்திற்கு முரணாகக் காமக்களியாட்டர் வீரராக, யாவரும் காணப்படுகின்றனர். கடவுள் பெயரால் நிகழும் இவ்விழா மக்களை

ISSN : 2581-9712

ஒளியற்ற வாழ்வினராக ஆக்கியுள்ளதை, நீண்டு நிரகாச் சிற்றின்ப மணம் வீசி விரைந்தழியும் மலர்கள் அவர்களை அணி செய்கிறது. கறை படிந்து அவர்களின் வாழ்வும், அவர்களின் மலரணிகளும் நதி தீர்த்தங்களை, கடல் பகுதிகளை அசுத்தமாக்கும் குப்பைகளாவதைப்போல இத்தகைய இழுக்குடைய வாழ்வு சமுதாயத்தையும் மாசுறச் செய்கிறது.

**கவுந்தியடிகளின் தீர்வு**

மாங்காட்டு மறையவன், "மதுரை செல்லும் வழிகள் மூன்றினுள் வைதிக நெறியான இடப்புற வழியில் திருமால் குன்றம் மற்றும் அதனருகே புண்ணியச் சரவணம், பவதாரணி, இட்டசித்தி என்னும் சிறப்படைந்த மூன்று பொய்களைக் கொண்டு புலம் ஒன்று உள்ளது என்றும் அப்புறத்தினுள் சென்று பொய்கைகளில் மூழ்கினால் வியத்தகு அரியப் பேறுகளை எய்தலாம் என்றும் உரைத்தான். அப்போது கவுந்தியடிகள், அவ்வாறான கடுமையான முறைமைகள் தேவையில்லை. சமயம் போதிக்கும் ஒழுக்க நெறிகளைக் கடைபிடித்தால் போதும். சிறந்த பேறுகள் தாமாக நம்மை வந்தடையும்"7 என்ற எளிமையாக ஏற்புடைய உண்மையைக் கூறுகிறார்.

**மழை**

மழை மேகங்கள் கடலில் தொடங்கி, மலைகளில் காட்டாறாக, அருவியாக மாறி, நாடுகளில் வளர்நிதியக மாறுவது போலச் சிலப்பதிகாரக் காவியமும் கடல் பகுதியைப் புகார் காண்டத்தில் சிறப்பித்த பின்னர் ஆறுகளைக் கூறி அவை பொய்கை முதலான நீர்நிலைகள் நிறைந்து மீண்டும் கடலிலேயே சென்று சேர்கின்றன என்பதைக் காட்டுகிறது. மனித வாழ்க்கை சுழற்சியும் அது போன்றதே என்ற தத்துவமும் இங்குப் புலப்படுகிறது.

**உரைபெறு கட்டுரை**

சிலப்பதிகாரக் காவியத் தொடக்கமாக அமைந்துள்ள 'உரைபெறுகட்டுரை' பத்தினி வழிபாடு மழைவரம் தரலைச் சுட்டுகிறது. கண்ணகியால் எரியூட்டப்பட்ட பின்னர்ப் பாண்டிய நாடு மழைவறங்கூர்ந்து ஆயிரம் பொற்கொல்லர்களைப் பலியிட்டு நங்கை விழாவொடு அமைதி செய்து நடுவழிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது. அதனைக் கேள்வியுற்றுக் கொங்கிளங் கோசர், கடல் சூழ் இலங்கை கயவாகு வேந்தன், சோழன் பெருங்கிள்ளி ஆகியோரும் பத்தினிக் கடவுளாக ஏற்கப்பட்ட கண்ணகிக்கு விழா எடுத்தனர்.

**மங்கல வாழ்த்துக் காதை**

கோவலன், கண்ணகி ஆகியோரின் திருமணத்தில் பாடப்பெறும் மங்கல வாழ்த்துப் பாடலில் இருபெருஞ்சுடர்களைச் சூரியன், நிலம் மற்றும் புகழுடன் மழையும் போற்றப்படுகிறது.

ISSN : 2581-9712

### கவுந்தியடிகளின் கூற்று

கண்ணகியை அடைக்கலமாக மாதரியின் ஒப்படைத்த போது, கவுந்தியடிகள் கற்புடைய பெண்ணான கண்ணகி போன்றவர்கள் இருக்கும் நாட்டிலேயே,

"வானம் பொய்யாது வளம் பிழைப்பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது" (15:145–146)

என்று கூறுகிறார்.

### சேரன் செங்குட்டுவன் கூற்று

கண்ணகியினால் மதுரை நகர் தீக்கிரையாகியது என்பதைக் கேட்ட சேரன் செங்குட்டுவன் அரசியலாட்சி மிகக் கடினமான செயற்பாடுகளைக் கொண்டது எனக் கூறுகையில், 'மழை வளம் கரப்பின் வான் பேச்சரம்' எனக் குறிப்பிடக் காணலாம். மன்னன் சீரிய நெறியில் ஆட்சி செய்யாவிட்டால், இது போன்ற பிடியில் அகப்பட்ட நேரிடும் என்ற நம்பிக்கை அக்காலச் சமுதாயத்தில் நிலவியது. தமிழ்நாட்டில், "சேர, பாண்டிய, சோழ அரசுகள் ஒவ்வொன்றும் ஒரு வள நதியை உடையதாக இருந்தன. அவற்றை அரச மரபினரின் துணைவி அல்லது மகள்"8 என்று கருதும் மரபும் இருந்தது.

### புகார் நகர ஆறு, கடல் காட்சிகள்

புகார் நகரம் காவிரி ஆற்றின் வட கரையில் அமைந்திருந்த துறைமுகப்பட்டினம் ஆகும். சிலப்பதிகார நாயகன், நாயகியின் பிறந்த மண், கண்ணகியின் தந்தை மாநாயகன் கடல்வழி வாணிகன். கோவலனின் தந்தை மாசாத்துவான் தரைவழி வாணிகன். எனவே, தான் கோவலன் இரு நிதிக்கிழவன் எனக் கூறப்படுகிறான்.

### காவிரி

கோள்கள் நிலை மாறினாலும் காற்று மோதும் குடகின் உச்சி இடத்திலே கார் மழையானது பெயலாகிய வளத்தினைச் சுரக்கும். அதனால் அக்குட மலைக்கண் தோன்றிக் கொழுவிய பல பண்டங்களுடன் வந்து கடல்வளன் எதிர்த்து மோதும் வண்ணம் புகாரைக் குத்தியிடிக்குமாறு விரைந்து வருகிற காவிரி புதுநீர், மதகுவாய்த்தலைக்கண் கதவின் மேலாக எழுந்து வீழ்கின்ற ஒலியே எங்கணும் கேட்கும்.

பன்றிப்பத்தர், பூட்டைப் பொறி, ஏற்ற, இறைகூடை போன்றவற்றின் ஓசை அங்கு இல்லை. ஏனெனில், காவிரியின் மிகுதியான நீர்தானே வந்து மருத நிலங்களில் எல்லாம் சேர்கிறது. இத்தகைய வயல்களில் செந்நெல்லும் கரும்பும் சூழ்ந்த இடத்தினை உடைய நீர் நிலை செறுவிடனித்தே பொலிவுடை தாமரைக் காட்டின் கண், சம்பங்கோழியும், கனைக்கும் குரலை உடைய நாரையும், செங்கால் அன்னப்புள்ளியும் பசிய காலினையுடைய கொக்கும், கானாங்கோழியும், நீர்காக்கையும், உள்ளானும், குளுவையும், புள்ளும், பெரு நாரையும், வெற்றி காணும் வேந்தர் பெருக்கின்ற பெருகளம் போலப் பலவகையான ஓசைகளை எழுப்பியது.

ISSN : 2581-9712

இத்தகைய ஓசைகளையும் இயற்கை காட்சிகளையும் கவுந்தி அடிகள், கண்ணகி, கோவலன் ஆகியோர் கண்டும் கேட்டும் மதுரையை நோக்கிப் பயணம் செய்தனர்.

### காவிரி – பத்தினிப் பெண்டிர்

கண்ணகி, பாண்டியன் நெடுஞ்செழியனிடம் தனது புகார் நகரைச் சேர்ந்த ஏழு பத்தினிப் பெண்டிரைக் குறித்துக் கூறும்போது கடல் மற்றும் காவிரி ஆற்றைச் சார்ந்த நிலையில் இரு பெண்டிரைக் குறிக்கிறாள். கரிகால் வளவனின் மகளான ஆதிமந்தி தனது கற்பு திறனால் கடலில் மூழ்கிய தனது காதலனை, மீண்டும் கடல் தந்துவிட மகிழ்ந்தாள்.

"கல் நவில் போனாயோ என்ன கடல் வந்து

முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக் கொண்டு

கொடி போந்தார்" (21:10–15)

வணிகம் காரணமாகக் கணவன் கடலிடைப் பிரிந்தமையால் அவன் மீண்டும் வருளவும் ஒரு பெண் கல்லாக மாறி விட்டாள்.

பொன்னியாறாம் காவிரிக்கரையில் மணற்பாவை செய்து விளையாடிய போது, அதனைத் தோழியர் 'உன் கணவன்' என விளையாட்டாகச் சொன்னதால், அங்குத் திடீரென வெள்ளம் வந்தபோதும் அம்மணற்பாவை விட்டகலாது அப்பெண் இருந்தாள். காவிரியின் நீரலைகள் அவளையும் அம்மணற் பாதையையும் அடித்துச்செல்லாது ஓரமாக ஒதுக்கிச் சென்றது.

ஆறும் கடலும், அவற்றிடையே வாழும் குலமகளிரைக் கற்புத் திண்மையுடன் உடையராய் மாற்றி உள்ளமையைக் காணலாம்.

### நெய்தல் கானல்

'கடலாடு காதை'யில் கோவலனும் மாதவியும் கடற்கரையிடத்தே அமர்ந்த இடத்தில் 'கடற்புலவு சுமந்து மடற்பூந்தாழை மணத்தை ஆசிரியர் முரண்சுவைப்படக் கூறிப் புறத் தொழுக்க வாழ்வின்' என்ற அவலநிலையைக் குறிப்பதாகச் சுட்டுகிறார்.

### கோவலன் பாடும் கானல் வரி

காவிரியைக் கோவலன் அரசு நிலையிலிருந்து காண்கிறான். சோழ மன்னன் வடபுலத்தை வென்று கங்கை ஆற்றைத் தனக்குரிய தாக்கினாலும் காவிரி கற்புடைய மாதரைப் போன்று புலத்தனைச் செய்யாது. இங்குக் கண்ணகியைக் கோவலன் எண்ணிப்பாடுவதை உணரலாம்.

"கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல், கயற்கண்ணாய்

மங்கை மாதர் பெருங்கற் பென்றறிந்தேன் வாழி காவேரி" (7:3–4)

கோவலனும் மாதவியும் பாடும் கானல் வரிப் பாடல்கள் நெய்தல் நிலம் சார்ந்த அகப்பாடல்களாக அமைந்தது. அவரவர் உளப்பாங்கு உள்ளுறையாகப் புலப்படுகிறது.

ISSN : 2581-9712

**கோவலன் பாடிய பாடலுக்குச் சான்றாக ஒரு சில காட்சிகள்**

கோவலன் 'வெண்சங்கைக் கண்டு மதியென மயங்கி ஆம்பல் மலர் மலர்ந்தது' எனக் கூறுவது மாதவியைக் குறித்த அவரது தவறான எண்ணத்தையும் கண்ணகியின் உயர்வை உணரும் மனநிலையையும் உணர்த்துகிறது. கோவலன் மாதவியோடு வாழ்ந்த வாழ்வு நிலை இல்லாதது. ஆற்றோரத்தில் சிறுமி கட்டிய மணல்வீட்டு வாழ்க்கையாக அது அமைந்தது என்பதைக் கோவலனின் சார்ந்த வரிப்பாடல் உட்கொண்டுள்ளது.

"மோது திரையான் மொத்துண்டு போந்தசைந்த முரல் வாய் சங்கம்

மாதர் வரி மணன் மேல் வண்டலுழுகழிப்ப மாழ்கி" (7:7)

**மாதவியின் கானல்வரிச் சான்றுகள் சில**

மாதவியின் கானல் வரிப் பாடலில் மயில், குயில் ஆகிய பறவைகள் காவிரிப் பின்புலத்தில் மகிழ்வனவாகக் குறிப்பிடப்படுகின்றன.

"பூவார் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்

காமர் மாலை யருடைய நடந்தாய் வாழி காவேரி" (7:26–27)

மாதவி, காவிரியைக் குடும்ப உணர்வோடு, தாய்மையும், பிள்ளைப்பேறு உணர்ந்தவளாகக் காண்கிறாள்.

"வாழியவன்றன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி

ஊழியுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி" (7:28–29)

மாதவி பாடும் அகத்துறைப் பாடல்களில் தலைவனைப் பிரிந்து நெய்தல் நிலத் தலைவியின் பிரிவினால் நேர்ந்த இரங்கற் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

"அம்மென் இணர அடும்புகாள் பிறரால் அன்னங்கள்

நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டோம்" (7:32–33)

**வையை**

சமூக மரபினைப் பின்பற்றிக் காவிரியைப் போன்று வையையும் மங்கையாகக் கவிஞர் உருவாக்கியுள்ளார் காவேரியை நிலையில் காட்டி வையை புறநிலையில் காட்டுகிறார்.

"வையை 'உலகு புரந்தூட்டும் உயர் பேர் ஒழுக்கத்துப்

புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி" (12:68–70)

எனப்படுகிறது. உயர்வானதும் பெருமை உடையதுமான ஒழுக்கம் பெண்ணுக்குப் பெருமை என்ற கருத்து இங்குப் பொதிந்துள்ளது.

**தற்குறிப்பேற்றம்**

ஆசிரியர் இளங்கோவடிகள் கரை மரங்களில் மலர் பெருக்கால் பூவாறெனும் படியாக அமைந்த வையை தனது கண்ணீராகிய நீர்ப் பெருக்கினை மறைக்கிறது என்கிறார். அதற்குக் காரணம் கண்ணகிக்கு மதுரையில் வர இருக்கும் துயரத்தை அது முன்னறிந்து அவ்வாறு விளக்குகிறது எனத் தற்குறிப்பேற்றமாகக் கூறுகிறார். மேலும் தேன் நிறைந்த

ISSN : 2581-9712

தென்றலில் அசைந்தமையும் நீர் மலர்கள், கண்ணகிக்கு நேரவிருக்கும் துயரை அறிந்து நடுங்கிக் கண்ணீர் வடிப்பவனாகக் கூறுகிறார். அதுபோன்றே, காற்றில் அசையும் கொடிகள் ‘கோட்டைக்குள் வரவேண்டாம்’ எனக் கைமறிக்கின்றன என்கிறார்.

**பேரியாறு**

வஞ்சி காண்டத்தில், சேர நாட்டுக் குறிஞ்சி நிலத் தலைவி, அவளது தலைவனின் குன்றிடத்தை எல்லாம் கடந்து வந்து விழும், அருவி புனலில் நீராடுகிறாள். புதுப்புனல் பெருக்கெடுத்துக் காட்டாறாக ஓடி வருகிறது. அவருடைய தலைவனின் இருப்பிடம் சார்ந்த மலையிடத்தைத் தீண்டி வருகின்ற அப்புனல், தலைவியாகிய பொன்னை நாடி வருகிறது. அதே வேளையில் மலையிடத்தே விளைந்த பொன்னோடு கலந்தும் வருகிறது. மலர்க்கூட்டத்தை அள்ளி வரும் அப்புனல் இருபுறங்களிலும் தழுவியும் வருகிறது. இவ்வாறு அது கல்லையும், பொன்னையும், பொருளையும் புனிதப்படுத்துகிறது.

இத்தகைய அருவியின் சிறப்பினை, இக்குறிஞ்சி தலைவி உணர்த்தும் போது, அவளுடைய தலைவனிடம் அவள் கொண்ட காதலின் சிறப்பினையும் உணர்த்தி விடுகிறது. அருவி நீரினால் புறந் தூய்மையுடன் அகத் தூய்மையான களவுக் காதல் கற்பில் முடிய வேண்டும் என்ற அவளின் ஒழுக்கச் சிறப்பினையும் உணர முடிகிறது.(24:4–6)

கோவலன், மாதவி, கண்ணகி ஆகியோரின் சிற்றின்ப வாழ்வு கழிந்த சூழலில் கோவலனும் கண்ணகியும் அமரர் உலகு அடைந்த பேரின்பச் சூழலில் ஆசிரியர் இக்குறிஞ்சி நிலச்சூழலை அமைத்துள்ளார். இக்குறிஞ்சி நிலத் தலைவி, இறைவனின் அருட்புனலில் ஆடும் உயிர் போல விளக்குகிறாள்.

**காட்சிக் காதை**

சேரர்களின் வேந்தனான செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றான். தனது தேவியான வேண்மாளுடன் ஆயமகளிர் மற்றும் பரிவாரங்கள் சூழ வந்து பெரியாற்றங்கரை சேர்ந்தன. ஆற்றல் மிகுந்த வேலினை உடைய இந்திரன், வானர மகளிரோடு, பொழில் விளையாட்டயர விரும்பி, அழகான பூங்கா வினையும், நீர் மிகுந்த ஆற்றுப் பரப்பினையும் நீர் வளங்களையும். ஆற்றிடைக் குறையும் பரப்பி, ஒரு நூற்று நாற்பது யோசனை அளவாக விரிந்து விளங்குமாறு அமைந்த, தன் பெருமதம் கொண்ட களிற்றின் மேல் ஏறிச் சென்றாற் போலச் செங்குட்டுவனும் சென்றான் என உவமையகிறார்.

கோங்கம், வேங்கை, சரக்கொன்றைச் சுரபுன்னை, மஞ்சாடி, சந்தனம் ஆகியவை உதிர்த்த பொதுப் பூக்களின் பரப்பினால் ஒழுகும் தன் உடலை ஒலித்துக்கொண்டு மதுரசம் ஞிமிறு வண்டினம் ஆகியவை இசைபாடி திருமாலின் மார்பிலே விளங்கும் போன்று பெரியமலை குறித்த ஆற்றின் கரை கண்ட

ISSN : 2581-9712

மணல் மேட்டில் மேட்டின் எடுத்து அவர்கள் அனைவரும் ஒன்று கூடி இருந்தனர். இத்தகைய அழகிய இயற்கை சூழலில்தான் தலையாய கற்புடைய கண்ணகிக்குக் கோவில் அமைக்க வேண்டும் என்ற செங்குட்டுவனின் எண்ணம் கருக்கொண்டது.

### ஆறுகளைக் கடத்தல்

'ஆறு' என்பதற்கு 'வழி' என்ற பொருளும் உண்டு. வாழ்வுக்கு இன்றியமையாத நீர்நிலையைக் கடத்தல் அவற்றின் நூல்கள் போன்ற செயல்கள் குறியீட்டு பொருள் உடையனவாகும். ஒரு நிலையில் இருந்து பிறிதொரு நிலைக்குச் செல்வதை ஆறு கடத்தல் காட்டும். மதுரை நோக்கிய மூவர் செல்லவும் வையைக் கரை வழியாகக் கொண்டு திருச்செங்கோட்டுக்கு நேரான கண்ணகியின் பயணமும் வாழ்க்கையின் முடிவு அல்லது நிறைவுக்கு நேரான போக்கும் ஆகிறது.

### சிற்றூர்கள்

மதுரை செல்லும் வழியினை அடையாளம் காணச் 'சிலம்பாறு' என்ற ஓர் ஆறு மாங்காட்டு மறையவன் கட்டப்படுகிறது. வஞ்சி மாநகரில் ஆன் பொருநை ஆற்றின் நீர் அங்கு நீராடியவர்கள் மற்றமையை காணலாம். நீர் ஆடியோ பயன்படுத்திய வண்ணம் கண்ணனும் மலர்கள் ஆகியவற்றின் நிறங்கள் கலந்த வானவில் போன்று தோன்றியதாக இளங்கோவடிகள் கூறுகிறார். மேலும் மாடல் மறையவன் சேரன் செங்குட்டுவனுக்கு அறங்களை அறிவித்தபோது பொருநை நதியில் 'மனத்தால் அனையாய் வாழிய' எனக் காணலாம்.

### பொய்கைகள்

சிலம்பின் பொய்கைகள் பல குறிக்கப்படுகின்றன. மழை நீரினால் என்ற கொள்கைகளை அக்காலகட்ட மழைநீர் சோம காலங்கள் என்று குறிப்பிடலாம் பொய்கையில் நிறைவது. மக்களின் விவசாயம் போன்ற பலவகைப் பயன்பாடுகளுக்கு உதவியாக இருந்ததுடன் நிலத்தடி நீர் வற்றாது இருக்கவும் நாட்டின் வளம் குன்றாது இருக்கவும் இவை முக்கியப் பங்காற்றின.

### ஐவகை மன்றங்கள் இலஞ்சி

புகார் நகரின் மீவியல்பு வாய்ந்த ஐந்து மன்றங்களுள் ஒன்றான இலஞ்சி மன்றம், கூனர் குறளர், ஊமையர், செவிடர், உடல் அழுகும் தொழுநோயாளர் ஆகியோர் மூழ்கி நீராடிய அளவிலே, பழுதில்லாத தோற்றத்தைக் கொண்ட நல்ல உருவத்தைப் பெற்று, வலஞ் செய்து தொழுது செல்கின்ற பொய்கையை உடையதாக இருந்தது. (5:118/212)

### சுனை நீர்

வஞ்சி காண்டத்தில் சுனை நீரில் சிறப்பு சொல்லப்படுகிறது. "பவக்காரணி" போன்று பழம்பிறப்பு உணர்த்துவதாக இச்சுனை நீர் அமைகிறது.

**சுற்றுச்சூழல் மாசுபாடு**

மானிடப் பண்பாடு தொடங்கிய காலத்திற்கு முன்னரே மனிதன் சுற்றுச்சூழலில் குறிப்பிடத் தொடங்கினார். உலகில் நிகழும் பல்வேறு வகை மாசுபாட்டிற்கும் அடிப்படை சான்று "மனிதனுடைய செயல்பாடு எனக் கூறினால் மிகையாகாது. அதற்கு முக்கியக் காரணம் மனிதச் சுயநலம்"9 ஆகும்.

**நீர்**

மனிதனின் நடவடிக்கையினால் நீர் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தன்னுடைய தூய்மைத் தன்மையை இழக்கிறது. இதனால் பிற உயிரினங்களும் பெருத்த பாதிப்பை அடைகின்றன. சிலப்பதிகாரக் காலத்தில் கூறப்படும் பலவகைப் பறவையினங்கள், தாவர இனங்கள் கொஞ்சங் கொஞ்சமாக நாகரிக வளர்ச்சி என்ற பெயரில் அழிக்கப்பட்டன.

**முடிவுரை**

எல்லா வகை மாசுபாட்டையும் ஒழுங்குபடுத்தவும், சுத்திகரிக்கவும் கூடிய திறன் இயற்கைக்கு இருந்தாலும், அளவுக்கு மீறிய மாசுபாடுகளை இயற்கை ஒழுங்குபடுத்திக் கொள்ள இயலது. நமது வளர்ச்சி என்பது சுற்றுச் சூழ்நிலை பங்கப்படுத்தாமல் நிகழவேண்டும். வளர்ச்சி திட்டங்கள், இயற்கை சார்ந்ததாகவும் நிலைத்த பயனைத் தருவதாவும் அமைய, தொலை நோக்குப் பார்வை உடையனவாய் இருத்தல் வேண்டும். இளங்கோவடிகள் இயற்கையையும் அதன் ஒரு கூறான மனிதனையும் வளப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் உரியப் பற்பலச் சிந்தனைகளின் விவாத மேடை போன்று இக்காவியத்தைப் படைத்து, என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய, நெடிய பயனுள்ள சிந்தனை யாது? என்ற தீர்வினை வாசகர்களுக்கு விட்டுவிடுகிறார்.

**குறிப்புகள்**


1. J. C Shairp, Aspects of Poetry, p.105. மு வரதராசன் 'இலக்கிய மரபு' – ப.45.

2. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், இளங்கோவன் இலக்கிய உத்திகள். ப.4.

3. பேராசிரியர்கள் குழு, சுற்றுச்சூழல் கல்வி, ஈ.வெரா கல்லூரி, திருச்சிராப்பள்ளி, ப.42.

4. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, காடுகாண் காதை, 11.19–20, ப.289.

5. கே.கே பிள்ளை, தமிழக வரலாறும் பண்பாடும், ப.6.

6. பாரதியார் பாடல்கள், பெண்கள் விடுதலைக் கும்மி, ப.359.

7. சாமுவேல்தாசன், சவுந்த, ப.42.

8. Xavier.S, Thaninyagam Landscap and Poetry - A study of Nature Classical Tamil Poetry, II Edition– 1966, ப.68.

9. பேராசிரியர் குழு, ஈ.வெரா கல்லூரி, சுற்றுச்சூழல் கல்வி, ப.53.


**************************

ISSN : 2581-9712



# திருஞானசம்பந்தரும் சைவமும்

**முனைவர் து.சவிதா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி
கோவை.

வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்க வேண்டிய ஏடுகள் திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலம். தமிழராகப் பிறந்தவர்களும் தமிழைப் பயின்றவர்களும் பாக்கியசாலிகள். ஏனெனில் பெறுவதற்கு அரிய வானுலகத்தைப் பெறப் பக்தியுடன் உள்ளம் உருகத்தான் பாடிய பாடல்களைப் பாடினாலே போதும் என்று சொல்லக்கூடிய அற்புதச் சம்பந்தரின் பாடல்கள் தமிழ் மொழியில் தானே அமைந்திருக்கிறது. நாளும் கோளும் நமக்கில்லை. எந்நாளும் நன்னாளே என்பதை ஆணித்தரமாகப் பிரகடனப்படுத்தும் திருஞானசம்பந்தரைப் போன்ற மாபெரும் கவிஞர். 16 வயதில் தன்னைச் சார்ந்தவர்களுடன் இறை சோதியில் ஐக்கியமான இன்னொரு சிறப்புப்பிறப்பை மனிதகுல வரலாற்றிலேயே பார்க்க முடியாது.

## சிவபாத இருதயர் – பகவதியார் தவம்

சோழ நாட்டிலே வளஞ்சிறந்து விளங்கும் பகுதிகளுள் ஒன்று சீர்காழி. அத்திருப்பதியில் சிவபாதவிருதயர் என்றொரு வேதியர் இருந்தார். அவர் பகவதியார் என்ற பெண்மணியைத் திருமணம் செய்து இல்லறம் நடத்தி வந்தார். இருவரும் சிவபெருமானிடத்திலும் சிவனடியாரிடத்திலும் திருநீற்றினிடத்திலும் பேரன்பு வாய்ந்தவர். அந்நாளில் தமிழ்நாட்டில் பௌத்தம், சமணம் என்னும் இரு சமயமும் முறை பிறழ்ந்த வகையில் ஆக்கம் பெற்றிருந்தன. மறை நெறியும் திருநீற்று நெறியும் அருகி இருந்தன. அந்நிலை சிவபாதவிருதயருக்கு துன்ப மூட்டிற்று. அதனால் அவர் செந்நெறியை ஓம்பவல்ல ஒரு புதல்வரைப் பெற விரும்பினார். விருப்பம் மேலீட்டால் அவர் சிவபெருமானை நோக்கித் தவசி கிடந்தார். தவத்தின் பயனாகப் பகவதியார் கருவுற்றார்.

## பிள்ளையார் பிறப்பு

கோள்கள் நன்னிலையில் நிற்கும் வேளையில், திருவாதிரைத் திருநாளில், நெறி தழைத்தோங்கவும், தென்னாடு சிறக்கவும், தமிழ் ஆக்கமுறவும், எதிர்காலம் நலம் பெறவும் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கவல்ல பிள்ளையார் பிறந்தார். பிள்ளைப் பேறு குறித்துச் சிவபாதவிருதயர் செய்யத்தக்க கடமைகளைச் செவ்வனே செய்தார்.

ISSN : 2581-9712

**ஞானப்பால் உண்டமை**

தடங் கருணைப் பெருங்கடல் ஆகிய சிவபெருமான் பிள்ளையார் அது பழம் தொண்டை கருதி அவருக்கு அருள்புரியத் திருவுளம் கொண்டார். கொண்டு உமையம்மையாருடன் மழவிடை மேல் கவர்ந்து, பொய்கைக் கரை நண்ணினார். சிவபெருமான், உமையம்மையாரை திருநோக்கஞ்செய்து "உன் முலைப்பாலை ஒரு கிண்ணத்தில் கலந்து இவனுக்கு ஊட்டு" என்று கூறியருளினார். உமையம்மையார் அப்படியே சிவஞானப் பாலமுதை ஊட்டிப் பிள்ளையாரின் அழுகையைத் தீர்த்தார். பிள்ளையார் தாய் தந்தையர் ஆகிய பராசக்தியும் பரமசிவன் ஆளுமையால் அவர் ஆளுடைய பிள்ளையார் ஆயினார். சிவஞானப்பாலுண்டமையால் சிவஞானசம்பந்தர் ஆயினார்.

"நின்ன முதங்குழைத் தருளி
உண்ணடிசில் என ஊட்ட
உமையம்மை எதிர் நோக்கும்
கண்மலர் நீர் துடைத்தருளிக்
கையிற் பொற்கிண்ணமளித்
தண்ணலைஅங் கழுகைநீர்த்
தங்கண்ணார் அருள் புரிந்தார்"
(பெ.பு–பா.1970)

**முத்துச்சிவிகை முதலியன பெறல்**

திருநெல்வாயில் அறத்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் பிள்ளையார் காலால் நடந்து வந்த வருத்தத்தைத் திருவுள்ளத்திற் கொண்டார். சிவபெருமான் ஒவ்வோர் பார்ப்பனர் கனவிலும் தோன்றி ஞானச்சம்பந்தன் நம்பால் அணைகிறான். முத்துச் சிவிகையும், முத்துச் சின்னமும் முத்துக்குடையும் எடுத்துச்சென்று அவனுக்குக் கொடுங்கள் என்று அருளினார். வேதியர் எல்லாரும் விழித்து எழுந்தனர். எழுந்து ஒருங்கே ஆலயத்தில் திரண்டனர். கனவு உண்மை பெண் ஆச்சரிய முற்றனர். திருப்பள்ளி எழுச்சி காலம் வந்தது. அன்பர்கள் திருக்காப்பு நீக்கினார்கள். முத்துச்சிவிகையும் முத்து சின்னமும், முத்துக் குடையும் காணப்பட்டன. அன்றிரவு சிவபெருமான் ஆளுடைய பிள்ளையார் கனவிலும் தோன்றி நம் ஆணைப்படி முத்துச்சிவிகை முதலியன உனக்கு வரும் அவைகளை ஏற்றுக்கொள் என்று திருஞானசம்பந்தர்ப் பெருமான் தான் கண்டக் கனவைத் தந்தையாருக்குத் தெரிவித்து வெண்ணீறு அணிந்து அஞ்செழுத்து ஓதி இருந்தார்.

"சோதி முத்தின் சிவிகை சூழ் வந்து பார்
மீது தாழ்ந்து வெண்ணீற்றொளி போற்றி நின்று
ஆதியா அருள் ஆதலில் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்" (பெ.பு–பா.2119)

சூரியன் உதயமானான். ஆனால் சிவ நாம முழக்கத்துடன் அறத்துறை பார்ப்பனர் முத்துச்சிவிகை கொண்டு வந்தார். அவர் பிள்ளையாரைக் கண்டு வணங்கி இவைகளை ஆண்டவன் திருவருள் ஏற்று அருள்க என்று முறையிட்டார். திருஞானசம்பந்தர்ப் பெருமான் எந்தை ஈசன் என்னும் திருப்பதிகத்தைப் பாடித்

ISSN : 2581-9712

திருவருளை வியந்தார். அருள் வடிவாகிய முத்துச் சிவிகையில் வலம்வந்தார். அதை வணங்கினார். அதில் ஏறியருளினார். முத்துக்குடை நிழற்றியது. முத்துச் சின்னங்கள் திருஞானசம்பந்தர் வந்தார். ஆண்டவனைத் தொழுது பதிகம்பாடி அப்பதியில் தங்கினார். அறத்துறை அடிகளை வணங்கி விடைபெற்றுப் புறப்பட்டார். வழியில் பல திருப்பதிகளுக்குப்போய் ஆண்டவனை வழிபட்டுத் திருசேய்ஞலூருக்கு சென்றார்.

**உபநயனம்**

திருஞானசம்பந்தருக்கு உபநயனப் பருவம் வந்தது. பார்ப்பனர் சடங்குகளைச் செய்ய முற்பட்டார். காளி பெருமான் வைதிகன் தழைக்க நூலணிந்தார். பார்ப்பனர் நான்மறை ஓதும் உரிமையைத் தந்தோம் என்று மந்திரங்களை முழங்கினார். மறைகளை எல்லாம் ஓதாது உணர்ந்த பெருமான் பார்ப்பனருக்கு எல்லாவித மறைகளையும் அவைகளின் அங்கமாகிய பல கலைகளின் பொருளையும் அறிவுறுத்தினார். பார்ப்பனர் ஆளுடைய பிள்ளையாரைத் திருவருட்செல்வர் என வியந்து சிவமே என்று கருதி அவர் திருவடியில் விழுந்து வணங்கினார். பிள்ளையார் அவருக்கு மந்திரங்களையும் உபதேசித்தார் முடிவில் எல்லா மந்திரங்களுக்கும் தாயகம் பஞ்சாட்சரம் என்பதைப் பார்ப்பனர் உணருமாறு "துஞ்சலுந்துஞ்சல்" என்னும் பதிகத்தைப் பாடினார். பார்ப்பனர் மகிழ்வெய்திப் பிள்ளையாரை வணங்கிச் சென்றார்.

**முயலகன் நோய் தீர்த்தல்**

திருஞானசம்பந்தர் காவிரியின் வடகரைபோய்த் திருப்பாச்சிலாச்சிராமத்தை நோக்கினார். அங்கே 'கொல்லிமழவன்' என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு புதல்வி உண்டு அவள் முயலகன் என்னும் நோயால் பீடிக்கப்பட்டதனால் அரசனுக்குக் கவலை உண்டாயிற்று மணிமந்திர அவுடதம் முயற்சிகள் செய்யப்பட்டன பயன்கள் விளையவில்லை. கொல்லிமழவன் சைவ வழி வந்தவன் ஆகையால் அவன் சிவன் சந்நிதி முன்னே தனது அருமைப் புதல்வியைக் கிடத்தினான். அவ்வேளையில் அவன் திருஞானசம்பந்தர் வருகையைக் கேள்விப்பட்டான். அவரை எதிர்கொண்டு அவரை வணங்கினான். பிள்ளையார் அவனுக்கு அருள் செய்தார். பின்பு அவனுடன் சென்று உணர்விழந்து கிடந்த பெண்ணைப் பார்த்தார். என்ன இது என்று கேட்டார். கொல்லிமழவன் வள்ளலாரை வணங்கித் தன் மகள் முயலகன் என்னும் நோயால் பாதிக்கப்பட்டிருப்பதைச் சொல்லி வருந்தினான் ஆளுடைய பிள்ளையார் சிவபெருமானைச் சிந்தித்து.

"துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர் சடை சுற்றி முடித்துப்
பனி வளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிடமும் பலி தேர்வர்..
... விவர் மாண்பே"

(மு. திருமுறை–பா.470 பக்– 74)

என்று பாடியருளினார். உடனே அக்கன்னியின் பிணி நீங்கிற்று. கொல்லிமழவன் பெருமகிழ்வு எய்திப்

ISSN : 2581-9712

புதல்வியோடும் பிள்ளையாரை வணங்கினான். பிள்ளையார் அவர்களுக்கு அருள் செய்து அங்கே சிலநாள் தங்கிப் பின்பு கொங்குநாட்டின் மேற்பால் நோக்கிக் காவிரிக்கரையின் தென்கரை சென்று அங்கிருந்து கொண்டு திருநணா போய்த் திரும்பினார்.

**நளிர் சுரம் போக்கல்**

அந்நாளில் மாரிக்காலம் போய்ப் பனிக்காலம் வந்தது. குளிர் மிகுந்த நேரத்தில் நளிர் சுரத்தின் கொடுமை அடியவர் பிள்ளையாருக்குத் தெரிவித்தார். பிள்ளையார் நிலத்தின் இயல்பு இது நம்மை ஒன்றும் செய்யாது என்று,

"அவ்வினை கிவ்வினையாமென்று
சொல்லுமஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும்
முந்தமக் கூனமன்றே
... திருநீலகண்டம்" (மு.தி– பா 1249, பக்–194)

என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அந்நளிர்சுரம் அந்நகரில் மட்டுமின்றி அந்நாட்டை விட்டுச் சென்றது. திருஞானசம்பந்தர் சின்னாள் அப்பதியில் தங்கி அங்கிருந்து திருப்பாண்டிக் கொடுமுடி, திருவெஞ்சமாக்கூடல், திருக்கருவூர் முதலிய திருப்பதிகளுக்குப் போய் இறைவனைப் பாடி வழிபட்டார்.

**முத்து பந்தர் பெறல்**

பிள்ளையார் திருவலஞ்சுழியை விடுத்துத் திருப்பழயாறை நோக்கினார். திருவாறை மேற்றளி, திருச்சத்தி முற்றம் என்னும் தலங்களுக்குச் சென்று திருப்பட்டீச்சுரத்துக்கு புறப்பட்டார். அப்பொழுது வெப்பம் அதிகமாக இருந்ததால் அதைத் தணிக்க ஒரு சிவபூதம் பிள்ளையார் திருமுடி மீது முத்துப்பந்தல் பிடித்தது. பிடித்து இது பட்டீசர் திருவருள் என்று இயம்பிற்று. அவ்வுரையும் முத்துப்பந்தரும் வானத்திலே தோன்றின. ஞானப் பிள்ளையார் ஆனந்தம் அடைந்து திருவருளை வியந்தார். பூமியிலே விழுந்து வணங்கினார், அடியவரின் பந்தரின் காம்பைத் தாங்கிக் காழிப்பெருமான் திருப்பட்டீச்சரத்தை அடைந்து சிவபெருமானைத் தொழுது தேவாரம் பாடினார்.

**விடந் தீர்த்து மணஞ் செய்வித்தல்**

திருமருகல் திருக்கோயில் புறத்தே ஒரு மடம் உண்டு. அம் மடத்திலே ஒருநாள் ஒரு வணிகன் ஒரு கன்னியோடு வந்தான். அன்றிரவு அவன் அங்கே துயின்றான். அச்சமயத்தில் ஒரு பாம்பு அவனைத் தீண்டியதால் இறந்தான். அங்கிருந்த கன்னி அவனைத் தீண்டாமல் கதறலனாள். அவள் கதறலைக் கேட்டு மாந்திரிகரில் ஒருவர் மணி மந்திர ஔஷதங்களைப் பயன்படுத்திப் பார்த்தார். விடம் இறங்கவில்லை. கன்னியானவள் மிக்க துயருடன் என் ஆருயிரே! அமுதே! கருணைக்கடலே! மருகற் பெருமானே!

ISSN : 2581-9712

என்று வேண்டிப் புலம்பினாள். அப்புலம்பல் ஓசை திருஞானசம்பந்தர் சுவாமிகளுக்குக் கேட்டது. அக்கன்னியின் துயர் தீர்க்க எழுந்தருளி வந்தார். பின்பு அவளைப் பார்த்து நீ சிறிதும் அஞ்சாதே. நிகழ்ந்தது என்ன என்று அவள் கதையைக் கேட்டார். கேட்டு அவள் நிலை உணர்ந்து திருமருகற் பெருமானைச் சிந்தித்து,

"சடையா எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய்த் தகுமோ இவள்உள்மெலிவே"

(திருஞா.தேவ.இரா.தி.பா.எண்:1655, பக் 261) என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார். உடனே வணிகன் உயிர் பெற்று எழுந்தான். எழுந்து பிள்ளையாரை வணங்கி நின்றான். அன்பர் கூட்டம் முழக்கமிட்டது. இளம்பெண் எல்லையில்லா மகிழ்ச்சி எய்தினாள். பிள்ளையாரைத் தொழுதாள். ஞானசம்பந்தப் பெருமான் அவ்விருவருக்கும் மணம் செய்வித்தார். பின்னே பிள்ளையார் அவருக்கு விடைகொடுத்து அத்திருப்பதியில் எழுந்தருளியிருந்தார்.

**திருக்கதவை திறத்தலும் அடைத்தலும்**

வழக்கப்படி திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் முன்னும் பின்னுமாகத் திருமறைக்காடு சேர்ந்தனர். அங்குள்ள அடியவர் இருவரையும் எதிர்கொண்டு வரவேற்றனர். இருவரும் அடியவர்களுடன் திருக்கோயிலுக்குச் சென்றனர். அங்கே திருக்கதவு மூடப்பட்டு இருப்பதைக் கண்டனர். இஃதென்ன என்று அடியவரைக் கேட்டனர். இத்திருகதவை பூசித்து திருக்காப்பிட்டன. அன்றுதொட்டு இது மூடப்பட்டிருக்கிறது. வேதத்தை ஓதித் திறப்பார் ஒருவரும் இங்கே வரவில்லை. தொழுகைக்குச் செல்வோர் வேறு ஒரு வாயில் கோலி அதன் வழியாகச் செல்கிறார் என்று அடியவர் சொன்னார். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசு சுவாமிகளை நோக்கி, 'அப்பரே இந்த நேர் வழியாகவே நாம் போய் இறைவனைத் தொழுதல் வேண்டும். ஆதலால் கதவு திறக்க நீரே பாடும்' என்றார். திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடத்தொடங்கினார். கதவு திறந்து கொள்ளவில்லை. அவர் திருக்கடைக்காப்பு சாத்தியதும் கதவு திறந்து கொண்டது. இருவரும் உள்ளே போய் இறைவனைத் தொழுது பாடி ஆடி வெளியே வந்தனர். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் பார்த்துத் திருக்கதவு நாள்தோறும் திறக்கவும் அடையவும் வழக்கத்தில் வருதல் நலம். ஆகவே இத்திருக்கதவை அடைக்க நீர் பாடும் என்றனர். திருஞானசம்பந்தர்,

"சதுரம் மறைதான்
துதிசெய்துவணங்கும்
மதுரம் பொழில்சூழ்
மறைக்காட்டுறைமைந்தா
இது தன்கிறைவைத்
தருள் செய்க எனக்குன்
கதவங் திருக்காப்பு
கொள்ளுங் கருத்தாலே"

(இரா.தி.பா–1862, பக்: 280)

என்று பதிகத்தைத் தொடங்கினார். உடனே திருக்கதவு அடைத்தது. ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகத்தைப் பாடி முடித்தார். எல்லோரும் வியப்பும் ஆனந்தம் எய்தினர். அன்று முதல் திருக்கதவு திறக்கப்பட்டு அடைக்கப்பட்டும் வருகிறது. இருமுது குரவரும் திருமடத்தை அடைந்தனர்.

### காழி சேரல்

திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டில் நிகழ்ந்தவற்றை எல்லாம் அப்பர் சுவாமிகளுக்குச் சொன்னார். அப்பர் சுவாமிகள் தமது தொண்டை நாட்டு பயணத்தைப் பிள்ளையாருக்கு விளக்கிக் கூறினார். திருநாவுக்கரசர் பிள்ளையாரிடம் விடைபெற்றுப் பாண்டியநாடு நோக்கினார். பிள்ளையார் திருநெய்த்தானம் திருவையாறு திருப்பழனம் முதலியவர்களை வணங்கி வழிபட்டுச் சீர்காழியைச் சேர்ந்தார்.

"உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருண் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல் விழி காய்வது காமனையே
பெற்றுமுகந்தது கந்தனையே
பிரமபுரத்தை யுகந்தனையே"

(இரா.தி.பா.1862, பக்–280)

எனும் திருப்பதிகம் பாடினார். பின்னே தந்தையாருடன் இல்லம் போந்து இனித்திருந்தார்.

### முடிவுரை

திருஞானசம்பந்தர் தம்முடைய அவதாரத்தில் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். இதில் முத்துச்சிவிகை பெறல், உபநயனம், முயலகன் நோய் தீர்த்தல், முத்துப்பந்தர் பெறல், விடம்தீர்த்து திருமணம் செய்வித்தல், திருக்கதவைத் திறத்திலும் அடைதலும் ஆகிய நிகழ்வுகளை மட்டும் இக்கட்டுரையின் வாயிலாக அறிந்தோம்.

### பார்வை நூல்கள்


1. பன்னிரு திருமுறை மூலமும் உரையும், தொகுப்பாசிரியர் ஜீசா முரளி, 66, செங்குந்தர் வீதி, சோழமங்கலம், சென்னை–600, 109, மு.பதிப்பு – 2008.

2. நாயன்மார் வரலாறு, தி.ரு.விக, பூம்புகார் பதிப்பகம், முதற்பதிப்பு – மார்ச்1994.

3. சிவானந்த தேசிகர், சைவச் சித்தாந்தச் சாரம் கழகப் பதிப்பு, சென்னை–1934.

4. சுப்பிரமணியபிள்ளை.கா.ப், இலக்கிய வரலாறு கழக வெளியீடு, சென்னை–1953.

5. சுப்புரெட்டியார்.ந, சைவசித்தாந்தம் ஒரு அறிமுகம், பாரி நிலையம், சென்னை–1984.

6. சிங்காரவேலன்.சொ, மூவர் தேவாரம் இரண்டு பார்வைகள், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, முதற் பதிப்பு–1987.

ISSN : 2581-9712

7. சதாசிவ பண்டாரத்தார்.டி.வி, சைவ இலக்கிய வரலாறு(கிபி 250–600) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1950.

8. சதாசிவ செட்டியார்.கே, திருக்கைலாய ஞான உலா, கழக வெளியீடு, சென்னை. 1925.

****************************************

ISSN : 2581-9712



# நீர்மேலாண்மையில் தமிழர்களின் அறிவியல் நுட்பம்

**முனைவர் ஜெ.கவிதா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பூ.சா.கோ.அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
பீளமேடு, கோயமுத்தூர் – 641004

## முன்னுரை

"நீர்இன்று அமையாது உலகெனின்" (குறள் –20) என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, ஐம்பூதங்களில் ஒன்றான நீரின் முக்கியத்துவத்தையும், உலக உயிரிகள் அனைத்தும் முதன்முதலில் நீரில்தான் தோன்றியது என்றும், எல்லா உயிர்களுக்கும் நீரே முக்கியமான சான்றாகவும் உள்ளது. இந்த நீரின் பயன்பாட்டையும் சங்க இலக்கிய மக்கள் எவ்வாறு பயன்படுத்தினர், எந்தெந்த முறையில் பயன்படுத்தினர், நீரை எப்படியெல்லாம் அறிவியல் நுட்பத்துடன் மேலாண்மை செய்தனர், என்பதை இக்கருத்து பேழை மூலம் அறிந்துகொள்ளலாம்.

## திருக்குறளில் நீர் மேலாண்மை

திருவள்ளுவர் நீரின் முக்கியத்துவத்தைக் கருதி 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தை வைத்து அதில் மழைநீர், ஆற்றுநீர், குளத்துநீர், கிணற்றுநீர் என நீரின் பயன்பாட்டு அமைப்புமுறை உருவாக்கி, நீராதாரத்தைத் தமிழ்மக்கள் தொன்றுதொட்டு எவ்வாறெல்லாம் பயன்படுத்தினர் என்பதைக் கீழ்வரும் குறட்பா மூலம் அறியலாம்.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"
(குறள் –11)

மக்கள் மழைநீரைச் சேமித்து, சேமித்த நீரைத் திறம்படப் பயன்படுத்தி விவசாயத்தைத் தழைக்கச் செய்தனர்.

## சிலப்பதிகாரம் கூறும் மழைநீரின் புகழ்

வள்ளுவன் கூறியதைப்போல இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தில் நீரின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறியுள்ளார்.

"இடியுடைய பெருமழை எய்தா ஏகப்
பிழையா விளையுள் விளையுள் பெருவளம் சுரப்ப
மழைபிணித்து ஆண்ட மன்னவன்" (சிலம்பு 26–28)

இப்பாடலும், "மழைபிணித்து ஆண்ட மன்னவன்" என்பதன் பொருள். முறையாகப் பெய்யும் மழைநீரை ஏரி, குளங்களில் சேமித்து அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்தி நிலவளம் மற்றும் நீர்வளம் இவற்றைப் பெறச் செய்து ஒரு நாட்டை வளப்படுத்தவே கடமையாகவும், அதுவே அவனுக்கு, நாடு போற்றும் புகழாகும் என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

ISSN : 2581-9712

**பெரிய புராணத்தில் குடிநீர்த்திட்டம்**

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் மக்களுக்குத் தொண்டு செய்து வாழ்ந்து வந்தார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றும் கூறியுள்ளார்.

"குள நிறைந்த நீர்த்தடம் போல்
குளிர் தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழர்தரு
தண்ணீர்பந்தர்"
(பெரியபுராணம் – நாவுக்கரசர் புராணம் – பா.வரி. 1787)

மேற்கண்ட பாடலில் மக்கள் செல்லக்கூடிய வழிகள் மற்றும் ஊர்தோறும் கிணறு, குளம், ஏரி, தண்ணீர் பந்தல் போன்றவற்றை அமைத்தும், மக்கள் குடிப்பதற்கு "குடிநீர்த் திட்டம்" என்ற அமைப்பும் ஏற்படுத்தினார். மழை வரும் நாளில் மழைநீரைச் சேகரிக்க மழைநீர் சேமிப்பு முறையையும், இந்த நீர் அமைப்பு முறையில் சேகரித்தனர். இதன்மூலம், சங்ககால மக்கள் மழைநீர் சேகரிப்பும், குடிநீர்த் திட்டமும் பயன்படுத்தி வந்தனர் என்பதைத் திருநாவுக்கரசர் பாடல் மூலம் நாம் அறிவோம்.

"புணர் தன்னையும் பொன்னிநல் நதி
மிக்கநீர் பாய்ந்து
நன்னெடும் பெரும் தீர்த்த முன்றுடைய
புனிதமாக்குதோர்
நலஞ்சிறந்தது வளம் புகார் நகரம்"
(இயற்கை நாயனார் புராணம்–404)

என்ற பாடலை மருதநில அமைப்பிற்கு ஆற்றுவளச் சான்றே சிறந்த நீர்வளமாகும். அவ்வாறு இருக்கையில் காவிரியின் அதிக நீர் பாய்தலால் நாட்டில் உள்ள வயல்கள் எல்லாம் வளம் பெருகி மக்கள், சிறப்புற்று வாழ்ந்தனர் என்பதனைப் புகார் நகரம் எடுத்துரைக்கின்றது.

**அகநானூற்றில் குளங்களைப் பாதுகாக்கும் மன்னர்கள்**

"பெருங்குளக்காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில்
மறந்தனளே" (அகம் –25: 6–7)

என்ற பாடல் வரியில் பனியிலும், மழையிலும் அடர்ந்த இருள்சூழ்ந்த நள்ளிரவிலும் உறக்கம் மறந்து குளம், ஏரி, கண்மாய் போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கும் பாதுகாவலன் போல் மன்னர்கள் இருந்தார்கள் என்பதை அழகான உவமையுடன் ஒப்புநோக்கப்படுகிறது. சிறு குழந்தையைத் தாயானவள் கண்ணை இமை காப்பதுபோல், நீர்நிலைகளை உறக்கம் துறந்து மன்னர்கள் பாதுகாத்தனர் என்பதனை இப்பாடல் மூலம் விளங்குகிறது.

**நீர் மேலாண்மையில் அறிவியல் சிந்தனைகள்**

சங்கப் புலவர் கபிலர் எந்த வடிவில் ஏரியானது இருக்க வேண்டும் என்பதைக் கூறுகிறார்.

"அறைம் பொறையும் மணந்தாய
எண்நாள் திங்கள், அணையக்
கொடுங்கரைத்
தென்நீர்ச் சிறுகுளம் கீழ்வதுமாதோ
தேர் வன் பாரிதன் பறம்பு நாடே" (புறம்–118:1 – 4)

கபிலரின் நண்பரான பாரி மன்னனது பறம்பு மலையில் உள்ள ஏரியின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டுமெனில் சந்திரனின் எட்டாம்பிறை வடிவில் இருக்க வேண்டும். இந்த ஏரிக்கரையின் நீளம் குறைவாகவும், அதிக நீர் கொள்ளளவு கொண்டதும், பாதுகாப்பானதாகவும் அமைந்திருக்க வேண்டும். இதன்மூலம் சங்ககால மக்கள் ஏரியின் வடிவமைப்பானது எவ்வாறு இருக்க வேண்டும் என்ற அறிவியல் கண்ணோட்டத்துடன் வடிவமைத்துள்ளனர்.

ISSN : 2581-9712

அது மட்டுமில்லாது உடையாத ஏரிக்கரைகளை உருவாக்கவும் கற்றறிந்தனர். ஏரிக்கரைகளின் நீர் கசிவைத் தடுப்பதற்காக, அப்பகுதியில் கிடைக்கும் மண்ணோடு மண்ணை இறுக்கும் சில பொருட்களைச் சேர்த்து அரைத்து 'அரைமண்' என்ற பெயரில் மண் கலவையை உருவாக்கி நீர் கசிவை அடைத்தனர். அப்படிப்பட்ட இந்த அரை மண்ணைத் தான் தற்போது சிமெண்டு என்று சொல்கிறார். இதற்கு எடுத்துக்காட்டாக வீராணம் ஏரியில் புதிய மதகு ஒன்றை அமைப்பதற்குக் கரையை வெட்டிய போது அந்த அரைமண் கலவைப் பாறைபோல் இறுகி இருந்ததைப் பார்க்கும்போது, சங்கத் தமிழரின் அறிவியல் சிந்தனை வியப்பூட்டும் வகையில் இருந்தது.

### சுருங்கைப் பற்றிய அறிவியல் செய்தி

மணிமேகலையில் பன்னிரண்டாம் காதையான 'அறவாணர் தொழுத காதை' என்னும் பகுதியில் புத்ததேவன் தோற்றம் பற்றி கூறவரும் கூலவாணிகன் சாத்தனார் சுருங்கைப் பற்றியும் கூறியுள்ளார்.

"பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும் பெரு நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்படு நல்லறம்
உளமலி உவகையோடு உயிர் கொளப்புகும்"
(மணிமேகலை – அறவாணர் தொழுதக்காதை–12:1384 – 87)

சுருங்கை என்பது பூமிக்கடியில் செல்லும் சிறிய நீண்டக்குழாய். இதனைத் தூம்பு என்றும் அழைப்பர். 'தூம்பு' என்பது 'தூம்புகை' என்றும் பின்னாளில் தும்பிக்கை என்றும் மாறிற்று. யானையின் தும்பிக்கை போன்ற அமைப்பைக் கொண்டே தூம்பு குளத்தில் உள்ள நீரைக் குளக்கரையின் அடிப்பகுதி வழியாக வெளியே எடுத்துச்செல்ல இந்தத் தூம்பு பயன்படுகிறது. இந்தத் தூம்பானது மூங்கில், பனை மரங்களால் வேயப்பட்டுப் பூமிக்கடியில் சுரங்கவழியில் நீரானது எடுத்துச் செல்லப்பட்டது. சுரங்கத்தின் வழியே சென்றதாலும் கை போன்ற அமைப்பைக் கொண்டுள்ளதாலும் இதனைச் சுரங்கை என்று அழைத்தனர். மேற்கண்ட பாடலில் பெருங்குளத்தின் இருமருங்கில் சுரங்கைச் சிறுவழியாக அமைத்து நீரைப் புகுத்தினர். சுரங்கையின் பயன் என்னவென்றால் நீரானது குளத்தில் விரைவாக நிரம்பும்போது குளக்கரை உடைந்து போகாமல் இருக்கவும், உபரிநீரைப் வெளியேற்றவும், நீரை பங்கீட்டு முறையில் பகிரவும், குளக்கரைப் பாதுகாப்பாக இருக்கவும், நீர் வீணாகாது தடுக்கவும் இந்தச் சுரங்கை அமைப்பு முறை பயன்பட்டது. இதுவே தற்போதுள்ள நிலத்தடி நீர்குழாய்களுக்கு முன்னோடியாக இருந்துள்ளது என்று சொன்னால் மிகையாகாது. இவ்வாறு சங்க இலக்கிய மக்கள் அறிவியல் நுட்பத்தின் நீர் மேலாண்மையைக் கையாண்டு வந்தனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

### கற்சிறை(கல்லால் ஆன அணை)

சங்க இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சியில் கற்சிறைப்பற்றி கூறப்பட்டுள்ளது.

"வருவுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்து
ஒன்னா ரோட்டிய செருப்புகல் மறவர்"
(மதுரைக்காஞ்சி – 725–726)

மேற்கண்ட பாடல்களில் ஆசிரியர் மாங்குடி மருதனார் பெருகிவரும் பேரியாற்று வெள்ளத்தைக் கற்சிலைகொண்டு தடுப்பதுபோல் தம்படைத்தாண்டி வருகின்ற பகைவர்களைத் தடுத்து நிறுத்தி அழிக்கும் அரண்களாக வீரர்கள் இருந்தனர் என்பதை

ISSN : 2581-9712

இப்பாடல் வரி விளக்குகிறது. இதில் கற்சிறை என்பது வெள்ளம் நிறைந்த நீரைக் கற்களால் கொண்டு சிறைப்படுத்தினான் கரிகாலன். காவிரி ஆற்றில் நீரானது கரைபுரண்டு ஓட அவற்றைத் தடுத்து நிறுத்திக் கற்களால் ஆன கற்சிறை ஒன்றை உருவாக்கினான். நீரானது வீணாக ஓடிக் கடலில் சேராமல், விவசாயத்திற்காக நீரைப் பயன்படுத்தக் கற்சிறை ஒன்றை ஏற்படுத்தினான். அதுவே பின்னாளில் கல்லணை என்றானது. அதாவது (கல்லால் ஆன அணை கல்லணை) என்றும் அழைக்கப்பட்டது. இந்த அறிவியல் நுட்ப உண்மையை 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ‘சர் ஆர்தர் காட்டன்’ என்ற ஆங்கிலப் பொறியாளர்தான். கல்லணையின் இன்னொரு பெயரான கிராண்ட் அணைக்கட்டு என அழைத்து அவ்வணை உருவாவதற்குரிய காரணத்தையும் கண்டறிந்தார். மணற்பாங்கான காவிரி ஆற்றுப்படுகையில் கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி இருகற்களுக்கு இடையில் அரைமண் என்ற தண்ணீரில் கரையாத களிமண் பசையைப் பூசிக் கற்களின் பிணைப்பை வலுவானதாகவும், இறுகச்செய்தும் இந்தக் கல்லணையை உருவாக்கினான் கரிகாலன். தொழில்நுட்பத்தையும் பறைசாற்றுவதாக உள்ளது என்று சொன்னால் மிகையாகாது. இதுவே உலகநாடுகளுக்கு எல்லாம் நீர் அணையைக் கட்டுவதற்கு முன்னோடியாகவும் உள்ளது.

**பட்டினப்பாலைக் கூறும் உறைக்கிணறு**

கிணறு தோண்டும் போது மண் சரிந்து விடாமல் இருக்கக் கிணற்றிற்கு உறைகள் இடும் பழக்கம் இன்றும் காணப்படுகிறது. கிணறு தோண்டுதலில் உள்ள நுட்பம் சங்காலம் தொட்டு இன்றளவும் நடைமுறையிலிருப்பது சங்க மக்களின் தொழில்நுட்ப அறிவினைப் பறை சாற்றக்கூடிய வகையில் அமைகின்றது. பட்டினப்பாலையில் இந்த உறை கிணறு பற்றிக் குறிப்பு உள்ளது.

“உறைக் கிணற்றுப் புறச்சேரி”
(பட்டினப்பாலை –76)

கிணறு அமைக்கும் போது அதனை ஆழமானதாகவும் அகலமானதாகவும் அமைப்பர். மண்ணைத் தோண்டிக் கொண்டு கீழ்நோக்கிச் செல்லும் போது மேலே மண் சரிந்துவிட வாய்ப்புண்டு. குறிஞ்சி, முல்லை போன்ற நிலங்களில் இதற்கு வாய்ப்பில்லை. இந்நிலங்கள் மலைப்பாங்கானதாகவும், அடர்ந்த காடுகளுடனும் காணப்படுவதால் மண் இறுகிப் போய் இருக்கும் எளிதில் சரியாது இறுக்கமாகக் காணப்படும். ஆனால் நெய்தல் நிலம் மணற்பாங்கான நிலம் இந்நிலங்களில் கிணறு தோண்டினால் தோண்டத் தோண்ட மணல் சரிந்து விழாமல் இருக்கக் கிணற்றிற்கு உறைகள் அமைத்துள்ளன. இந்த உறைகள் எல்லாம் அரைமண் கொண்டு உருவாக்கப்பட்டது.

**மணிமேகலையும், தொல்காப்பியமும் கூறும் கற்சிறை**

“சிறையும் உண்டோ செழும் புனல் மிக்குழீ”
(ஔவை துரைச்சாமி பிள்ளை (உ.ஆ)மணிமேகலை–5:19)
என்றும்,
“வருவிசைப்புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமையானும்” (தொல் – பொருள். புற –8)
என்ற பாடல் வரிகளானது சங்க மக்கள் நீரைத் தடுக்கக் கரும்பின் கழிகளையும், மணல் மூட்டைகளையும் பயன்படுத்தியுள்ளனர். அதற்கும்

ISSN : 2581-9712

கட்டுப்படாமல் நீர் மிகுந்ததால் கல்லாலான தடுப்பைப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் இதனையே தொல்காப்பியமும் குறிப்பிடுகின்றது.

**நீர்நிலைகளிலிருந்து நீரை வெளியேற்றும் கட்டுமான நுட்ப அமைப்புகள்**

குளங்களில் சேமித்த நீரைப் பயன்பாட்டிற்காக வெளியேற்ற மதகு, மடை, புதவு, குமிழி போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி இருந்தனர்.

**புதவு**

'புதவு' என்பது நீர் மோதக்கூடிய இடமாகச் சங்க இலக்கியங்களில் கட்டப்பெறுகின்றது.

"இழுமென ஒலிக்கும் புனல் அம் புதவின்" (புறம்–176–5)

"நிறைகுளப் புதவின் மகிந்தனென் ஆகி" (புறம் 376:19–20)

"புனல்பொரு புதவின் உறந்தை எய்தினும்" (அகம் 237:14)

"புல்அரைக் காஞ்சி புனல் பொரு புதவின்" (மலை–449)

என்று 'புதவு' பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் இடம் பெறுகின்றன. புதவு என்பது,

"தண்ணீர் வெளியேறும் சிறியவழி" (தமிழகப் பாசன வரலாறு ப.எண். 29) என்று தமிழகப்பாசன வரலாறு குறிப்பிடுகின்றது.

**சுருங்கை**

புதவு போன்றே "சுருங்கை" என்பது நீர்நிலைக் கட்டுமானங்களில் இடம் பெறும் தண்ணீரை வெளியேற்றும் அமைப்பாகும்.

"சுருங்கை என்பது புதவு என்பதும் தண்ணீர் வெளியேறும் சிறிய வழிகள்" (தமிழகப் பாசன வரலாறு– ப.எ. 29) என்று கோமதி நாயகம் அவர்கள் குறிப்பிடுகிறார்.

**மடை**

"மடை' என்பது தண்ணீரை வெளியேற்றும் ஒரு அமைப்பாகும். மடை என்பது ஆறு, குளம், ஏரி, கால்வாய்களில் தண்ணீர் வெளியேறுவதற்காக அமைக்கப்படுகிறது. இந்த மடையில் ஒரு கதவு இருக்கும் இக்கதவைத் திறந்தால் மடை திறந்த வெள்ளம் போல் தண்ணீர் வெளியேறும். இந்த அமைப்பில் வெளியேறும் தண்ணீரின் அளவை கூட்டவோ குறைக்கவோ முடியாது" என்று கோமதி நாயகம் குறிப்பிடுகின்றார்.

பரிபாடலில் இந்த மடை பற்றிய பாடல் உள்ளது. அவை,

"வையை உடைத்த மடை அடைத்த கண்ணும்" (பரி 2.66)

மடை என்ற அமைப்பு செயல்படும் விதம் குறித்த செய்திகள் கிடைக்கப்பெறவில்லை.

**மதகு**

"மதகு என்பது மடை போன்றே அமைக்கப்படுவது. ஆனால் இதன் கதவைச் சிறுகச் சிறுகத் திறக்கலாம். வெளியேறும் தண்ணீரின் அளவை கூட்டவோ குறைக்கவோ முடியும் இது தற்காலத் திருகு மதகு அடைப்பான் (Screw Gearing Shutters) என்பதற்கு ஒப்பாகும்" என்று மதகின் அமைப்பை வரையறை செய்துள்ளனர்.

"நுரையுடன் மதகு தொறு இழிதரு புனல்" (மேலது–2:67)

என்ற பரிபாடல் வரி மதகு வழியாகத் தண்ணீர் வெளியேறியதாகக் குறிப்பிடுகின்றது. ஒட்டை மதகிலே தண்ணீர் போனால் தோட்டிக்கு என்ன வட்டம் என்ற பழமொழி சங்ககாலம் தொட்டு

இன்றளவும் மதகு என்ற சொல் வழக்கிலிருப்பதை உணர்த்துகிறது.

## குமிழி

“வனைகலத் திகிரியின் குமிழி சுழலும்
துனைசெலல் தலைவாய் ஓஇறந்து விரிக்கும்
காணுநர் வயாஅம் கட்குஇன் சேயாற்றின்”
(மலை–474–76)

என்ற மலைபடுகடாம் பாடல் குமிழி வழியாகத் தண்ணீர் பாய்வது குயவனுடைய வனையும் மட்கலத்தின் சக்கரம் போலக் குமிழ்த்துச் சுழன்று சென்றது. விரைந்த செலவினையுடைய ஆறு என்று குறிப்பிடுகின்றது.

குமிழி என்பது, குளங்களிலிருந்து தண்ணீர் வெளியேறக் கல்லால் ஆன பெட்டியொன்றை அமைத்து, அதில் துளையிட்டு, அதன் வழியாகத் தண்ணீர் புகுந்து வரும் அமைப்பு ஆகும். மரத்தால் செய்யப்பட்ட சக்கை கூலம் இக்குமிழியின் துளையை அடைப்பார்கள். குமிழியின் துளை வழியாகத் தண்ணீர் போகும் போது ஒரு சுழல் உண்டாகும் என்று பாசன வரலாறு குறிப்பிடுகின்றது. இக்கருத்து மேற்கண்ட மலைபடுகடாம் பாடல் கருத்துடன் ஒப்புநோக்கத்தக்கதாக அமைகின்றது.

மடை, குமிழி, புதவு, மதகு, சுருங்கை ஆகியன தமிழர்களின் நீர்த்தேக்கக் கட்டுமான நுட்பங்களுக்குச் சிறந்த சான்றாதாரமாகத் திகழ்கின்றன. முன்னோர்கள் பயன்படுத்தியவை தான் சற்று நவீனமயமாக்கலுக்கு உட்பட்டு இன்னும் வழக்கில் இருந்து வருகின்றன. சில அமைப்புகள் எந்த நவீனத்திற்கும் ஆட்படாமல் அப்படியே இன்றளவும் பயன்பாட்டில் உள்ளது.

## முடிவுரை

உலகின் நிலைபேற்றுக்குக் காரணியாக விளங்கும் நீர் இருக்கும் நிலைகளின் பல்வேறு பெயர்களை உரிச்சொல் நிகண்டு குறிப்பிடுகின்றது. இலஞ்சி, கயம், கேணி, கோட்டகம், ஏரி, மலங்கல், மடு, ஓடை, வாவி, சலந்தரம் வட்டம், நளினி, மடு, பொய்கை, குட்டம், கிடங்கு, குளம் என்று உரிச்சொல் நிகண்டு வகைப்படுத்துகிறது. இவ்வாறு பலவகையான நீர் நிலைகளை உருவாக்கிய சங்கத் தமிழன் நீரை மேலாண்மை செய்யவும் அறிந்திருந்தான். பெரும்பாலும் சங்க இலக்கிய மக்கள் இயற்கை வளங்களுடன் இணைந்து வாழக் கற்றறிந்தனர். நீரைப்பற்றி அறிந்த மக்கள் நீரின் முக்கியத்துவத்தை அறிந்து, அதைப் பயன்படுத்தி, பாதுகாத்து, சேகரித்து, சேமித்து வந்தனர். மன்னன் மட்டும் அல்லாது மக்களும் நீர் மேலாண்மைபற்றி அறிந்திருந்தனர். நீர் மேலாண்மையைப் பற்றிச் சங்க இலக்கிய நூல்கள் மட்டும் அல்லது தொல்காப்பியம் காப்பிய நூல்கள், புராண நூல்கள், உரிச்சொல் நிகண்டு, திருக்குறள் எனப் பெரும்பான்மையான நூல்களில் நீர் மேலாண்மை பற்றிக் கூறியுள்ளது.

அதுமட்டுமல்லாது சங்க இலக்கிய மக்கள் நீர் நிலைகளின் பயன்பாட்டை அறிவியல் தொழில் நுட்பத்துடன் கையாண்டு வந்தனர். அது வியப்பூட்டும் வகையிலும், உலக நாடுகளுக்கு முன்னோடியாகத் தமிழர்கள் இருந்துள்ளார்கள் என்பதை நினைக்கும்போது பெருமிதமே. இதற்கான காரணம், சங்கத் தமிழர்கள் கட்டுமான வல்லுநர்களாகவும், சிறந்த நீர் மேலாண்மை ஆய்வாளராகவும் திகழ்ந்துள்ளார். இந்தக் கட்டுரையின் நோக்கமானது தொழில்நுட்பம் வளராத காலத்திலே தமிழர்கள் அறிவியல்

ISSN : 2581-9712

சிந்தனையுடன் நீரைப் பாதுகாத்துச் சேமித்து வைத்தனர். ஆனால் தற்போதைய காலக்கட்டங்களிலும், வரும் காலத்திலும் நீரின் பங்களிப்பு மிகக் குறைவாகவும், அரிதாகவும் இருக்கும். எனவே நம் முன்னோர்களான தமிழர்கள் கையாண்ட நீர் மேலாண்மையை நம் சமுதாயம் கடைபிடிக்க வேண்டும் அதுமட்டுமல்லாது அறிவியல் நுட்பத்துடனும், மாசற்ற, எந்த வேதியியல் இரசாயனப் பொருட்கள் கலப்பின்றித் தூய்மையான இயற்கையுடன் இணைந்து நலமான சமுதாயத்தை உருவாக்கி, தூய்மையான நீரை அனைத்தும் உயிர்களுக்கும் பயன்பெறச் செய்வதே என்னுடைய நோக்கம். அதுவே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத்துவமாக அமையும்.

**துணை நூற்பட்டியல்**


1. திருக்குறள், மு. வரதராசனார்.
2. சங்க இலக்கியம், பேராசிரியர் வையாபுரி பிள்ளை.
3. சங்க இலக்கியம் மூலமும் உரையும், சாரதா படிப்பகம், புலியூர் கேசிகன்.
4. தமிழ் இலக்கிய வரலாறு, சி. சேதுராமன்.
5. பெரிய புராணம், ம. இராசமாணிக்கனார்.
6. மணிமேகலை மூலமும் உரையும், ச.வே. சுப்பிரமணியன்.
7. உரிச்சொல் நிகண்டு.


**குறிப்பு புத்தகங்கள்**


1. Thirukral-M.Varathdasanaar
2. Sangaillakiyam-Peraciriyar,Vaiyapuri Pilai
3. Sangaillakiyam Moolamum Uraiuvm-Saratha Pathippkam-Puliur Kacigan
4. Tamil Illakiya Varalaaru-S.Sethuraman
5. Perriyapuranam –Rajamaniknaar
6. Manimekalai Moolamum Uraiuvm- S.V. Subramaniyan
7. Urisol Negandu.


************************************

ISSN : 2581-9712



# பதினெண்மேற்கணக்கில் பெண் எனும் சொல்

முனைவர் பீ. பெரியசாமி
தமிழ்த்துறைத்தலைவர்
டி.எல்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்)
விளாப்பாக்கம் – 632521.

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய தமிழாய்வுச் சூழலில் சொற்கள் குறித்த ஆய்வுகள் என்பது மிகவும் அரிதாகவே நடத்தப்படுகின்றது என்பது நாம் அறிந்தது. அந்த வகையில் அவற்றை முன்னெடுக்கும் நோக்கில் பெண்பாற் பெயர்களாகப் பதின்மூன்று பெயர்கள் தொல்காப்பிய மரபியலில் (தொல்.பொருள்.547) கூறப்பட்டுள்ளது. அவற்றுள் நான்காவதாகக் கூறப்பட்டுள்ள பெண் எனும் சொல்லுக்கான பொருளைப் பதினெண்மேற்கணக்கு நூல்களின் வழி அறிய முற்படுவதே இவ்வாய்வாகும். மனிதனின் பெண்பால் பெயரினைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் பெண் எனும் சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதன்; வழி மனிதனின் பெண்பால் பெயரே பெண் என்பதை இவ்வாய்வினால் நாம் அறிந்து கொள்ளலாம்.

**முக்கியச் சொற்கள்**

பெண், மனிதன், பெண்பால் பெயர், தொல்காப்பியம், மரபியல், பதினெண்மேற்கணக்கு நூல்கள்.

## முன்னுரை

இன்றைய தமிழாய்வுச் சூழலில் சொற்கள் குறித்த ஆய்வுகள் என்பது மிகவும் அரிதாகவே நடத்தப்படுகின்றது என்பது நாம் அறிந்தது. அந்த வகையில் அவற்றை முன்னெடுக்கும் நோக்கில் பெண்பாற் பெயர்களாகப் பதின்மூன்று பெயர்கள் தொல்காப்பிய மரபியலில் (தொல்.பொருள்.547) கூறப்பட்டுள்ளது. அவற்றுள் முதலாவதாகக் கூறப்பட்டுள்ள பேடை எனும் சொல்லுக்கான பொருளை எட்டுத்தொகை நூல்களின் வழி அறிய முற்படுவதே இவ்வாய்வாகும்.

## பெண்பால் பெயர்கள்

தொல்காப்பிய மரபியலில் பெண்பால் பெயர்களுக்கான நூற்பாவின் முதல் சொல்லாகப் பேடை எனும் சொல் இடம்பெற்றுள்ளது. இதனை,

"பேடையும், பெடையும், பெட்டையும், பெண்ணும்,
மூடும், நாகும், கடமையும், அளகும்,
மந்தியும், பாட்டியும், பிணையும், பிணவும்,
அந்தம் சான்ற பிடியொடு பெண்ணே" 1

எனும் நூற்பாவின் வழி அறியலாம். இதற்கு உரை வகுத்துள்ள இளம்பூரணர்; "பெண்பாற்பெயர் உணர்த்துதல் நுதலிற்று? இக்கூறப்பட்ட பதின்மூன்றும் பெண்பாற் பெயராம் என்றவாறு" 2 எனக் கூறியுள்ளார். இதன்வழி, இந்நூற்பாவில் கூறியுள்ள பெயர்கள் அனைத்தும் பெண்பாற் பெயர்கள் என்பதை அறிந்துகொள்ளலாம்.

ISSN : 2581-9712

**பெண் எனும் சொல்லின் பொருள்**

பெண் என்னும் சொல் பல பொருள்களில் பயன்படுகின்றது. பால் பகுப்பில் பெண் பால் எல்லா உயிரினங்களினதும் பெண். "பாலரை வயது வேறுபாடின்றிக் குறிக்கப் பயன்படுகின்றது. ஆங்கிலத்தில் "பெண்" என்ற உச்சரிப்பு கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் விம்பானா, 'wīfmann' என்றும் பின்னர் வும்மான (wīmmann to wumman) என்றும் சொல்லிருந்து மருவி விம்மனுக்கும், இறுதியாக உச்சரிப்புடைய விம்மன் என்ற மாறியது (பெண்ணுக்கும்) அது பழைய ஆங்கிலத்தில், விபெய்ன் "பெண் மனிதனை" குறிக்கிறது, என்றும் கருத்து உண்டு. பெண் என்ற சொற்பதம் "கருப்பை" என்று சொல்லோடு தொடர்புடையது. இந்த உறுப்பின் செயல்பாடு கருவைப் பாதுகாப்பதாகும் "கம்பி" என்பது பழைய ஆங்கில வார்த்தையான wambe என்பதன் அர்தம் "வயிறு" (நவீன ஜெர்மன் மத்தியக் கால மொழியிலிருந்த "வாம்பே" என்ற பேச்சுவழக்கு வார்த்தையை ("potbelly") என்று ஆங்கிலத்தில் (women) அழைக்கப்படுகிறது. உயிரியல் பெயர் கிரேக்கத்தில் கிரகமும் தெய்வமும் வீனஸ் அல்லது அப்ரோடிட் சின்னமாகப் பெண் பாலினத்திற்கான உயிரியலில் பயன்படுத்தப்படுகிறது. இது கடவுளின் வீனஸ் கையில் கண்ணாடி அல்லது தேவதையின் ஒரு சுருக்கக் குறியீடாக ஒரு பகட்டான பிரதிநிதித்துவம் ஆகும். வீனஸ் சின்னம் பெண்மையை குறிக்கும் என்றும் பண்டைய செம்புக்காகவும் இருந்தது. ஒரு புள்ளியில் இருந்து (ஆவி குறிக்கும் ஒரு புள்ளியில் இருந்து (சமச்சீரற்ற குறுக்குவழியைக் குறிக்கும்) சின்னத்தை உருவாக்கியது. மனித இனத்திலும், பெண்ணுரிமை, பெண்ணியம் போன்ற சொற்கள் வயது வேறுபாடு இன்றி எல்லாப் பெண்களையும் குறிப்பதையும் கவனிக்கலாம். எனினும் பொது வழக்கில் பெண் எனும்போது அது வளர்ச்சியடைந்த மனித இனத்துப் பெண்பாலாரையே பெரும்பாலும் குறிக்கும். அது சிறிய வயது சிறுமியும் குறிக்கும் சொல் தமிழில் பொதுவாகக் குறிக்கப்படுகிறது. ஆனால் சங்கக் கால இலக்கியம் மற்றும் பழந்த தமிழில் பல் வேறுபட்ட வயது கருத்தில் கொண்டு எழுதப்பட்டது"3 என்கிறது விக்கிபீடியா.

**பதினெண் மேற்கணக்கு நூல்களில் பெண்**

பெரும்பாணாற்றுப்படையில்,

"தளர் நடை வருத்தம் வீட அலர் முலைச்

செவிலி அம் பெண்டிர் தழீஇ பால் ஆர்ந்து"4 (பெரும். 250 – 251)

எனும் பாடலடிகளின் பொருளினை நோக்குமிடத்து, தளர்ந்த நடையால் தங்களுக்கு உண்டான வருத்தம் நீங்கும்படி, பெரிய முலைகளை உடைய செவிலித் தாயாகிய அழகிய மகளிரைத் தழுவிப் பாலை நிரம்ப உண்டு என வருகிறது. இதில் செவிலி அம் பெண்டிர் என்பது செவிலித்தாயினைக் குறித்த போதும், பெண் (பெண்டிர் எனும் சொல் பொதுவாகப் பெண்களையே குறித்து வந்துள்ளது.

சீத்தலைச் சாத்தனார் தம் குறிஞ்சித் திணைப் பாடலில் தோழி தலைவியிடம் சொன்னதைச் சிறப்புறத்தானாக இருந்த தலைவன் கேட்கும்படி,

"...யாமத்து

அலர்வாய் பெண்டிர் அம்பலொடு ஒன்றிப்

புரை இல் தீ மொழி பயிற்றிய உரை எடுத்து" 5 (நற். 36)

ISSN : 2581-9712

என்கிறார். இது தலைவி பெண்டிர் பலரும் அலர் தூற்றுவதால் துயிலாது இருக்கிறாள். தலைவியைப் போல இவ்வூரும் அலர் தூற்றும் செயலை ஓய்வின்றிச் செய்வதால் துயிலாது இருக்கிறது என்கிறது. இதில் பெண் எனும் சொல் பெண்களைக் குறித்து வந்துள்ளது.

உலோச்சனார் நெய்தற் திணைப் பாடலில், தலைவி பாணனிடம் சொன்னது,

".. அவன்
பெண்டு என அறிந்தன்று;
பெயர்த்தலோ அரிதே" 6 (நற். 74)

என்கிறார். இதில் இப்படிப்பட்ட காலத்தில், வேலிநிலத்தில் கண்டல் பூக்கள் பூத்துக்கிடக்கும் ஊரில் வாழும் பெண் (பெண்டு) உன்னுடையவளாக இருக்கிறாள் என அறிகிறேன் என்பதில் அவன் பெண்டு எனும் சொல் தலைவியைக் குறித்த போதிலும், நுட்பமாக நோக்கின் பெண்டு என்பது பெண் என்பதையே குறிக்கிறது.

அஞ்சில் அஞ்சியார், மருதத் திணைப் பாடலில், தோழி தலைவியிடம் சொன்னது, பாணன் கேட்கும்படியாக,

"நல்கூர் பெண்டின் சில் வளைக் குறுமகள்,
ஊசல் உறு தொழில் பூசல் கூட்டா" 7 (நற்.90)

என்கிறார். இதில், நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமகள் அழுது மீளுகின்ற அழகிய சிலவாகிய கூந்தலையுடைய பெண்தன்மையிற் குறைவுபட்ட சிலவாய வளைகளை யணிந்த பரத்தையாகிய பெதும்பைப் பருவத்தால் ஒரிளமகளை மீட்டும் ஊசலாடுகிற மிக்க தொழிலின் ஆரவாரத்திற் செய்யாத.. என வந்துள்ளது. இதில் நல்கூர் பெண்டிர் எனும் சொல் குடும்பப் பெண் (தலைவி) எனும் பொருள்பட வந்துள்ளது. அதே நாம் பெண்டு என்பதை மட்டும் நோக்கின் பெண் எனும் சொல் வந்துள்ளமையை அறியலாம்.

இளந்திரையனார், நெய்தற் திணைப் பாடலில், தலைவி தோழியிடம் சொன்னது, சிறைப்புறத்தானாக இருந்த தலைவன் கேட்கும்படி யானே பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கிக்,

"கை வல் கம்மியன் கவின் பெறக் கழாஅ" 8 (நற். 94)

இதில், கைத்தொழில் வல்ல கம்மியன் அழகு பொருந்தக் கழுவித் தூய்மை செய்யாத பசிய முத்து தனது மிக்க ஒளியை மறைத்துக் காட்டினாற்போல் யானும் புணர்ச்சியால் நிகழ்ந்த மிக்க நலனைப் புலப்படாமல் அரிதாகத் தாங்கி என் பெண் தன்மையாலே தகைத்துக் கொள்ளும் படியாக.. என வந்துள்ளது. இவற்றில் பெண் என்பது பொதுவாக மனிதகுலப் பெண்பாலினைக் குறிக்கிறது.

கந்தரத்தனார், குறிஞ்சித் திணைப் பாடலில், தலைவி தோழியிடம் கூறியதை,

"ஏ கல் அடுக்கத்து இருள் முகை இருந்த
குறிஞ்சி நல் ஊர்ப் பெண்டிர்
இன்னும் ஓவார், என் திறத்து அலரே" 9 (நற்.116)

என்கிறது. இதில், பெரிய மலைப் பக்கத்திலுள்ள இருள் செறிந்த குவட்டிலிருந்த குறிஞ்சியிலுள்ள நல்ல ஊரின்கண்ணிருக்கும் பெண்டிர்தாம்; எண்ணிமித்தமாக இன்னும் பழிகூறுதலை ஒழிந்தாரிலர் இனி யான் அதனை எவ்வண்ணம் ஆற்றுவேன்? என்கிறது பாடல். இப்பாடலில், பெண் (பெண்டிர்) எனும் சொல்லானது பொதுவாக மனிதகுலப் பெண்பாலினைக் குறித்து வந்துள்ளது.

ISSN : 2581-9712

நற்றமனார், குறிஞ்சித் திணைப் பாடலில், தலைவி தோழியிடம் சொன்னது

வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வை தூற்ற,

"நாம் உறு துயரம் செய்யலர் என்னும்

காமுறு தோழி, காதல் அம் கிளவி" 10 (நற்.133)

இதில், கொடிய வாயையுடைய ஏதிலாட்டியர் பழிச்சொல் எடுத்துத் தூற்றாநிற்கும்படி; நங் காதலர் அச்சமிகுகின்ற துன்பத்தை நமக்குச் செய்குபவர் அல்லர் ஆதலால் அவர் விரைய வருகுவர் என்று நீ என்னைத் தேற்றிக் கூறுகின்ற என்பால் அன்பு மிக்க இச் சொல்லானது... என வந்துள்ளது. இப்பாடலில், பெண் (பெண்டிர்) எனும் சொல் ஏதிலாட்டியாரைக் குறிக்கிறது. இதுவும் பெண்ணைக் குறித்து வந்த சொல்லே.

கண்ணகாரன் கொற்றனார், பாலைத் திணைப் பாடலில், தலைவியின் தாய் சொன்னது,

"அம்பல் மூதூர் அலர்வாய் பெண்டிர்

இன்னா இன் உரை கேட்ட சில் நாள்

அறியேன் போல உயிரேன்" 11 (நற். 143)

இதில், அம்பல் மிக்க இப்பழைய ஊரின்கண்ணுள்ள அலர்தூற்றும் வாயையுடைய ஏதிலாட்டியர் பலரும் ஒரு சேரக்கூடிக் கூறுகின்ற கொடிய இனிய உரைகேட்ட சில நாளாகவும்; யாதொன்றனையும் அறியாதேன் போல மூச்சுவிட்டேனுமில்லேன்; என்பதில், பெண் (பெண்டிர்) எனும் சொல் ஏதிலாட்டியாரைக் குறித்து வந்துள்ளது. இதுவும் பெண்ணைக் குறித்து வந்த சொல்லே. (ஏதிலாட்டி – ஏதுமில்லாது வறுமையில் உள்ள பெண்)

உலோச்சனார், நெய்தற் திணைப் பாடலில், தோழி தலைவியிடம் சொன்னது,

"மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற,

சிறு கோல் வலந்தனள் அன்னை அலைப்ப" 12 (நற். 149)

இதில், தோழி! வாழி! நம்மூர்த் தெருவிலுள்ள மாதர்களுள் ஒரோ வோரிடத்திற் சிற்சிலரும் ஒரோ வோரிடத்திற் பற்பலரும் இப்படியாக ஆங்காங்குத் தெருக்களிலே கூடிநின்று கடைக்கண்ணாலே சுட்டி நோக்கி; வியப்புடையார்போலத் தம்தம் மூக்கினுனியிலே சுட்டுவிரலை வைத்துப் பழிச்சொற் கூறித் தூற்றாநிற்கவும்; அப் பழிமொழியை நம் அன்னை கேட்டறிந்து மெய்ம்மையாகுமென கொண்டு சிறிய கோல் ஒன்றனை ஏந்தி அது சுழலும்படி வீசி அடிப்பவும்; இவையிற்றால் யான் மிக்க துன்பமுடையேன் ஆயினேன் காண்; என்பதில், பெண் (பெண்டிர்) எனும் சொல் மாதர்களைக் குறித்து வந்துள்ளது.

நற்றிணையின் பாலைத் திணைப் பாடலொன்றில், தோழி தலைவியிடம் சொன்னது,

"நிலம் செல செல்லாக் கயந்தலைக் குழவி

சேரி அம் பெண்டிர் நெஞ்சத்து எறிய

ஊர் ஆன் கன்றொடு புகுதும் நாடன்" 13 (நற். 171)

என்கிறாள். இதில், நீர் உண்ண விரும்பிய யானை கோடை காலத்தில் மலைப் பிளவுகளைக் கடந்து செல்லும். நெடுந்தொலைவு நடக்க முடியாத அதன் கன்று ஊர் வாழ் பசுவின் கன்றுகளோடு சேர்ந்து வரும். அது கண்டு ஊர்ச்சேரியில் வாழும் பெண்டிர் நெஞ்சம் பதைப்பர். இப்படிப்பட்ட நிலப்பகுதியின் தலைவன் அவன் என்பதில் பெண் (பெண்டிர்) எனும் சொல் பொதுவாகப் பெண்களைக் குறித்து வந்துள்ளது.

ISSN : 2581-9712

நற்றிணை நெய்தற் திணைப் பாடலொன்றில், தோழி சொன்னது, சிறைப்புறத்தானாக இருந்த தலைவன் கேட்கும்படி,

"சேரி அம் பெண்டிர் சிறு சொல் நம்பிச்

சுடுவான் போல நோக்கும்" 14 (நற். 175)

இது, நம்முடைய சேரியின்கணுள்ள அயலுறை மாதர் கூறுங் குறிப்புரையாகிய இழிந்த சில சொற்களை விரும்பிக் கேட்டு; கொதிக்கின்ற பால்போன்ற பசலைபரந்த என் மேனியை; சுடுவது போல நோக்கா நிற்கும்; இதனால் இனி இல்வயிற் செறிக்கும் போலும்; என்கிறது. இப்பாடலில், பெண் (பெண்டிர்) எனும் சொல் பொதுவாகப் பெண்களைக் குறித்து வந்துள்ளது.

மாங்குடி மருதனார் தமது மதுரைக்காஞ்சியில்,

"அரந்தைப் பெண்டிர் இணைந்தனர் அகவ" 15 (மதுரை. 166)

என்கிறார். அதாவது, 'அணங்கு' என்னும் அழகியர் உலாவிய தெருக்களில் கணவனை இழந்த 'அரந்தைப் பெண்டிர்' அழுது கொண்டிருந்தனர் என்பது பொருள். இதில் அரந்தைப் பெண்டிர் என்பது கணவனை இழந்த பெண்கள் எனும் பொருளில் வந்துள்ளது. இருப்பினும், பெண் (பெண்டிர்) என்று மட்டும் பார்த்தோமேயானால் பொதுவான பெண்களையே குறிக்கிறது.

மாங்குடி மருதனார் தமது மதுரைக்காஞ்சியில்,

"... தொல் முதுபெண்டிர்,

செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை" 16 (மதுரை. 409 – 410)

என்கிறார். அதாவது, தொன்முது பெண்டிர், மயிலியலோர், மடமொழியோர் என்னும் பல்திற மகளிர் கல்லா மாந்தரொடு உறவாடும்போது கையால் தட்டிக்கொடுக்கும் வகையில் தூக்கி உறவாடி மகிழ்ந்தனர். தொன்முது பெண்டிர் தன் நரைமுடியில் கடலில் நுரையலையில் மிதந்துவரும் சங்கு போல் கொண்டை போட்டிருந்தனர். மயிலியலோர் எப்படியிருந்தனர்? கருமேகம் கொட்டி வழிவது போல் கூந்தல். பசும்பொன்னைச் செந்தீயில் போட்டுச் செய்த பாவை இளவெயிலில் மிளிர்வது போன்ற மேனி என்பது பொருள். இதில் முதுபெண்டிர் எனும் சொல்லானது வயதான (மூத்த) பெண்களைக் குறிக்கிறது. இருப்பினும், பெண் (பெண்டிர்) என்று மட்டும் பார்த்தோமேயானால் பொதுவான பெண்களையே குறிக்கிறது.

மாங்குடி மருதனார் தமது மதுரைக்காஞ்சியில்,

"காமர் கவினிய பேர் இளம் பெண்டிர்" 17 (மதுரை. 465)

என்கிறார். அதாவது, பூவும் புகையும் ஏந்திக் கொட்டு முழக்குடன் சென்று பேரிளம் பெண்டிர் மதுரைச் சிவபெருமானை வழிபடுவர்... பேரிளம் பெண்டிர் பூப் போட்டும், புகை காட்டியும் இமையா நாட்டத்துத் தேவர்களை வழிபட்டுப் போற்றுவர் என்பதில் இளம்பெண்டிர் என்பது பேரிளம் பெண்ணைக் குறித்த போதிலும், பெண் (பெண்டிர்) எனும் சொல் பொதுவான பெண்களையே குறிக்கிறது. மேலும்,

"மென் நூற் கலிங்கம் கமழ் புகை மடுப்ப

பெண் மகிழ்வுற்ற பிணை நோக்கு மகளிர்" 18 (மதுரை. 555)

எனும், மாங்குடி மருதனார் தமது மதுரைக்காஞ்சிப் பாடலில், மாணைப் போல்

ISSN : 2581-9712

மருளும் பார்வை கொண்ட மகளிர் தம் பெண்மைத் தன்மையைத் தாமே கண்டு மகிழ்ந்தனர். ...அணியப்போகும் மெல்லிய நூலாடைக்கு நறுமணம் கமழும் புகையை ஊட்டினர் என்பதில், பெண் எனும் சொல் பொதுவான பெண்களுக்கான பெண் தன்மையைக் குறித்து வந்துள்ளது.

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனாரின் மலைபடுக்கடாம் பாடல்,

"நறவு நாட் செய்த குறவர் தம் பெண்டிரொடு"19 (மலை.320)

என்கிறது. அதாவது, நறவுக்கள்ளை ஊற்றித் தந்த குறப்பெண்களுக்கும் அதனை ஊற்றித் தந்து அவர்களோடு சேர்ந்து மான்தோல் பறையை முழக்கிக் கொண்டு கானவர் குரவை ஆடும் ஒலி என்பதாகும். இதில் குறவர்–தம் பெண்டிர் என்பது குறவர் இனப் பெண்களைக் குறித்த போதும். பெண் (பெண்டிர்) என்பது பொதுவான பெண்களையே குறிக்கிறது.

## முடிவுரை

மனிதக்குல பெண்பால் பெயரினைப் பதினெண் மேற்கணக்கு நூல்களில் பெண் எனும் சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி மனிதர்களின் பெண்பால் பெயரே பெண் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம் (பாகம்.2), சாரதா பதிப்பகம், சென்னை–14, பதி.2014. தொல்.பொருள்.நூ. 547
2. இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம், பொருளதிகாரம் (பாகம்.2), சாரதா பதிப்பகம், சென்னை–14, பதி.2014. தொல்.பொருள்.நூ. 547,
3. https://ta.wikipedia.org/wiki.
4. மாணிக்கவாசகன், ஞா., பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும், உமா பதிப்பகம், சென்னை, பதி. 2016, பெரும்பாணாற்றுப்படை அடிகள் 250 –251.
5. வேங்கடராமன் வித்துவான் டாக்டர் ஹெச். (பதி) நற்றிணை மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை – 600 090. எட்டாம் பதிப்பு – 2020, பா.36.
6. மேலது, பா.74.
7. மேலது, பா.90
8. மேலது, பா.94.
9. மேலது, பா.116.
10. மேலது, பா.133.
11. மேலது, பா.143.
12. மேலது, பா.149.
13. மேலது, பா.171.
14. மேலது, பா.175.
15. மாணிக்கவாசகன், ஞா., பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும், உமா பதிப்பகம், சென்னை, பதி. 2016, மதுரைக்காஞ்சி அடி.166.
16. மேலது, அடி.409–410.
17. மேலது, அடி.465.
18. மேலது, அடி.555.
19. மாணிக்கவாசகன், ஞா., பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும், உமா பதிப்பகம், சென்னை, பதி. 2016, மலைபடுகடாம், அடி.320.

ISSN : 2581-9712



# மதிப்பியல் திறனாய்வு அணுகுமுறை

முனைவர் ந.தமிழ்மொழி
உதவிப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி,
மதுரை–20

**முன்னுரை**

மனித இனத்தின் அனுபவங்களைக் கலைநயத்தோடு எடுத்து உரைப்பதே இலக்கியம் ஆகும். இலக்கியம் என்பது யாதெனின் அதன் பண்பு, அழகு பயன் எனப் பலவற்றையும் விளக்கிக் கூறுவதாகும். சில நேரங்களில் திசை தெரியாமல் தவிக்கவும் திகைக்கவும் நேரிடும். எனவே பொதுவாக உலகம் ஒப்பு கொள்ளத்தக்க வரையறை ஒன்றை வழங்க முயலுவோம். இலக்கியத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கலையே திறனாய்வு. ஒரு படைப்பிலக்கியம் சிறப்புடையதா? அல்லது சிறப்பற்றதா? என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவும் அளவுகோலாகப் பயன்படுவது திறனாய்வு ஆகும். குணம் நாடி குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி, மிக்கதைத் தெரிவு செய்து தெளிவுறுத்துவது திறனாய்வு ஆகும். இதில் மதிப்பியல் அணுகுமுறை குறித்தும் அதனை இலக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் கூறுவதே மதிப்பியல் திறனாய்வு அணுமுறை எனும் கட்டுரையாகும்.

**காலந்தோறும் தமிழ் இலக்கியம்**

**பழங்காலம்**

இலக்கண நூல்கள், சங்க இலக்கியம், நீதி இலக்கியம்.

**இடைக்காலம்**

பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், உரைநூல்கள், புராண இலக்கியங்கள், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம், புதினம், கட்டுரை, சிறுகதை, புதுக் கவிதை, ஆராய்ச்சிக் கட்டுரைகள், அறிவியல் தமிழ், கணினித் தமிழ். தமிழ் இலக்கியங்களின் எண்ணிக்கை அள்ள அள்ளக் குறையாத அமுதச் சுரபி போல நீடித்து நிலைத்து நிற்கக் கூடியவை இத்தகைய இலக்கியங்களைத் தேர்வு செய்து மதிப்புகள் அடிப்படையில் ஒப்பிட்டும், பகுத்தும் ஆய்வதே மதிப்பியல் திறனாய்வு அணுகுமுறையாகும்.

**மதிப்பியல்**

காலந்தோறும் எழுந்த இலக்கியங்கள் பல்வேறு மதிப்புகளை உள்ளடக்கியதாக உள்ளன. எக்காலத்திற்கும் பொதுவான நிலையான மதிப்புகளையும் அவை வெளியிட்டன. ஒவ்வொரு காலகட்டத்திலும், அக்காலக் கட்டத்திற்குப் பொருந்தும் மதிப்புகளே இலக்கியங்களில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை காதல், வீரம் போன்ற பண்பாட்டு மதிப்புகளுக்கு முதன்மையான இடத்தை வழங்கியிருக்கிறது. திருக்குறள் போன்ற நீதிநூல்களில் அற மதிப்புகள் முதலிடம்

ISSN : 2581-9712

பெறுகிறது. பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் முதலியவற்றில் சமய மதிப்புகள் முதலிடம் பெறுகிறது. காப்பிய இலக்கியங்களில் அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய மதிப்புகள் இடம்பெறுகிறது. பழங்காலம் தொட்டு இன்றுவரை எழுந்துள்ள இலக்கியங்களின் நோக்கும் போக்கும் தமிழ் இலக்கியங்களை மதிப்பு இலக்கியங்களாகக் கருத இடம்தருகிறது. மனிதன் போற்றுகின்ற பல்வேறு பண்புகளையும் பழிக்கின்ற தீமைகளையும் இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகிறது. மதிப்புகள் குறித்த விளக்கங்கள், வகைப்பாடு, அறிஞர்களின் கருத்து எனப் பகுத்தாய்வதை இவ்வாய்வு கட்டுரை கூறுகிறது.

**மதிப்பு – சொல் விளக்கம்**

மதிப்பு எனும் சொல் 'value' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் நிகரான சொல்லை கையாளப்படுகிறது. 'value' என்ற பொதுச்சொல் 'Positive value, negative value' என்ற இரண்டையும் உள்ளடக்கிய ஒரு பொதுச்சொல். 'மதிப்பு' என்ற சொல்லுக்குத் தமிழ் அகராதி நூல்கள் பின்வரும் விளக்கத்தைத் தருகிறது.

"ஒரு பொருளுக்கு விலையாக நிர்ணயிக்கப்பட்ட அளவு உயர்வாகக் கருதும் நிலை; சமூகத்தில் பெற்றிருக்கும் முதன்மை; பெறுமானம்." "ஒரு பொருளுக்கு விலையாக நிர்ணயிக்கப்பட்ட அளவு பெறுமானம். வீட்டின் மதிப்பு இரண்டு இலட்சம், உயர்வாகக் கருதும் நிலை"2 (சமூகத்தில் பெற்றிருக்கும் முதன்மை).

"மதித்தல், அளவிடுதல், கௌரவித்தல், கடைதல், கருத்து."3

என்றும்,

"மதிப்பு, அளவிடுகை, சிறப்பிருக்கை, கருத்து"4 என்பனவாகும்.

**மதிப்பு என்பதன் இலக்கணம்**

உளதாம் தன்மை உடைய அனைத்தும் நலம் என்றாலும், அந்த நலம் மனிதனைக் கவர்ந்து தன்னை நாடச் செய்யும்பொழுது அது 'மதிப்பு' ஆகும். ஆதலின் விரும்பத்தக்கது நலம் எனின், போற்றப்படுவது மதிப்பு எனலாம். நலத்தை அறிந்து ஏற்றுக்கொள்ளும்போது அது மதிப்பு ஆகிறது.

"நாடத் தகுந்தது எதுவும் மதிப்பு"5

என்று ரால்ஃப் பார்ட்டன் பெரி என்ற மெய்யியலார் கூறுவதாகத் தனராசு அவர்கள் குறிப்பிடுகிறார். மேலும், "பொருள்களிடம் ஏதாவது ஆர்வம் காட்டும்போது அவை மதிக்கத்தக்கவை ஆகின்றன"6 என்று கோலியரின் கலைக் களஞ்சியம் கூறுவதாகவும் குறிக்கின்றார்.

மனிதனுக்கு மட்டுமே புலப்படக்கூடியது மதிப்பு எனலாம். சிலவற்றை உயர்ந்தவை, மேலானவை என்றும் அவற்றிற்கு எதிரானவற்றைத் தாழ்ந்தவை, இழிந்தவை என்றும் மனிதன் கருதுகின்றான். 'உண்மை' மேலானது என்று எண்ணும் மனிதன்; பொய்ம்மை இழிவானது என்று மதிப்பிடுகிறான். தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கும்போது ஒன்றினைச் சரியானது என்றும் பிறிதொன்றினைத் தவறானது என்றும் மனிதன் கணிக்கிறான். உண்மை பேசுவதைச் சரி என்று போற்றும் மனிதன், பொய் பேசுவதைத் தவறு என்று கூறுகிறான். சரி எனப்படும் இரண்டு மதிப்புகளுள் முதலிடம் பெறும் மதிப்பினைச் சிறப்பெனக் கருதுகிறான். சான்றாக,

காதல், கடமை என்ற இரண்டினுள் ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டிய

ISSN : 2581-9712

சூழல் வரும்போது கடமைக்கு முதலிடம் தருவதனைச் சிறப்பெனக் கருதுகிறான். இவ்வாறு சரியானவை, உயர்ந்தவை, சிறந்தவை என்றெல்லாம் சில பண்புகளைக் குறிப்பிடுவது மனிதனைத் தவிரப் பிற உயிர்களிடையே காணப்படுவதில்லை. ஆதலின் மதிப்பு மனிதனுக்கே உரிய பண்பு என்பது தெளிவு.

**மதிப்புகளின் வரைவிலக்கணம்**

அறிவியல் அறிஞர்களும் சமூகவியல் அறிஞர்களும் உளவியல் அறிஞர்களும் இலக்கியத் திறனாய்வாளரும் கல்வித்துறையினரும் 'மதிப்புகள்' என்ற சொல்லுக்குப் பலவிதங்களில் வரைவிலக்கணம் காண முயன்றிருக்கின்றனர்.

"ஒரு சமூகம் சரியானவை என்றும் சார்நிலையில் முக்கியமானவை என்றும் கருதுகின்றவற்றை வரையறுக்கின்ற அச்சமூகத்தின் மனப்பான்மைகள்."7

"பொருள்களைப் பற்றிய மனிதனின் மனப்பான்மையே மதிப்புகள்."8

"அன்றாட வாழ்வின் ஒழுகலாற்றையும் தீர்மானங்களையும் தீர்மானிக்கிற விருப்பங்கள்."9

"விருப்பத்தை நிறைவு செய்யும் எதுவும் மதிப்பாகும். ஒரு விருப்பம் நிறைவேறும்போது, அவ்விருப்பத்துக்கு இணையான இன்னொரு விருப்பமோ அல்லது அதைவிட முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றோ பங்கப்படாதிருத்தல் வேண்டும்."10

"ஆற்றல் மிக்க விருப்பத் தேர்வுகள் மதிப்புகளாகின்றன."11

"ஒரு சமூகத்தால் முறையானவை அல்லது நல்லவை என்று கருதப்படும் கருத்துகளும் ஒழுகலாறுகளும் அதன் மதிப்புகளாகின்றன."12

"ஒருசமூகத்தை இனங்காண்பதற்கும் அதன் நலத்திற்கும் சில செயல்கள், உறவுகள், உணர்வுகள், குறிக்கோள்கள் ஆகியவை மிக முக்கியமானவை என்று கருதப்படுகின்றன. இவை பற்றிப் பரவலாக நிலவும் நம்பிக்கை அல்லது ஆர்வ உணர்வு மதிப்பாகும்."13

"எது நல்லது, எது முக்கியமானது என்று தானறி நிலையிலும் தானறியா நிலையிலும் எழும் கற்பிதங்கள்."14

"மதிப்புகள் மனிதனது ஒழுகலாற்றுக்கு வழிகாட்டியாக அமைவன. அவை காலத்திலும் இடத்திலும் இடம்பெறும் பொருள்கள் இல்லை; மதிப்பீட்டினால் நிலைபெறுபவை. அதனால்தான் தற்சார்புக்கூறுகளையும் புறச்சார்புக் கூறுகளையும் பெற்றுள்ளன."15

"மதிப்புகள் பொருள்களின் தகுதி பற்றிய கருத்துகளாகவும், உணர்வுமயமான ஈடுபாடாகவும் அமைகின்றன. அறிவு நிலையிலும் உணர்வுநிலையிலும் அவை செயற்படுகின்றன."16 இவ்வனைத்து வரையறைகளாலும் மதிப்பு என்பது மனப்பான்மை, நம்பிக்கை, கருத்து, கற்பிதம், ஆர்வ உணர்வு, மரபு முதலிய உட்கூறுகள் அடங்கிய தொகுதியாகத் திகழ்கிறது எனலாம்.

இது பொருள்கள், ஒழுகலாறுகள், தீர்மானங்கள், இவற்றைச் சரி, தவறு, முறையற்றது, முறையானது, முக்கியமானது என்று தீர்மானிக்கிறது. இத்தீர்மானம் விருப்பத்தின் அடிப்படையில் நிகழ்கிறது. ஆக மதிப்பு என்பது பொருள்கள், ஒழுகலாறுகள், தீர்மானங்கள் இவற்றின் மதிப்பீடு என்பதும் இம்மதிப்பீடு விருப்பத்தின் அடிப்படையில் நிகழ்வது என்பதும் தெளிவாகின்றது. அறிஞர்கள் பலரும் மதிப்பு பற்றிய கருத்தியலில் வேறுபட்டாலும் அதன் முக்கியத்துவத்தை

ISSN : 2581-9712

உணர்ந்தவர்களாகவே தங்களின் எண்ணங்களைப் பதிவு செய்துள்ளனர்.

## மதிப்புகளின் செயற்பாடுகள்

- ‘பிச்சர்’ எனும் சமூகவியலார் மதிப்புகளின் செயற்பாடுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறுவர். “மனிதர்களின் தகுதியையும் குழுக்களின் தகுதியையும் எடைபோட மதிப்புகள் உதவுகின்றன. ஒரு தனிமனிதன், சமூகத்தின் பார்வையில் தான் எங்கே நிற்கிறோம் என்பதை அறிந்துகொள்ளவும் சமூக மதிப்புகள் உதவுகின்றன.
- தனிப்பட்ட முறையில் ஒரு தனிமனிதனுக்கோ, குழுவுக்கோ மிகவும் பயன்தராத செயல்களில், அத்தனிமனிதனோ, குழுவோ தன்னை ஈடுபடுத்திக் கொள்ள அச்செயல்களின் சமூக மதிப்புகளே தூண்டுதலாக அமைகிறது.
- சமூக மதிப்புகள் அச்சமூகத்தின் குறிக்கோள் சிந்தனைகளையும் ஒழுகலாறுகளையும் சுட்டி நிற்பதால், அவை சமூக வாழ்வின் ஒழுகலாறுகள் பற்றிய ஒரு திட்டவரைபடமாகச் செயற்படுகின்றன.
- மக்களின் தேர்வுகளிலும் சமூகப்பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் அவர்களுக்கு வழிகாட்டுவனவாய் மதிப்புகள் அமைகின்றன.
- மதிப்புகள் சமூக வாழ்வை ஒழுங்குபடுத்தும் சக்தியாகவும் ஏற்புடையவற்றைச் செய்யவும், விலக்கப்பட்டவற்றைத் தவிர்க்கவும் தூண்டுகிற சமூக உந்துதலாகவும் செயற்படுகின்றன.
- மதிப்புகள் சமூக ஒருமைப்பாட்டைப் பேணுகின்றன. ஒரே மதிப்பைப் போற்றுபவர்கள் ஒருவர்பால் ஒருவர் ஈர்க்கப்படுகின்றனர். அதனால் சமூகம் கட்டுக் கோப்புடன் இயங்கமுடிகிறது.”17

இக்கருத்துகள் மதிப்பு என்னும் கருத்துப் படிவத்தைத் தெளிவாக உணர்வதற்கு ஏதுவாகின்றன.

## மதிப்புகளின் தீர்மானிகள்

மனிதவாழ்வின் தேவைகளும் நடைமுறைகளும் மனித அறிவின் மீது தாக்கம் செலுத்துகின்றன. நடைமுறைத் தேவைகளே மதிப்புகளை நிர்ணயிக்கின்றன. “புறநிலைக் காரணிகளால் தான் மதிப்பு மாற்றங்கள் உண்டாகின்றனவே தவிர, யாரோ சிலரது சிந்தனைகளின் வாயிலாக அவை உருவாவதில்லை. புறநிலை மாற்றத்தின் காரணமாக மாற்றத்தின் அவசியம் மனித மூளைகளால் உணரப்படுகின்றது”18 என்பர்.

மேலும், “மதிப்புகளை நடைமுறைத் தேவைகளே நிர்ணயிப்பதால் மதிப்பு மாற்றமும் தேவைகளின் அடிப்படையிலேயே நிகழமுடியும். அதாவது, தான் எதிர்பார்த்த பயன்களைத் தராதபோது ஒரு சமூகம் தனது மதிப்புகளை மாற்றிக் கொள்கிறது என்பது அறிவியலாளர்களின் கருத்தாகும்.”19

## மதிப்புகளின் வகைப்பாடு

மதிப்புகளைப் பல்வேறு விதமாய் வகைப்படுத்துகின்றனர். ‘பால்ராபிசெக்’ என்ற அறிவியல் சிந்தனையாளர், “இலக்கு அடிப்படையில் மதிப்புகளை முற்றிலும் தற்சார்பு மதிப்புகள் சார்நிலை மதிப்புகள் தனிமுதல் மதிப்புகள் என்று வகைப்படுத்துவார்.”20 அவரது கருத்துப்படி

ISSN : 2581-9712

விரும்பத்தகு தன்மை என்பது முற்றிலும் தற்சார்பு மதிப்பு. ஏனெனில் ஓர் இலக்கை அடைய இந்தப் பொருள் விரும்பத்தகு தன்மை உடையது என்றும் தனிநபரால் நிர்ணயிக்கப்படுவதால், இது தற்சார்பு மதிப்பாகும். பயன்படும் தன்மை என்பதைச் சார்நிலை என்பார். ஓர் இலக்கை அடைய இந்தப் பொருள் பயன்படுகிறது என்ற இலக்கின் அடிப்படையில் பயன்படும் தன்மை என்பது மதிப்பீடு செய்யப்படுகிறது. நன்மை, உண்மை போன்ற மதிப்புகள் தம்மளவிலேயே இலக்குகளாய் இருப்பதால் தனிமுதல் மதிப்புகளாகும் என்பது அவர் கருத்து.

"மதிப்புகளைப் பொருளியல் மதிப்புகள் என்றும் அறிவியல் மதிப்புகள் என்றும் அழகியல் மதிப்புகள் என்றும் மகிழ்வியல் மதிப்புகள் என்றும் சமய மதிப்புகள் என்றும் உயிரியல் அல்லது உயிர் வாழ்தல் மதிப்புகள் என்றும் அறிவுசார் மதிப்புகள் என்றும் சமய அறிவியல் கலைக் களஞ்சியம் வகைப்படுத்துவதைச் சேதுமணி மணியன் அவர்கள் குறிப்பிடுகின்றார்."21

"மதிப்புகளைப் பொருளாதார மதிப்பு, அழகுணர் மதிப்பு, புலமை மதிப்பு, அரசியல் மதிப்பு, பண்பாட்டு மதிப்பு, அறமதிப்பு, சமய மதிப்பு என்று வகைப்படுத்தி ஆராய்வார் சே.ச.தனராசு."22

"தனிமனிதன் தொடங்கி, சமூக எல்லை விரிவின் அடிப்படையில் மதிப்புகளை வகைப்படுத்துவார் நிக்கொலஸ்ரெஷர்." அதாவது,

1. தான் சார்ந்த மதிப்புகள்
2. குழு சார்ந்த மதிப்புகள்
3. சமூகம் சார்ந்த மதிப்புகள்
4. நாடு சார்ந்த மதிப்புகள்
5. மனித இனம் சார்ந்த மதிப்புகள்
6. சுற்றுப்புறம் சார்ந்த மதிப்புகள்

என்பனவாகும்.

சங்ககால மதிப்புகளை அறநிலை மதிப்புகள், பொருள்நிலை மதிப்புகள், இன்பநிலை மதிப்புகள், வீடுபேற்று மதிப்புகள் என்று வகைப்படுத்துவார் ஈ.கோ.பாஸ்கரதாஸ்"24 அவற்றுள்,

**இல்லறத்திற்குரிய மதிப்புகள்:** கற்பு, காமம், ஒழுக்கம், பொறை, நிறை, விருந்து புறந்தருதல், சுற்றம் ஓம்பல் ஆடவர்க்குரிய வினையாகிய கடமையும் ஆகும்.

**துறவறத்துக்குரிய மதிப்புகள்:** புலால் மறுத்தல், அவா அறுத்தல், உள்ளத்தூய்மை, தவம், நோன்பு, ஐயம் நீங்கித் தெளிதல் ஆகியவை ஆகும்.

**பொருளாதார மதிப்புகள்:** 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுதோரே' கொள்வதூஉம் மிகை கொளாது: கொடுப்பதூஉம் குறை கொடாது' போன்றவை.

**போர் நிலை மதிப்புகள்:** பெண்கள், முதியோர், பார்ப்பனர், குழந்தைகள் ஆகியோருக்குப் பாதுகாப்பளித்தல், வீரம் ஆகியவை" எனச் சங்ககால மக்களின் வாழ்வியலைப் பகுத்துரைத்துள்ளார் ஈ.கோ.பாஸ்கரதாஸ்.

சேதுமணி மணியன் அவர்கள், "நேர் மதிப்புகளையும் எதிர் மதிப்புகளையும் துலக்கிக் காட்டுவதோடு விதி மீறல்கள், இரட்டை மதிப்புகள், மதிப்புப் போலிகள், மதிப்பு மாற்றங்களின் பல்வேறு பரிமாணங்களையும் அவற்றின் தத்துவச் சார்பையும்' சித்தாந்த முரண்பாடுகளையும் மதிப்புப் போராட்டங்களையும் தமிழ் நாவல்களில் மதிப்புகள் எனும் நூலில் விளக்கியுள்ளார்."26 இவ்வாறு அறிஞர்கள் பலரும் பல்வேறு வகைகளாக மதிப்புகளைப் பகுத்துள்ளனர்.

ISSN : 2581-9712

மதிப்புகள் மனிதனால் வாழ்பவை, மனிதர்கள் இல்லையேல் மதிப்புகள் காணாமற் போய்விடும். மதிப்புகள் மனிதனை நல்வழிப்படுத்தும் சிறந்த வழிகாட்டியாகச் செயல்படுகிறது.

மதிப்பு என்னும் சொல் உயர்வு, மதித்தல், அளவிடுதல், சிறப்பிருக்கை, கருத்து எனும் பொருளை உணர்த்துவதாய் அமைகிறது.

மதிப்பு என்பது மனப்பான்மை, நன்மை, கருத்து, கற்பிதம், ஆர்வ உணர்வு, மரபு முதலிய உட்கூறுகள் அடங்கிய தொகுதியாகத் திகழ்கிறது.

மதிப்பு என்பது மனிதன் சமூகத்தின் பார்வையில் தான் எங்கே நிற்கிறான் என்பதை உணர்ந்துகொள்ளச் சமூகத்தோடு இணைந்து செயல்படத் தூண்டுகோலாக அமைகிறது. மேலும் சமூக வாழ்வின் ஒழுகலாறு குறித்த திட்ட வரைபடமாகவும் செயல்படுகிறது.

மதிப்புகளை நடைமுறைத் தேவைகளே நிர்ணயிப்பதால் மதிப்பு மாற்றமும் தேவைகளின் அடிப்படையிலேயே நிகழ்கிறது.

மதிப்புகளைத் தான் சார்ந்தவை, குடும்பம், சமயம், இனம் சார்ந்தவை, சமூகம் சார்ந்தவை, நாடு சார்ந்தவை, சுற்றுப்புறம் சார்ந்தவை, மனித இனம் சார்ந்தவை என்ற அடிப்படையில் ஒப்பிடலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய காப்பியங்களில் இடம் பெறும் மதிப்புகளைப் பின்வருமாறு பட்டியலிடுகிறேன்.

## நேர் மதிப்புகள்

| அறமதிப்புகள் | அரசியல் மதிப்புகள் | பண்பாட்டு மதிப்புகள் | சமய மதிப்புகள் | பொருள் மதிப்புகள் |
|---|---|---|---|---|
| ஒழுக்கம் | காட்சிக்கு எளியன் | உதவும் பண்பு | சமயப்பொதுமை | வறியவர்க்கு உதவுதல் |
| ஒருதாரமணம் | மன்னன் மக்கள் உறவுநிலை | அடைக்கலம் | நன்மை செய்தல் | வணிகர்களின் நடுவுநிலை |
| கள்ளுண்ணாமை | மன்னனை வாழ்த்துதல் | தனக்கென வாழாமை | துறவு | வாணிகத்தால் உருவான நன்மைகள் |
| இல்லற அன்பு | மாற்றுத்திறன் உடையோர் | அன்பு பாராட்டுதல் | பயன்பட வாழ்தல் | வருவாய் எனும் மதிப்பு |
| இல்லறக் கடமைகள் | கல்வி வளம் | நட்பு | வாய்மை | |
| விருந்தினைப் பேணல் | | சகோதரத்துவம் | நிலையாமை | |
| தானம் செய்தல் | | ஆழ்ந்த பேரன்பு | கொல்லாமை | |
| அறத்தின் வலிமை | | | | |
| பசிப்பிணி அகற்றல் | | | | |
| இன ஒழிப்பு | | | | |
| அறக் கோட்டம் | | | | |

## எதிர் மதிப்புகள்

| அறமதிப்புகள் | அரசியல் மதிப்புகள் | பண்பாட்டு மதிப்புகள் | சமய மதிப்புகள் | பொருள் மதிப்புகள் |
|---|---|---|---|---|
| ஆணாதிக்கப் பார்வையில் கற்பு | ஊடல் | தீய எண்ணங்கள் | சமயக் காழ்ப்புணர்வு | முரண்பாடுகள் |
| பரத்தமை ஒழுக்கம் | ஒழுக்கச் சிதைவு | முரண்பாடான பண்புகள் | பிறரைத் தண்டித்தல் | வறுமை நிலை |
| பலதாரமணம் | வஞ்சித்தல் | | | |
| பிறன்மனை நயத்தல் | தனியொருவர் மீது கொண்ட அன்பு | | | |
| இன்பத் தூண்டல் | முடியாட்சியின் குறைகள் | | | |
| | ஆற்றலற்ற அமைச்சரவை | | | |
| | குற்றமும் தண்டனையும் | | | |

ISSN : 2581-9712

இவ்வாறெல்லாம் காப்பியச் செய்திகளை மதிப்புகளின் அடிப்படையில் நேர்மதிப்புகள், எதிர்மதிப்புகள் என வரையறுக்கலாம்.

மேலும் மதிப்புகளை அற மதிப்பு, அரசியல் மதிப்பு, சமய மதிப்பு, அழகுணர் மதிப்பு, பண்பாட்டு மதிப்பு, பொருளாதார மதிப்பு, புலமை மதிப்பு என்றெல்லாம் வகைப்படுத்தலாம். அறம் சார்ந்த மதிப்புகளுக்குள் கொல்லாமை, கள்ளாமை, பொய்யாமை, இல்லறம், மடியின்மை, சிற்றினம் சேராமை, காமம் எனப் பகுத்து ஆய்ந்து செய்திகளை மதிப்புகளின் அடிப்படையில் தொகுக்கலாம்.

அரசியல் மதிப்புகளில் அரசியல் சார்ந்த செய்திகளை வகைப்படுத்தலாம். அரசு, நீதி, நடுவுநிலை மன்னன்–மக்கள், படைநிலை, செல்வநிலை, வரி என்றெல்லாம் செய்திகளை வரிசைப்படுத்தலாம்.

சமய மதிப்புகளில் நம்பிக்கைகள், சடங்குகள், சிக்கல்கள், தீர்வுகள், துறவுநிலை ஆகியவற்றை மதிப்புகளாக வகைப்படுத்தலாம். இதேபோன்று அழகுணர் மதிப்புகள் இலக்கியங்களில் உள்ள எழுத்து, சொல், பொருள் ஓசை நயம் இவற்றின் அடிப்படையில் செய்திகளைச் சேகரிக்கலாம். பண்பாட்டு மதிப்புகள் காதல், வீரம், புகழ், நட்பு, பண்பு, சுற்றம் பேணல், விருந்தோம்பல் ஆகியவற்றை விரித்துரைக்கும். மதிப்புகளை வகைப்படுத்தி அட்டவணை மூலமாகவும் வரைபடங்கள் மூலமாகவும் காட்சிப்படுத்தலாம்.

## இறுதியாக

தமிழில் உள்ள பல்வேறு நூல்கள் என்றும் வாழும் இலக்கியங்களாக உள்ளன. ஒரு கலைப்படைப்பு அதன் அமைப்பிற்கும் நோக்கிற்கும் தேவையான எல்லாப் பண்புகளையும் முழுமையாகப் பெற்றதாக இருக்க வேண்டும். இதனைத் தன்னிறைவுப் பண்பு என்பர். இலக்கியத்தின் பொதுப் பண்புகளும் தன்னிறைவு என்பது இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. அதாவது வடிவத்தாலும் உள்ளத்தாலும் முழு நிறைவானதாக அமைவது இலக்கியம். இலக்கியங்கள் மதிப்புகளை அறிவுறுத்துவதோடு அதனைச் செயல்படுத்தவும் செய்கிறது. நிலைபேறில்லா உலகில் நிலைபெற்று வாழ்பவை மதிப்புகளாகும். இவை பல மாற்றங்களுடன் காலம் கடந்து வாழும் ஒழுகலாறுகளாகும்.

## குறிப்புகள்

1. நர்மதாவின் தமிழ் அகராதி, ப.721.
2. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.807.
3. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப.362.
4. திருமகள் தமிழ் அகராதி, ப.757.
5. சே.ச.தனராசு, தமிழ் இதழ்களில் மதிப்புகள், ப.13.
6. மேலது, ப.13.
7. J.B.Chitambar, Intordュctory Rural Sociology, pp.250-251. "Attitudes held up society that define what society considers correct and of relative importance are referred to as social values".
8. B.S.Sanyal, Culture: An Introduction, p.45. "Values are subjects attitude to objects".
9. F.J.Woods, Introductory Sociology, p.205. "……general enduring preferences that govern behavior and decision indaily life".
10. I.A.Richards, Principles of Literary Criticism, p.48 "Anything is valuable which will satisfy an appetency without involving the frustration of some equal or more important appetency".

ISSN : 2581-9712

11. Alvin L.Bartrand, Rural Sociology, p.35. "……effectively charged preferences constitute values".
12. Jack R.Frankel, How to teach about values, p.14. "The ideas and behavior considered proper or 'good' constitute the society's values".
13. L.Broomand P.54. "…….A widely held belief or sentiment that some activities, relationship, feelings or goals are important to the community's identity and well being".
14. Raymond W. Mack and Kimball Young, Sociology and Social Life, p.58. "Values are assumptions, both conscious and unconscious of what is right and important".
15. Paul Roubiczek, Ethical values in the age of Science, pp.219-220. '…(A value) provides him (the subscriber) with guidance for his behavior … Values do not exist intime and space, but are established by judgements. They therefore contain both subjective and objective elements".
16. Jack R. Frankel, How to teach about values, p.11. "The definition of values as being both emotional commitment and ideas worth of things… they have both congnitive and effective components".
17. J.H.Fichter, Sociology,pp.258-259.
18. கல்பனாதாசன், மகாத்மா ஒரு மார்க்சிய மதிப்பீடு, ப.17.
19. Kurt Baier and Nicholas Rascher, Values and the Future, p.56. "The community is ready to modify these habits and attitudes (values) in the face of what they would themselves recognize as very strong evidence to the effect that these resource allocations do not confer the expected benefits".
20. Paul. Rcubiczek, Ethical values in the Age of Science,p.241.
21. சேதுமணி மணியன், தமிழ்நாவல்களில் மதிப்புகள், ப.21.
22. சே.ச.தனராசு, தமிழ் இதழ்களில் மதிப்புகள், ப.6.
23. Kurt Baier and Nichoas Rescher, Values and the Future, pp.92-95.
24. ஈ.கோ.பாஸ்கரதாஸ், சங்கப்பாடல்கள் உணர்த்தும் நிலைபேறுடைய மானுட மதிப்புகள், ப.76.
25. மேலது, ப.76.
26. சேதுமணி மணியன், தமிழ் நாவல்களில் மதிப்புகள், ப.18.

************************************

ISSN : 2581-9712



# மாணிக்கவாசகரின் உவமைத்திறன்

**முனைவர் வா.வெ.கோவிந்தம்மாள்**
உதவிப்பேராசிரியர்,
சாரதா கங்காதரன் கல்லூரி,
புதுச்சேரி.

**முன்னுரை**

சைவச் சமயம் பழமையானது. சிவமென்றால் செம்மை, நன்மை எனப் பொருள்படும். சிவம் அன்பை வளர்த்ததால் அன்பே சிவமாயிற்று. தென்னாடுடைய சிவனை எந்நாட்டவருக்கும் உரியவராக நாயன்மார்கள் கண்டனர். அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகவும், சைவசமயக் குரவர் நால்வருள் ஒருவராகவும் திகழ்பவர் மாணிக்கவாசகர். இவர் இயற்றிய திருவாசகம் பன்னிரு சைவத்திரு முறைகளில் எட்டாம் திருமுறையாகப் போற்றப் பெறுகிறது. கற்பவர் அனைவரையும் உருகவைக்கும் தன்மையுடைய திருவாசகத்தில் காணப்பெறும் உவமைகளைப் பற்றிக் கூறுவதையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**திருவாசகம்**

இந்நூல் சிவபுராணம் முதல் அச்சோபதிகம் வரை 659 பாடல்களும் 51 தலைப்புகளையும் கொண்டது. சிவபெருமானே மனித வடிவில் வந்து திருவாசகம் முழுவதும் எழுதியதாகக் கூறுவர். இந்நூலில் உள்ள பாடல்கள் கருங்கல் மனதையும் கசிந்துருகச் செய்யும் தன்மையுடையது. அதனால் சிறப்பு நோக்கி 'திருவாசகத்திற்கு உருகார் வேறு ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பர். இந்நூலைப் பற்றி சிவப்பிரகாச சுவாமிகள் 'பாவெனப்படுவது உன்பாட்டே' என்று கூறியுள்ளார். தமிழில் திருக்குறளுக்கு அடுத்து அதிகமாக உரை காணப்பட்ட நூல். இந்நூல் பக்தியை மட்டுமல்லாமல் பக்தியின் ஊடாக உவமையைக் கூறி விளக்கிச் செல்லும் பாங்கு சிறப்புடையது.

**மாணிக்கவாசகர்**

திருவாசகத்தை இயற்றிய மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் பிறந்தவர். அதனால் திருவாதவூரர் எனப் பெயர் பெற்றார். ஞானாசிரியனாகத் திகழ்ந்த இறைவன் வாதவூரருக்கு தீட்சாநாமமாக 'மாணிக்கவாசகன்' என்ற திருப்பெயர் சூட்டினார். அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர். அவ்வமயம் மன்னனால் 'தென்னவன் பிரம்மராயன்' என்னும் பட்டமளித்துப் பாராட்டப் பெற்றார்.

**கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல**

மாணிக்கவாசகர் இறைவனை, மலரில் மணம்போல் நுட்பமாய் விளங்கும் பெருமானே. தொலைவிலும் அருகிலும் இருப்பவனே. சொல்லும் மனமும் கடந்து நின்று மறைபொருளாய் இருப்பவனே. சிறப்பான அடியார்களின் மனதில் அப்பொழுதுதான் கறந்த பால் கன்னலொடு நெய்யும் கலந்தாற்போல இன்பமானது

ISSN : 2581-9712

பரந்தும் மிகுந்தும் விரிந்தும் நின்று, எடுத்திட்ட பிறப்பை ஒழிக்கின்ற எங்கள் பெருமானே என்கிறார். இதனை,

"நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழியநின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந் தாற்போலச்
சிறந்த அடியார் சிந்தனையுள் தேன்ஊறிநின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்." (சிவபுராணம்: 44–48)

என்ற பாடலில் மலர் அரும்பாய் இருக்குங்கால் மணம் பெறாது. அரும்பு மலர்ந்து மலரென்று பெயர் பெறும் போது மணம் வீசுகிறது. அதைப்போல ஆன்மாவும் பக்குவப்பட்ட மனம் கழிந்த பின்னர்ச் சிவமனம் கொள்ளும். பூவின் மணம் அமைந்தது போல் சீவனுக்குள் சிவமனம் மலரும். அன்பற்றவர்களுக்குத் தொலைவிலும் அன்புடையவர்களுக்கு அருகிலும் இருப்பவன். கறந்தபால் தூய்மையாகவும் இனிமையாகவும் இருக்கும். குழந்தை முதல் முதியோர் வரை அனைவருக்கும் நன்மை தரும். கன்னலும், நெய்யும் மேலும் சுவை தருவது. அதைப்போலத் திருவைந்தெழுத்தும் சேய் முதல் முதியோர் வரை அனைவருக்கும் உயர்வான நிலையைத் தரும்.

பாலில் இருந்து தயிர், மோர், வெண்ணை, நெய் போன்ற ஐந்து பொருட்கள் கிடைக்கின்றன. அதில் பால், தயிர், வெண்ணை அழிதல் போல மும்மலங்களான ஆணவம், கண்மம், மாயை அழிந்து இறைவனைச் சேர இணையடிகள் உதவுகின்றன எனப் பக்தியை உவமை மூலம் எளிமை படுத்தியுள்ளார்.

**தாய் – நாய்**

மாணிக்கவாசகர் தன்னை நாயெனவும் இறைவனைத் தாய் எனவும் குறிப்பிடுகிறார்.

"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே" (சிவபுராணம், 60–60)

தாய், சேயான கருவைப் பத்து மாதங்கள் வயிற்றில் சுமக்கிறாள். தன் இரத்தத்தைப் பாலாய் ஊட்டி வளர்க்கிறாள். தான் ஈன்ற சேய் நெறியில்லா நெறி கொள்ளின் சீ என வெறுத்து ஒதுக்குவாள். இது உலக இயற்கை. ஆனால் தான் ஆணவ நிலைகொண்டு விலங்கு மனத்தால் உழன்றிட்ட போதும் அவன் என்னை ஆட்கொண்டான் என்று கூறுகிறார். இங்குச் சேய் நிலைமாறினும் தாய் நிலைமாறவில்லை. என்றும் மாறாதது இறையருள். தாய்ப்பாசத்திலும் மாறாதது என இறைவனைத் தாய்க்கு உவமையாகக் கூறுகிறார்.

**மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடர்**

மாசில்லாத மனத்தில் மலர்ந்த மலர்ச்சுடரே, தேசனே, குருமூர்த்தியே, தேனே, ஆரமுதே, சிவபுரனே, ஆசிரியனே, கருணையில் பெரும் வெள்ளப் பெருக்கைப் போன்றவனே, தெவிட்டாத அமிழ்தமே, என் கல் போன்ற மனதை நீர் போல உருகச் செய்பவனே,

"மாசு அற்ற சோதிமலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே..
நீராய் உருகிஎன் ஆருயிராய் நின்றானே" (சிவபுராணம்: 62–69)

இவ்வடிகளால் இறைவன் மாசு மறுவற்ற சோதிப் பிழம்பினன், எல்லாவற்றையும் தீ

ISSN : 2581-9712

அழிப்பது போல இறைவனிடம் சென்றால், ஆணவமும் மலமும் அழியும், தீச்சுடர் கண்களுக்கு மலர் போலக் காட்சி தருவதால் 'மலர்ச்சுடர்' என இறைவனை உவமிக்கிறார் மாணிக்கவாசகர்.

**பேராற்றின் வெள்ளம்**

இறைவன் ஆற்று வெள்ளம் போன்றவன், நிலையாய் விளங்கும் பூமி போன்றவன், கூற முடியாத நுண்ணுணர்வாய் அறிவாய் உள்ளவன். இதனை,

"ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற

தோற்றச்சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்" (சிவபுராணம்: 79–80)

மாணிக்கவாசகர் இறைவனை ஆற்றின் வெள்ளம் போல் நீ காட்டும் கருணை அளவிட முடியாதது. எனக்கு அப்பனாய், மேலானவனாய் தோற்றத்தில் சுடர் ஒளியைப் போன்று இருப்பதாக உவமை கூறுகிறார்.

**ஊற்றுநீர் போன்றவன்**

அடியார்களின் நிலைக்கேற்ப வேறுபட்டு விளங்குபவன் இறைவன். இதனை,

"ஊற்றான உண்ணார் அமுதே உடையானே" (சிவப் புராணம்: 83)

என்ற அடியின் மூலம், அடியவர்களின் வெவ்வேறு நிலைக்கேற்ப வடிவங்கொண்டு மாறுபட்டு அருள் புரிபவன். வடிவங்கள் மாறுபாட்டினும் அறிவாய் நிற்பது இறைவனே. பட்டறிவு என்பது ஊற்று நீரினை ஒத்தது. இது புதிய நிலையில் ஊறிவரும் நீர். இது பழகுதற்கு இனியது. அமிழ்தத்திற்கு இணையானது என்கிறார் மாணிக்கவாசகர்.

**கிஞ்சுகவாயவள்**

இங்கு உமையம்மையின் இதழ் உவமையாக்கப்படுகிறது.

"கிராத வேடமொடு கிஞ்சுகவாயவள்"(கீர்த்தித்திரு அகவல்– 15)

என்ற அடியில் இறைவன் வேடவுருவத்துடன் முள்முருங்கைப்பூப் போன்ற உதட்டினை உடைய உமையம்மையோடு இருக்கிறார் எனக்கூறுகிறார் மாணிக்கவாசகர்.

**எய்ப்பில்வைப்பானவன்**

இறைவன் மேல் விருப்பமுடைய காதலர்க்கு உழைக்கும் காலத்தே பிற்காலத்திற்காகச் சேர்த்துவைக்கப்படும் நலநிதி போன்றவன்.

"காதலர்க்கு எய்ப்பினில்வைப்பு வாழ்க" – (திருஅண்டப்பகுதி, 1 – 5)

இறைவன் காதலர்க்கு இளைத்த காலத்தில் வைத்த சேமநிதி போன்றவன் என எக்காலத்திலும் எல்லோருக்கும் ஏற்ற விதத்தில் உதவி செய்பவன் என்கிறார் மாணிக்கவாசகர்.

**தழலது கண்டமெழுகு**

தீயிடைப் பட்ட மெழுகு போல மனமானது உருகி வணங்கி அழுது உடல்நடுங்கி அழுததாக மாணிக்கவாசகர் கூறுகிறார்.

"தழலது கண்ட மெழுகது போலத்

தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்து" – (போற்றித் திருவகவல், 60–61)

இங்கு அழல் என்பது அன்பிற்குவமை. அழல் சுடும் தன்மையுடையது. வெப்பம் தாங்காது மெழுரு உருகுதல் போன்று உடல் தொழுது உருகல். தொழுதல் உடலின் செயல். உருகல் மனதின் செயல். அழுதல் என்பது மகிழ்வால் செய்வது அறியாது நிற்றல். கம்பித்து என்பது இன்பநிலை மீதூர

ISSN : 2581-9712

மெய்யில் உண்டாகும் மெய்ப்பாடு. தனக்கும் தன் உணர்வுகளுக்கும் அழலையும் மெழுகையும் உவமையாகக் கூறுகிறார் மாணிக்கவாசகர்.

**பசுமரத்தாணி**

இடையறாத அன்பால் பசுமரத்தில் அடிக்கப்பெற்ற ஆணியைப் போல மனநெகிழ்ச்சி பெருகியதாகக் கூறுகிறார்.

"பசுமரத்துஆணி அறைந்தாற்போல" – (போற்றித் திருவகவல் – 65)

பசுமையான மரத்தில் ஆணி அடித்தல் மிக எளிது. அடிக்க அடிக்க ஆணியும் மரத்தினுள் செல்லும். அப்போது சற்று நீரும் வரும். அடிக்கப்பட்ட ஆணியைப் பின்னர் மீண்டும் எடுத்தல் என்பது மிகமிக முடியாத ஒன்று. 'இளமையில்கல்' என்பது போலப் பசுமரத்தாணி நீண்ட நினைவு பெறும். பசுமரத்தில் ஆணியை அடித்தல் எளிதாதல் போல, இளமையில் கருத்துகளைச் செலுத்துதல் எளிது. அடித்த ஆணியை மீண்டும் எடுக்க முயலுதல் அரிது. மனமாகிய மரத்தில் அருள் என்னும் ஆணியைத் திருவருள் என்னும் சம்மட்டியால் அடித்துக் கொள்ளல் வேண்டும் என்கிறார் மாணிக்கவாசகர்.

**பள்ளம் தாழ் உறுபுனல்**

நீரின் தன்மை கீழ் நோக்கிப் பாயும். அதுபோல என்நெஞ்சம் இறைவனை நோக்கிப் பாய்கிறது என்பதை,

"பள்ளம்தாழ் உறுபுனலில் கீழ்மேல்ஆகப்..

கண்இணையும் மரம்ஆம் தீவினையினேற்கே". (திருச்சதகம் – 1– 25)

என்ற பாடலில் இறைவனின் பல்வேறுபட்ட திருநாமங்களைக் கேட்ட அளவில் அடியார்கள் பள்ளம் தாழ் உறுபுனலில் பாய்வது போல மகிழ்ந்தனர். கண் இணையும் மரம் என்ற கூற்றில் உலோகப் பொருள்கள் உருகும். எவ்வளவு அதிகச் சூடேற்றினாலும் கல் உருகாது. எத்தனை நாள் நீரினுள் கிடப்பினும் கசியாது. எனவே நெஞ்சினைக் கல்லாக உவமை படுத்தியுள்ளார் மாணிக்கவாசகர்.

**இரும்பின் பாவை**

என் தலைவனாகிய இறைவனே உன்னை இரும்பால் செய்யப்பட்ட பாவை போன்ற யான், பாடிடேன் நின்று ஆடிடேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

"ஆட்கொண்ட எம்பிரான் ஆனாய்கு இரும்பின்பாவை

ஆனைய நான்பாடேன் நின்றுஆடேன் அந்தோ" (திருச்சதகம் – 26)

என்ற பாடலில் இரும்பினால் செய்த பாவையை ஓடுகின்ற ஆற்று வெள்ளத்தில் இட்டால் அப்பாவை கீழே அழுந்திடும். விரைந்து செல்லாது. விரைந்து செல்லும் ஆற்றின் நீர் வழியை அறியாமல் இட்ட இடத்திலேயே கீழே விழுந்து மண்ணுடன் அமையும். இரும்பைப் போன்ற கடிய நெஞ்சம் கொண்ட யானும் உன் இனிய புகழைப் பாடாமலும் செவிமடுக்காமலும், உன் திருப்பெயரினைக் கேட்டு ஆனந்தக்கூத்து ஆடாமலும் இருக்கின்றேன் என இரும்பின் பாவையைக் கல்லான மனத்திற்கு உவமையாகக் கூறுகிறார்.

**செந்தாமரைக் காடானவன்**

செந்தாமரைக் காட்டினை ஒத்த திருமேனி கொண்டவனே,

"தந்தனை செம்தாமரைக்காடு அனையமேனித்

தனிச்சுடரே இரண்டும் இல்இத்தனிய னேற்கே" – (திருச்சதகம் – 5)

ISSN : 2581-9712

இறைவனின் திருமேனி மட்டுமல்லாது பிற உறுப்புகளும் தாமரையின் வண்ணத்தையும் பொலிவினையும் ஒத்திருத்தலால் தாமரை காடனைய மேனி என்றார். ஓம் என்ற சொல் செம்மையின் விளக்கம். எப்பொருளாயினும் நாள் பலவாயின் புழு பூச்சிகள் தோன்றும். செம்மையாய் விளங்கும் தீயை எதுவும் சென்று அணைய முடியுமோ? எனவே சிவன் பெருஞ்சுடராக விளங்குகிறார் என்கிறார் மாணிக்கவாசகர்.

**மத்து இடு தயிர்**

பெண்களைக் கண்ட மாணிக்கவாசகரின் மனம் மத்திட்டுக் கடையப்படும் தயிர் போலக் கலங்குகிறது என்கிறார். இதனை,

"மான் நிலாவிய நோக்கியர் பதரிடை
மத்து இடு தயிர் ஆகித்"
(திருச்சதகம் – 44)

மானின் பார்வைபோல் விளங்கும் மகளிரின் வஞ்சக ஒழுக்கத்தால் மத்திட்டுக் கடையப்படும் தயிர் போல் என்மனம் கலங்குகிறதே எனத் தன்மதியீனத்தை எண்ணி வருந்துகிறார்.

**இரு கை யானை**

இரண்டு கைகளையுடைய யானையை ஒத்து இருந்தும் மனத்திலுள்ள மூலப் பொருளாகிய தலைவனை நான் காணவில்லை என்கிறார். இதனை,

"இரு கை யானையை ஒத்து
இருந்தது என் உளம்" (திருச்சதகம் – 45)

இரண்டு கைகளைக் கொண்டு யானை வயிறு உடையான் இவன் என்று என்னைப் பிறர் பழித்துப் பேசும் நிலைக்கு ஆளாகிச் செய்ந்நன்றியையும் மறந்து அறிந்தறிந்து யானை, பாகனையே கொல்லும் என்ற பழஞ்சொல்லுக்கு ஏற்பப் பாகனான உன்னை மறந்து வாழ்கின்றேன். இரு கை யானை என்பது இல்பொருள் உவமையாகும்.

பெரிய கையுடைய 'யானைத் தன் தலையிலேயே மண்ணைப் போட்டுக் கொள்ளும்' என்ற பழமொழிக்கேற்ப இறைவனை எண்ணாமலும், எண்ண முயலாமலும், யானைத் தன் உடல்மேல் மண்ணைத் தூவி மாசாக்கிக் கொள்வதுபோல், இவரும் பொறியெனும் மண்ணால் உடலை மாசாக்கி அதனால் துன்புறுகிறேன்' என்கிறார் மாணிக்கவாசகர்.

**முடிவாக**

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் இறைவன் மீது கொண்ட பக்தியை மட்டும் கூறாமல் உவமைகளாக, கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற்போல, தாய் – நாய், மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடர், பேராற்றின் வெள்ளம், ஊற்றுநீர் போன்றவன், கிஞ்சுகவாயவள், எய்ப்பில்வைப் பானவன், தழலது கண்ட மெழுகு, பசுமரத்தாணி, பள்ளம் தாழ் உறுபுனல், இரும்பின் பாவை, செந்தாமரைக் காடானவன், மத்து இடு தயிர், இரு கை யானை போன்றவற்றைக் கூறியுள்ள நயம் போற்றத்தக்கது. உலகத்தில் உள்ள உயர்வான பொருள் ஒவ்வொன்றிலும் இறைவனைக் கண்டுள்ளார். கீழான பொருள்களுக்கெல்லாம் தன்னை உவமையாகக் கூறியுள்ளார். கவிஞன் இயற்கையோடு வாழ்பவன் என்பதை உணர்த்தினாலும், பக்தியை உவமைகளைக் கூறி மனம் கவரும் வண்ணம் எழிலுறக் கூற முடியும் என்பதை வெளிப்படுத்தியுள்ளார் மாணிக்கவாசகர் என்பதை அறிய முடிகிறது.

******************************

ISSN : 2581-9712



# வேள்பாரி புதினத்தில் சுற்றுச்சூழலியல் மரபறிவு

**முனைவர் ச.அருள்செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோவை.

**ஆய்வுச் சுருக்கம்**

நிலம், இயற்கை, பண்பாடு, நீதி, விழுமியங்கள் யாவும் பண்டமாகமாறிக் கொண்டிருக்கும் சூழலில் இயற்கைப் பாதுகாவலனான வேள்பாரியின் வரலாறு மீளாக்கம் செய்யப்பட்டுப் புதினமாக வெளிவந்திருப்பது சமகாலத்தின் தேவையாகும். எண்ணற்ற இனக்குழுக்கள், அவர்களின் அடையாளங்கள், நம்பிக்கைகள் குறித்துப் பரவலாக உணர்த்தும் சங்க இலக்கியம் ஒரு கட்டத்தில் வேந்தர்கள், வேளிர்கள் என்ற புள்ளியில் நிற்கிறது. அதன்பின் வேளிர்களை வென்று வேந்தர்கள் நிலைகொள்கின்றனர். இரு சமூக அமைப்புகள், அவை உருவாக்கிய விழுமியங்களுக்கிடையே பலநூறு ஆண்டுகளாக நிகழ்ந்த மோதல்களைச் சங்க இலக்கியப் பரப்பெங்கும் பார்க்க முடியும். இம்முரண்பாடுகள் கடுமையோடு மோதிய நிகழ்வின் பேரடையாளம்தான் வேளிர் பாரி. தமிழரின் நாகரிகம், சிந்தனைமரபு, இயற்கை அறிவு, இலக்கிய நுண்திறன், வீரம். மரபறிவு, எனப் பெரும் வரலாற்று பதிவை வேள்பாரி புதினமாகப் படைத்தளித்துள்ளார் சு.வெங்கடேசன். பறம்பு மலையினத்தவரின் சுற்றுச் சூழலியல் மரபறிவைப் புதினப் பரப்பின் பன்முகச் சூழலில் ஆராய்ந்தறிவதே நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

பறம்புமலை, இனக்குழு, வேள்பாரி, குலநாகினி, மரபறிவு, காடறிதல், தாவர அறிவு, விலங்கியல் மரபறிவு, சுவைப்புல், இனக்குழு உயிரியல்.

**முன்னுரை**

பறம்பு மலையையும், மலையினத்து மக்கள் அனைவரையும் கண்போல் காத்தவன் வேள்பாரி. அவன் வேளிர் குலத்தலைவனானதால் வேள்பாரி எனப் புகழப்பட்டான். சங்ககால வள்ளல்கள் மற்றெவரையும் விடச் சிறந்த வள்ளல் தன்மைக் கொண்டவன் பாரி எனத் தமிழ்ப் புலவர்கள் காலந்தோறும் போற்றியுள்ளனர்.

பாரியின் பறம்புமலையின் வளம், அதன் இயற்கையமைப்பு, அங்குக் கிடைக்கும் அளவற்ற செல்வங்களைக் கவர நினைத்துப் படையெடுத்து நுழைந்த மூவேந்தர்களைத் தம்வீரத்தாலும், இயற்கையிடமிருந்து பெற்ற மரபறிவின் அனுபவ நுட்பத்தாலும் பறம்புமலையின் இயற்கையான அமைப்பையே அரணாக உருமாற்றிக் காவல் செய்யும் இனக்குழுவினரின் வாழ்வில்,

- ❖ குலநாகினிகளின் வழிகாட்டுதல்,
- ❖ தாவரம், விலங்குகளைப் பற்றிய பரந்துபட்ட மரபறிவு நுட்பம்
- ❖ மூலிகை மருத்துவ மரபறிவு
- ❖ காடறியும் பயிற்சி

ISSN : 2581-9712

- மலைவளத்தைக் காக்க உயிரைக் கொடுக்கத் துணியும் வீரம் நிறைந்த மக்களின் சுற்றுச்சூழலியல் மரபறிவை கண்டறியும் நோக்கத்துடன் இவ்வாய்வு கட்டுரை அமைகிறது.

**இனக்குழு உயிரியல் மரபறிவு**

நுவாடே – இனம்(Race) – மக்கள்(People) – பண்பாட்டுக்குழு(Cultural Camp)

'நுவாடே' எனும் சொல் ஆய்வுலகின் அண்மைக்காலப் பண்பாட்டுக்குழுவைக் குறிக்கும் மானிடவியல் புலம் சார்ந்த கலைச்சொல்லாகும்.

"தனித்துவமிக்க பண்பாட்டுக்குழுவினர் தம் சுற்றுச்சூழலில் உள்ள விலங்கினங்களை வகைப்படுத்தி வைத்துள்ளனர். இந்த விலங்கினங்களின்பால் அவர்கள் கொண்டிருக்கும் மரபுவழி அறிவை ஆராய்கின்ற அறிவியல் முறையே இனக்குழு விலங்கியல்'' (பக்தவச்சலபாரதி – இலக்கிய மானுடவியல்) ஆகும்.

இனக்குழு உயிரியல் (Ethnobiology) மனிதச் சமுதாயத்திற்கும் தாவரம் விலங்குகள் முதலிய உயிரினங்களுக்கும் இடையேயான தொடர்பினைக் குறித்து ஆராயும் பொருட்டு,

**இனக்குழு உயிரியல்**

1. இனக்குழு தாவரவியல்
2. இனக்குழு விலங்கியல்

எனும் உட்பிரிவுகளை இனவரைவியலாளர்களின் ஆய்வின் வழி அறிய முடிகின்றது.

பறம்புமலையின் ஆதிவாசிகளாக இனக்குழுமக்கள் குறிஞ்சி நிலத்தின் சுற்றுச்சூழலில் காணலாகும் தாவர, விலங்குகளோடு பிணைந்த வாழ்வியல் முறையினை அடிப்படையாகக் கொண்டு மரபுவழி அறிவுடன் அவற்றைக் கையாளும் திறன்களைத் தமக்குள் ஏராளமாகச் சேமித்து வைத்துள்ளனர்.

**இனக்குழுத் தாவரவியல் மரபறிவு**

பழங்குடியினச் சமூகத்தில் வேளிர்குல இனக்குழுவில் பெண்ணின் தலைமைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதை வேள்பாரி புதினம் உணர்த்துகின்றது.

பறம்புமலையில் பருவகாலங்களின் தன்மையறிந்து முன்னெச்சரிக்கையுடன் காலங்காலமாகப் பறம்பு மலைப்பகுதிகளையும், மக்களையும் காத்து வருபவர்கள் குலநாகினிகள். வேளிர்குல ஆண்கள் எல்லோரும் விலங்குகளை வேட்டையாடவும் வெளியுலக மனிதர்களிடமிருந்து தற்காக்கவும் வல்லமை படைத்தவர்களாக இருப்பர்.

புல்பூண்டில் இருந்து இலையின் முனைக்கு வந்து இருகால்கள் நீட்டி எட்டிப்பறக்கும் எறும்புகள் முதல் பறம்புமலையின் தாவர, விலங்குகள் எனப் பல்லுயிரிகளைப் பற்றிய மரபறிவினை வயதில் மூத்த பழங்குடியினைச் சார்ந்த வேளிர் இனக்குழுப் பெண்களான குலநாகினிகள் நன்கறிந்து இருந்தனர். இதனை,

'எங்களின் மூதாயின் குரலுக்குக் குலமே அஞ்சும். குலநாகனி நாகப்பச்சை வேலியை ஆட்சி செய்பவள் வேளிர்குல பெண்களால்தான் இவ்வளவு நுட்பமான ஒரு வேலியைக் கட்டியமைத்துக் காப்பற்ற முடியும். அவர்களின் சொல்கேட்டுத் தாவரங்கள் தழைக்கும், தலையாட்டும், அவர்களின் உடம்பில்தான்

ISSN : 2581-9712

கொடிக்குலத்தின் ரத்தம் ஓடுகிறது" என்று வேள்பாரி கபிலரிடம் எடுத்துரைக்கின்றான்.

**ஒலிவலையில் பறம்புமலைகாக்கும் குலநாகினிகள்**

நாகப்பச்சை வேலியையும் ஒளிவலையையும் ஆள்பவர்கள் குலநாகினியின் தலைமையிலான முதுபெண்களே. பறம்புமலையில் காட்டுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தக் கொம்பன் விளக்குகளைப் பயன்படுத்தும் நுட்பத்தை அவர்கள் அறிந்திருந்தனர். நாகக்கழிவும், நஞ்சுப் பிசினும் சேர்த்துத் தயாரிக்கும் கலவை கொண்டு விளக்கெரிப்பர்.

பந்தம் எரிவது திரியில் இருந்து மட்டுமல்ல, திரியோடு சேர்ந்து விளக்கின் விளிம்பும் கருகியபடி தீய்ந்து எரியும். அந்த வாசனையை ஊடறுத்துப் பூச்சிகளால் உள்நுழைய முடியாது. இதனையே ஒளிவலை என்பர்.

ஒவ்வொரு பருவகாலத்துக்கும் மாறுபடும் பூச்சியினங்களுக்கு ஏற்பக் கொம்பினில் தேய்க்கும் பசையும் மாறும். எண்ணெய்யின் சேர்மாணமும் மாறும். இதனை உருவாக்கும் குலநாகினிகள் அளவற்ற ஆற்றல் படைத்தவர்கள் என்று கபிலரிடம் பாரி எடுத்துரைக்கின்றான்.

"ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் சாமப்பூவினைக் காணும் கார்காலத்தில் பறம்புமலையில் காடறிய புறப்படும் சடங்குகள் நடக்கும். குலநாகினி மலைவேம்பின் இலையில் சாறெடுத்து அடித்தொண்டையில் ஊற்றும் நிகழ்வுதான் காடறிதலின் தொடக்கம்" காடறிதல் பயிற்சியில் உடல், மனதை ஒருமுகப்படுத்த இச்சாற்றினைக் குலநாகினிகள் செய்து தருவர்.

**இனக்குழு விலங்கியல் அறிவு**

விலங்கினங்கள் மனிதனோடு பல தளங்களில் நெருக்கமான உறவுடையன, அவை பற்றிய பறம்புமலை இனக்குழுவினரின் மரபுவழி அறிவியல் வியக்கத்தக்கது. பறம்புமலைவாழ் பழங்குடியினப் பெண்கள் இனக்குழு விலங்கியல் அறிவுடன் விலங்குகளைக் கையாளும் பல உத்திகளை அறிந்திருந்தனர்.

மதயானையொன்று கட்டடங்களை முட்டிச்சாய்க்கவும் மரங்களைப் பிடுங்கி எறிந்து சூறையாடிக் கொண்டு இருந்தது. சிறிய மண்வீடுகளை இடித்துத்தள்ளிச் செம்மண் குழைத்துக் கட்டப்பட்ட அரண்மனை கோட்டைச்சுவறை தாக்க விரைந்துவந்து கொண்டிருந்தது. மதயானையின் பிளிறல் பேரச்சம் தருவதாக இருந்தது. பறம்புமலையின் பழங்குடிப்பெண் அச்சமின்றி யானையை நோக்கி வேகமாக நடந்து வந்தாள். அவள் கையில் ஒரு செடி ஒன்றை வைத்திருப்பது தெரிந்தது.

பெரும்படையையே சிதறடித்த வெறிகொண்ட யானையை நோக்கி, கையில் இருந்த செடியை நீட்டியபடி மதயானையை நெருங்கினாள். மதயானையின் வேகம் குறைந்தது. மேய்ப்பவன் முன் ஆடாத யானை அவளின் சொல் கேட்டுப் பணிந்தது. கரந்தைச் செடியின் வாசனையை நுகர நுகர அதன் மதம் ஒடுங்கிப் பின்வரத் தொடங்கியது. அவள் தன்னந்தனியாகச் சிறு குச்சியைக் கொண்டு யானையை விரட்டி மலையில் ஏற்றிவிட்டாள்.

வெங்கல் நாட்டு வேந்தன் அப்பெண்ணிடம், "பலநூறுபேரின் உயிர்காத்த தேவி நீ என்றார். எங்களின் உயிரைக் காப்பாற்றிய அவளின் காலடியில் பணிந்து பறம்புக்கும் பறம்பின் மக்களுக்கும்

ISSN : 2581-9712

எதிராகச் சிறு தீங்கும் நாங்கள் என்றும் செய்மாட்டோம் என்று சத்திய வாக்கு அளித்தார்''(வேள்பாரி – சு.வெங்கடேசன்) என்று குலசேகரப் பாண்டிய மன்னனிடம் மையூர் கிழார் என்பவர் கூறிய நிகழ்வின் மூலம் சமயப்பொருத்தமாகத் தாவரத்தைப் பயன்படுத்துகின்ற அப்பழங்குடியினப் பெண்ணின் மரபறிவினை உணரமுடிகின்றது.

### காட்டெருமையை வீழ்த்தும் மரபறிவு

பறம்புமலையின் இளைஞர்கள் காட்டெருமையை வீழ்த்தி வீரத்தை வெளிப்படுத்திப் பெண்ணை மணப்பது திறையர் குல வழக்கமாகும்.

சூலிவேள் எனும் இளைஞன் திரையர்குலப் பெண்ணான தூதுவையை மணக்க விரும்பிக் காட்டெருமையை அடக்க நினைக்கின்றான். ஆனால் அதற்கான எந்தவொரு பயிற்சியும் எடுக்காத சூலிவேளிற்கு பழங்குடி முதுப்பெண் சரியான உத்தியைக் கூறுகின்றாள்.

"காட்டுக்கோழியின் காலின் பின்புறம் சிறுவிரல் ஒன்று இருக்கும் அதைப்போலவே காட்டெருமையின் பின்னங்கால் குளம்பின் பின்புறம் சிறுதசை ஒன்று வளர்ந்திருக்கும். சரியாக அந்தத் தசையை அடித்து விட்டால், அதன் பின்னங்கால் நரம்புகள் இழுத்துக்கொள்ளும். அதனால் காலை நகர்த்த முடியாது. இருந்த இடத்தில் இருந்து தான் போராடும். அதன் பிறகு ஆயுதம் கொண்டு எருமையை வீழ்த்திவிடலாம்'' என்று குறிப்பு சொல்லி உதவுகின்றாள்.

தனி ஒருவனாகக் காட்டெருமையை வீழ்த்தி மலை முகப்பில் இருக்கும் வெற்றிலையைப் பறித்து மந்தைக்கு வந்து சேரும் வீரனைத்தான் திரையர் குலப்பெண் ஏற்றுக்கொள்வாள் என்ற வழக்கத்தின்படி சூலிவேள் ஆண் வெற்றிலையைப் பறித்து வந்து ஊர்மக்களின் நடுவே வைத்தான். பொழுது மறைவதற்கும் எதிர் வெற்றிலையை ஊர் வட்டிலில் வைக்கவேண்டும் என்பது மரபு. வெற்றிலையை வைக்கவேண்டிய இடத்தில் அமர்ந்து ஆடையை லேசாக விலக்கி, தோளில் இருந்த கரும்பச்சை நிறமுடைய வெற்றிலை வடிவ மச்சத்தைக் காட்டினான்.

திரையர்களுக்கு இணையான வீரன் என்பதைச் சூலிவேள் மெய்ப்பித்து விட்டான். ஆகவே அவர்கள் இருவரின் விருப்பத்தை ஊர் ஏற்றது. காட்டெருமையோ, வெற்றிலையோ பின்னால் இருக்கும் நரம்பில்தான் எல்லாம் இருக்கிறது என்று சொல்லிக்கொடுத்துச் சூலிவேள், தூதுவை இருவரின் திருமணத்திற்குப் பழங்குடி முதுமகள் தனது மரபறிவு நுட்பத்தினால் உதவுகின்றாள்.

### வீட்டு விலங்குகளைப் பாதுகாக்கும் மரபறிவு

செம்மலையைச் சேர்ந்த ஐந்து குடும்பங்கள் கால்நடைகளை வளர்க்க மேய்ச்சல் நிலம் நோக்கிக் கீழிறங்கிக் குடில் அமைத்துக் கால்நடைகளே தங்களின் தெய்வம் என்று வாழ்ந்தவர்கள் செம்பாதேவி குலத்தினர். ஐந்து குடும்பப் பசுக்களை அடையாளப்படுத்தச் சூட்டுக்குறி, காது அறுத்த குறிகளைப் போட்டு மணிக்கற்கள் கிடைக்கின்றன. குடும்பத்துக்கு ஏழு வண்ணம் என்று முடிவு செய்து அந்த வண்ணக்கல்லை குடும்பத்தின் மாடுகளுக்கும் நெற்றிப்பட்டமாகச் சூட்டும்படி மூத்த பழங்குடிப்பெண் கூறுகின்றாள்.

கிடைமாடுகளின் மேல் சிறு பூச்சிகளும் உண்ணிகளும் நிறைந்து கிடந்தன. அவற்றைக் கொத்தித்தின்ன எந்த நேரமும் பறவைகள் அவற்றின் மீதே அமர்ந்திருந்தன. இதனைத் தடுக்க அப்பழங்குடி பெண்கள் ஒரு வழியைக் கண்டறிந்தனர்.

மாடுகள் எந்த நிலையிலும் துன்பப்படக்கூடாது என்பதற்காக, “திரட்டப்பட்ட வெண்ணெய்யில் தானியங்களைக் கலந்து பெரிய வெண்சாந்து உருண்டையை உருவாக்கினர். அந்த உருண்டையை நாணல் கூடையில் வைத்துக் கிடையின் ஓரம் ஏதாவது ஓர் இடத்தில் வைத்துவிட்டால் பறவைகள் முழுக்க வெண்சாந்து உருண்டையைத்தான் மொய்த்துக்கிடக்கும். மாடுகளின் பக்கமே போகாது”.

பறம்புமலையின் பொதினிவாழ் வேளிர் குலத்தில், பூனையை மயங்கச்செய்யும், பூனை வணங்கிச் செடியைப் பயன்படுத்துகின்றனர். எலிகளுக்கு அருகில் இருந்தாலும் பூனை அதனைப்பிடிக்காமல் மயங்கி அமர்ந்துவிடும். பூனைவணங்கிச் செடியின் வாசனைப்பட்டு எலிகளுக்குத் தீனி வைக்கும் வழக்கமுள்ள பொதினிவாழ் வேளிர் குலமகளிர் இச்செடியைப் பயன்படுத்தி, பூனையை மயங்கச் செய்து விடுகின்றனர்.

**குறிஞ்சி நிலச்சுற்றுச் சூழலியலை நன்கறிந்த காடர்கள்**

பறம்பு மலையின் வளங்களைக் கொள்ளையிட மூவேந்தர்கள் பல திசைகளில் படையெடுத்து வருகின்றனர். பறம்பு மலையின் எந்த ஊரினை நோக்கிப் படையெடுத்து வரும் சோழமன்னனுக்கு உறுதுணையாக வரும் காடர்கள் பற்றிய முக்கியச் செய்தியினை அங்கவை பெருமரத்தின் மீது இருந்து பார்த்தறிந்து செய்திகளைப் பாரிக்கு தக்க சமயத்தில் தெரிவிக்கின்றாள். சோழப்படையுடன் திரண்டுவரும் காடர்களின் காதின் மேல் மடல்களில் மூன்று துளையிட்டிருந்தனர். என்று உதிரனிடம் கூறி அனுப்பியிருந்தாள் அங்கவை. சோழர்களுக்கு உதவும் இந்த இனத்தவர் யார் என்ற குழப்பத்திலிருந்த பாரிக்கு மனத்திற்கு மின்னல் ஒளி பாய்ச்சுவது போல இருந்தது அந்தச் செய்தி. எவ்வளவு முக்கியமான குறிப்பினை அங்கவை கூறியுள்ளாள்.

- காதுமடல்களில் மேல்நிலையில் மூன்று துளை இடுபவர்கள் – மேல்காடர்கள்.
- கீழ்ச்சதையில் இருதுளைகளை இடுபவர்கள் – கீழ்க்காடர்கள்
- காதின் நடுநரம்பின் ஒட்டிப் பெரிய துளை குறுங்காடர்கள் இடுவர்.

நீரினைப் பற்றிய பேரறிவு கொண்டவர்கள் காடர்கள் என்பதைப் பாரி அறிந்திருந்தான். சோழன் காடர்கள் மூலம் பாழிநகர் பற்றிய குறிப்பை அறிந்துள்ளான். கீழ்க்காடர்கள் நீர் சுரப்பைக் கண்டறிந்து கிணற்றை உருவாக்கியுள்ளனர்.

படையின் இருபுறங்களிலும் நெடுங்காடர்கள் அணிவகுத்து வருகின்றனர். குறுங்காடர்கள் கொடும் நச்சுப் பூச்சிகளைக் கையாளத் தெரிந்தவர்கள். நகரும் இப்படையை எளிதில் அழிக்க முடியாது. ஏனெனில் நெடுங்காடர்கள் அடர்மரக் கொம்புகளை ஒன்றோடொன்றாகப் பின்னித் தடுப்பரண்களை எளிதாக

ISSN : 2581-9712

அமைத்துவிடுவர். நெடுங்காடர் இருக்கும் வரை இப்படையைப் பக்கவாட்டில் இருந்து தாக்கி அழிக்க முடியாது, என்பதனை எல்லாம் உற்றுணர அங்கவை தந்த தகவலே பாரி எதிரிகளை வீழ்த்த உத்திகளை வகுக்க உதவியது.

**கருப்பன் இனக்குழுவின் கரும்பு விவசாய மரபறிவு**

மேய்ச்சல் வெளிதான் மனிதன் இயற்கையின் நுட்பத்தைக் கவனிக்கக் கிடைத்த முதற்பெரும் வாய்ப்பு. பறந்து அலையும் தும்பிகள் காலூன்றாப் புற்கள் எவை என்பது தொடங்கி, நீண்டிருக்கும் புல் நுனியில் செருகிநிற்கும் பனித்துளியின் கனம் வரை அனைத்தையும் குறிஞ்சி நிலத்து மக்கள் அறிவின் சேகரமாக மாற்றிக் கொண்டனர்.

கருநீல நிறமும் நெடுநீள்தோகையும் உடைய புல்லின் தண்டுப்பகுதியை ஒருநாள் தற்செயலாக்கக் கடித்துப்பார்த்த போது, அதன்சாறு இதற்கு முன் சுவைதிராத தித்திப்புடன் இருந்தது. சுவைக்கச் சுவைக்க இனிப்பு குறையாத புல்லைப் பற்றி தன் கூட்டத்தாரிடம் கூறியவுடன் அனைவரும் சுவைத்து மகிழ்ந்து 'சுவைப்புல்' என்றே அழைத்தனர்.

அந்தச் சுவைப்புல் தனது கணுக்களிலிருந்து முளைவிடுவது அறிந்து, கரணைகளாக அதை வெட்டிப் புதிய இடத்தில் நட்டுவைத்தனர். கரணைகள் தழைத்துப் பெரும் புற்களாகின. பலகரணைகளை ஒரே இடத்தில் பரவலாக நட்டுவைக்கச் சுவைப்புல் பெருங்காடென வளரத் தொடங்கியது. கருப்பன் குடியினர் அரியவகை சுவைப்புல்லைப் பயிரிட்டு வளர்க்கின்றனர் என்ற செய்தி பரவப் பலரும் அவர்களிடம் வந்து சுவைப்புல்லைக் கேட்டு வாங்கிச் சென்றனர். நாளடைவில் 'சுவைப்புல்' என்ற பெயர் நீங்கி, அந்தக் குடியின் பெயரால் கரும்பாபுல் என்றும், கரும்பென்றும் பெயர் விளங்கிற்று.

கருப்பன் குடியினர் கரும்பின் எண்ணற்ற நுட்பங்களைத் தங்களது பட்டறிவால் சேகரித்திருந்தனர். கணுக்களின் முகம் பார்த்துக் கரும்பின் சுவையைக் கணிக்கும் பேரறிவைப் பெற்றனர். புதிய நிலங்களில் எந்தவகைக் கரணைகளை நடவேண்டும் என்றும், எந்தவகைக் கரும்புகள் தித்திப்பின் உச்சம் எனவும் அவர்கள் துல்லியமாக அறிந்தனர்.

கரும்பஞ்சாற்றிலிருந்தும் இனிப்புக் கட்டியைக் காய்ச்சி எடுத்தனர். கருப்பன் இனத்தினர் அளவிற்குக் கரும்பினை விளைவிக்கும் மரபறிவு நிறைந்த உழவு நுட்பம் அறிந்த மனிதக் கூட்டம் வேறெங்குமில்லை.

**பஞ்சகாலத்தில் கிழங்குகளைத் தேடியறியும் நுட்பம்**

கடுமையான கோடைக்காலத்தில் மழையின்றி விளைச்சல் பாதித்தால், கொடும் பஞ்சகாலத்தில் கிழங்குகள் உணவாக அமைந்து மலைமக்களைக் காப்பாற்றுகின்றன. ஏழு வகை கிழங்குகள் பறம்பு மலையில் விளைகின்றன. நீரின்றிச் செடிகொடிகள் எல்லாம் செத்து மடிந்தாலும் மண்ணுக்குள் கிடக்கும் இந்தக் கிழங்குகள் மனிதனின் உணவுக்காக என்றென்றும் காத்ததிருப்பவை.

சித்திரவள்ளிக் கிழங்கு, காட்டு வள்ளிக்கிழங்கு வகையினைத் தவிர, நூரை, சவலன், நெடுவன், தீச்சி, நாச்சி, தும்பை, நூழி எனும் ஏழு வகையான கிழங்குகளைப் பற்றியும், அவை எந்தெந்த ஆழத்தில், எந்த மண் பகுதியில் விளையும் என்பதையெல்லாம் உணர்ந்தவர்களாக,

ISSN : 2581-9712

நிலம் அறிந்த இனக்குழுவினர், எளிதில் அடையாளம் கண்டு தோண்டி எடுப்பர்.

### மூலிகை மருத்துவ மரபறிவு

பச்சை மலைத்தொடரில் வியப்புறு கனியான கருநெல்லி மரங்கள் தென்பட்டதை, பாணர்களின் தலைவன் நாஞ்சிலன் என்பவர், வானியல் பேராசான் திசைவேழரிடம் கூறுகின்றான்.

கருநெல்லியை உட்கொண்டால் பகலிலும் விண்மீன்களைப் பார்க்கமுடியும். பறம்புக்குச் சென்றபோது நடுமலையின் முகட்டில் அந்த மரத்தைக் கண்டேன். பயிற்சி பெற்றவர்களால் மட்டுமே ஏற முடிகின்ற பெருமுகடு அது. அடுத்த முறை பறம்பு செல்கிறபோது பாரியிடம் கேட்டு அந்தக்கனியைக் கொண்டுவந்து உங்களுக்குத்தருவேன் என்றான். கருநெல்லியின் மருத்துவக்குணத்தை நன்கறிந்தவர்கள் பறம்பு மலையினர். பல நோய்களைத் தீர்த்து, உயிர்காக்கும் மருந்தாகவும், தெளிவான கண்பார்வையினை நல்கும் என்பதையும் அறிந்து வைத்திருந்தனர்.

### முடிவுரை

இயற்கையைப் பற்றிய மனிதப் பேரறிவு குறிஞ்சி நிலத்தின் இனக்குழுவினரிடம் சேமிக்கப்படுகிறது என்பதை வேள்பாரி புதினத்தின் வழி சு.வெங்கடேசன் நிறுவியுள்ளார்.

பறம்பு மலைவாழ் இனக்குழுக்கள் தாம் வாழும் இயற்கைச் சூழலோடு தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் இயல்புடையவர்கள். மலையும் மலை சார்ந்த இடத்தின் சுற்றுச் சூழலியலில் இருந்தே இயற்கையறிவு, தாவர, விலங்குகள் பற்றிய மரபறிவு ஆகியனவற்றைக் கற்றுக் கொள்ளும் வாழ்வினராக உள்ளனர்.

காடறிதல் பயிற்சி என்பது அம்மக்களின் வாழ்வின் நோக்கமாக அமைந்துள்ளது. சிறுவயதிலேயே காடுநோக்கிய பயணத்தைத் துவங்கிக் குழுவாக இணைந்து கற்றுக் கொண்ட, மரபறிவின் அனுபவத்தை மலை வளம் காக்கவும், மலையின் ஒவ்வொரு உயிரின் அசைவைக் கணிக்கவும் பயன்படுத்தும் பேராற்றல் வாயந்தவர்களாக உள்ளனர்.

- ❖ உணவுத்தேடல்
- ❖ மருத்துவம்
- ❖ விவசாயம்
- ❖ தற்காப்பு வித்தை
- ❖ ஆபத்தைக்காத்தல்
- ❖ தாவரவியல், விலங்கியல் மரபறிவு

எனும் பன்முகத்திறன்களைக் கற்றுக் கொள்வதற்கு, பறம்பு மலையின் சுற்றுச்சூழல் தகவமைப்பையே பயிற்சிக்களமாகக் கொண்டு வாழ்ந்ததால் சூழலியல் மரபறிவில் சிறந்து விளங்கினர் என்பதை இவ்வாய்வு கட்டுரையின் வழி அறியமுடிகின்றது.

### பார்வை நூல்கள்


1. பக்தவச்சலபாரதி – இலக்கிய மானுடவியல்.
2. முனைவர் ஞா. ஸ்டீபன் – இலக்கிய இனவரைவியல்.
3. சு. வெங்கடேசன் – வேள்பாரி.


********************************



## சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தலைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானோ?

**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**

ISSN:2581-9712